107

தமிழ் கற்கும் முறை

wor

(மொழியமைப்பு - மொழியியல்பு தழுவியது.)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 JAN 1948
MADRAS

ஆக்கியோன்:
ஆசிரியர் சா. வேதமுத்து,
விருதுநகர்.

பிரசுரிப்பவர்:
கி. பெ. சி. வ. பிரகாசம்,
நிர்வாகி,
பால குருகுல வித்யாலயம்,
விருதுநகர்.

1947.

T:3 (P31)
A148
11947

ரூ. 1—8—0

தமிழ் கற்கும் முறை

(மொழியமைப்பு - மொழியியல்பு தழுவியது.)

★

ஆக்கியோன்:

ஆசிரியர் சா. வேதமுத்து,

விருதுநகர்.

பிரசுரிப்பவர்:

கி. பெ. சி. வ. பிரகாசம்,

நிர்வாகி,

பால குருகுல வித்யாலயம்,

விருதுநகர்.

1947.

ரூ. 1—8—0

பதிப்புரிமை.

T:3 (P31)
N48

Printed at the
ANAṆDA PRESS, VIRUDHUNAGAR.
Q.H.R.49. Copies 1000 Dec. '47.

TAMIL NADU
111947

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS

முகவுரை

யான் போதனு முறை பயின்று ஆசிரியத்தொழிலில் ஈடுபட்டவுடன் எனக்கு முக்கியமாகத் தோன்றியது, நம்மிடம் படிக்கும் மாணவர்கள் தமிழ் மொழியில் திருந்திய அறிவு பெற்றவர்களாக விளங்க வேண்டும் என்பது.

இந்த என் குறிக்கோளை நிறைவேற்ற பல முயற்சிகள் செய்தேன். தமிழ் மொழியைப் போதிக்கும் முறைபற்றித் தமிழில் எழுதப்பட்டிருக்கும் புத்தகங்கள் எங்கு, என்ன விலையில் இருந்தாலும் அவைகள் அனைத்தையும் வாங்கிப் படிப்பது; முறை பற்றிய சொற்பொழிவுகள், மாதிரிப் பாடங்கள் எங்கு நடந்தாலும் அங்கு சென்று கேட்பது, பார்ப்பது; தாமாக முறைகள் வகுத்துச்சேர்ப்பது; பின் அவைகளில் சிறந்தனவாகத் தோற்றியவைகளை வகுப்பில் நடத்திப் பரிசோதிப்பது; இவைகள் என் முயற்சிகளில் ஒரு பகுதி.

இவ்வாருக படித்தவைகளிலும், கேட்டவைகளிலும், பார்த்தவைகளிலும், தாமாக வகுத்தவைகளிலுமிருந்து தெளிந்த முறைகள்: (1) காலஞ்சென்ற S. G. தானியேல் அவர்களின் வார்த்தையோடு தொடரும் எழுத்து முறை; (2) பஞ்சாப் மோகாப் பாடசாலையின் தலைவர் திரு "மக்கி" கண்ட வாக்கிய முறை; (3) திரு. சாவூர் அவர்களின் வார்த்தை முறை; (4) யான் தாமாக உண்டாக்கிய அசை முறை ஆகிய இவைகளே.

மேலே எடுத்துக்காட்டிய முறைகளையெல்லாம் ஒவ்வொன்ருய்க் கையாண்டும் யான் எதிர்பார்த்த அளவுக்கு என் மாணவர் தமிழறிவில் வளர்ச்சியடையவில்லை. அதனுல் என் மனம் சோர்ந்தது. இம்முறைகள் பயனற்றவை; வேறு முறைகள் காணவேண்டும் எனத் தீர்மானித்தேன்.

யான் இந்த நிலையில் இருக்கும் சமயம் என் தந்தையார் திடீரென இம்மண்ணுலக வாழ்க்கையை நீத்தார். அதனால் அவர் வாழ்க்கை வரலாற்றை, யான் கேட்டிருந்தபடி நினைவுக்குக் கொண்டுவரலானேன். அவர் படித்த விதம், அவருக்கிருந்த தமிழறிவின் சிறப்பு இவை ஞாபகத்துக்கு வந்தன. அத்துடன் என் பாட்டனாரின் மொழியறிவு பற்றிய சிந்தனையும் வந்தது.

"இவர்களெல்லாம் பழைய முறைப்படி ஏட்டுப் பள்ளிக்கூடங்களில் தானே படித்திருக்கிறார்கள். தமிழில் தெளிந்த அறிவு பெற்றிருந்திருக்கிறார்களே. நாமும் கூட ஏட்டுப் பள்ளிக்கூடத்தில் தானே படித்தோம். தமிழின் இலக்கண நுட்பங்களையெல்லாம் கண்டு கொண்டோமே. பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கிற காலங்களில் "புளி" என்னும் சொல்லை "புழி" என்று எழுதிய ஒரு பிழையைத் தவிர வேறு ஒரு பிழையும் நாம் செய்ததில்லையே. இந்த மாதிரியான தெளிந்த மொழியறிவுக்குச் சாதகமாயிருந்தது பழைய கால முறையாகத்தானே இருந்திருக்க வேண்டும். அது தானே பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் கற்பிக்கும் முறையாக இருந்திருக்கும். அந்த முறையைத் துருவி ஆராய்ந்து கையாண்டு பார்ப்போமே." என்னும் எண்ணத்தை அந்தச் சிந்தனை எழுப்பிற்று.

அது முதல், நம் முன்னோர் தமிழ் கற்பித்து வந்த முறை எப்படியிருந்திருக்கும் என்னும் ஆராய்ச்சியில் என் கவனம் சென்றது. எழுத்துக்களையும், சொற்களையும் கற்பிக்க வேண்டிய வகை தெளிவாயிற்று.

தமிழ் மொழியின் அமைப்பு - ஒரு சொல், திணை, பால், எண், இடம், வேற்றுமை, காலம் இவைகள் பொருந்துவதற்கிணங்க ஒன்றிரண்டு எழுத்துக்கள் கூடுதல் குறைதல் மூலம் பல சொற்கள்போல மாறுதலடைய இடந்தருவதென்றும், ஒன்றிரண்டு எழுத்துக்களின் சேர்க்கையால் - பெயர்ச் சொல் ஒவ்வொன்றும் எட்டு விதங்களாகவும்,

வினைச் சொல் ஒவ்வொன்றும் ஏவல், வியங்கோள் ஏவல், வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயர், தொழிற் பெயர், வினையடிப் பெயர் என்கிற எட்டு வகைகளில், தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினை, எதிர்மறை வினை என்ற பிரிவுகளில் இருநூறுக்கு மேற்பட்ட விதங்களாகவும் மாறக்கூடிய முறையில் இலக்கண அமைதியைக் கொண்டதென்றும் நன்கு தெளியலானேன். ஆகவே வார்த்தை வார்த்தையாகக் கற்பிப்பது இலாபகரமானதல்ல; எழுத்தைக் கற்பித்து பிறகு சொற்களை அவ்வச் சொல்லின் விகற்பங்களுடன் கற்பிப்பதே இலாபகரமானது என்று உறுதிகொண்டேன். எழுத்தையும் சாரியையுடன் ஆனா - ஆவன்னா - என்று குறிலையும், அதன் நெடிலையும் இணைத்திணைத்துக் கற்பிப்பதே சரியான வழியென்றும் தீர்மானித்தேன். இலக்கண நூல்களை முன்போலல்லாமல் போதனமுறைக் கண்கொண்டு பார்த்தபோது, மேலேகண்ட முறையே தமிழ் கற்கும் பழங்கால முறை—*மரபு—என்றும் தெரிய வந்துவிட்டது.

அதன் பிறகு, என் மாணவர்களுக்கு முதலில் தமிழ் எழுத்துக்கள் 247ஐயும் சாரியையுடன் குறில் நெடில் இணைப்பில் கற்பித்து, பிறகு சொற்களைக் கற்பிப்பதும், சொற்களை அதனதன் விகற்பங்களுடன் கற்பிப்பதும் என் வழக்கமாயிற்று. தமிழ்ப் பாடப் புத்தகத்தில் பாடம் கற்பிக்கும்போது விஷய ஞானப் பகுதிக்கு முதலிடம் கொடுப்பது தவறென்று யான் முன்பே கண்டிருந்தபடியால் மொழியறிவுக்கு முதலிடம் கொடுத்து, தமிழ் முறை மரபுப்படி கற்பித்து வந்ததில் மாணவர் தமிழில் திருந்திய அறிவு பெற்றனர்.

---

*"எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே". (ந.சூ. 388)

இந்த என் முறையைத் தனித்து தொடர்புடையவர்களுக்கும், ஆசிரியர் சங்கக் கூட்டங்களில் எல்லா ஆசிரியர்களுக்கும் சொல்லியும் கவனிப்பவர் அருமையாயினர். பால குருகுல நிர்வாகி உயர்திரு. பிரகாசம் அவர்கள் பால குருகுலப் பாடசாலையை நிறுவி, பழங்காலத் தமிழ் முறையில் தமிழ் கற்பிக்க விரும்பி, தகுந்தவர்களைத் தேடிக் கொண்டிருக்கையில் என்பேரும் அவர்களுக்குச் சொல்லப்பட, 1940-ம் ஆண்டில் பால குருகுலத் தொடர்பு எனக்குக் கிட்டுவதாயிற்று. பால குருகுலப் பாடசாலையே நம் பழங்கால முறையைப் பரீட்சிக்கவும், விருத்தி பண்ணவும் இடந் தந்தது. அப்பாடசாலைத் தொடர்பின் விளைவுதான் இச்சிறு புத்தகம். அதன் நிர்வாகியவர்களின் ஆதரவே என்னை இத்துறையில் இவ்வளவு தூரம் முன்வர உதவியது. இதனால் ஏற்படும் புகழ் அன்னாரையே சாரும்.

இப் புத்தகம் ஆசிரியர்களுக்கும், பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கும் மாணவ — மாணவிகளுக்கும், பள்ளிக்கூடப்படிப்பை முடித்துத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் உதவும்படியாக எழுதப்பட்டிருக்கிறது.

ஆசிரியர்கள் இதைத் தமிழ் போதிக்கும் முறைப் புத்தகமாகக் கையாளலாம். அப்படிச் செய்வதானால், அவர்கள் முதலில் இப்புத்தகம் முழுவதையும் வாசித்து ஆக்கியோனின் நோக்கத்தைக் கருத்தில் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

மாணவர்களுக்கு - எழுத்துக்கள் கற்பிக்கும்போது இப் புத்தகத்தின் முதற் பாகத்தில் சொல்லியிருக்கிற விதமாகக் கற்பிக்க வேண்டும்.

சொற்கள் கற்பிக்கும்போது ஒவ்வொரு சொல்லையும் சாரியையுடன் எழுத்துக் கூட்டிச் சொல்லும்படி பழக்க வேண்டும். இப்படிச் செய்வதால் சொல்வழெழுதலில் பிழைமிகாது. பின்பு ஆறும்பாகத்தில் சொல்லியிருக்கிறபடி

ஒவ்வொரு சொல்லையும், அதனதன் எல்லா விகற்பத்திலும் வரும்படி சொல்ல, எழுதப் பயிற்சி கொடுக்கவேண்டும். ஒரு சொல்லை அதன் எல்லா விகற்பங்களுடனும் கரும்பலகையில் எழுதிப்போட்டு, அதே மாதிரி இறுதியெழுத்தை யுடைய சொற்களை, கரும் பலகையைப் பார்த்துக்கொண்டே எழுதச் சொல்லிச் சரிபார்க்க வேண்டும். அருஞ் சொற்களுக்கு அர்த்தம் சொல்ல வேண்டியபோது, பாடத்தில் அச்சொல் என்ன நிலையில் வந்திருக்குமோ அந்த நிலைக்குரிய அர்த்தத்தைச் சொல்வதுடன் நிறுத்திக் கொள்ளாமல், அச் சொல்லின் எல்லா நிலைக்கும் உரிய அர்த்தங்களையெல்லாம் அதே நேரத்தில் சொல்லிவிட வேண்டும். உதாரணமாக- "அஞ்சாமல்" என்னும் சொல்லுக்கு, "பயப்படாமல்" என்று மட்டும் சொல்லிவிட்டு நிறுத்திக் கொள்ளாமல், அஞ்ச, அஞ்சுக, அஞ்சினன், அஞ்சுகிறன், அஞ்சுவான்-என வரும் எல்லா விகற்பங்களின் அர்த்தத்தையும் சொல்லிவிட வேண்டும். இது செய்யக்கூடாத காரியமல்ல. இரண்டு மூன்று விகற்பங்களுக்கு மட்டும் தாமாக அர்த்தம் சொல்லிவிட்டு, பின் வரும் விகற்பங்களை வரிசையாகச் சொல்லிக் கேட்டால் யூகமுள்ள மாணவர்கள் அர்த்தம் சொல்லிவிடுவார்கள். பின்பு மற்றவர்களும் சொல்வார்கள். வசன பாகத்திலும் செய்யுட்பாகத்திலும் வரும் ஒவ்வொரு அருஞ்சொல்லையும் இவ்விதம் கற்பிப்பது மிகவும் நல்லது. இவ்விதம் மாணவர்களைப் பழக்கி வந்தால் வாசிப்பதிலும், எழுதுவதிலும் அவர்களுக்குள்ள மொழித்திறத்தின் முட்டறும்-கசடறும்-சொல்வளமுறும்.

பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருக்கும் பிள்ளைகள் இப் புத்தகத்தைப் படிப்பதனல் எழுத்துப் பிழை, சொற்பிழை, சந்திப்பிழை, வாக்கியப்பிழை ஆகிய பிழைகள் இல்லாமல் சொல்வதை எழுதலாம், கட்டுரை எழுதலாம். ஆரும் அத்தியாயத்தைப் படித்து சொல்வளம் பெறலாம். ஏழாம் அத்தியாயத்தைப் படித்து இலக்கணப்

பகுதிகளை நினைவில் வைத்து, ஆசிரியர் இலக்கணப் பாடம் கற்பிக்கும் போது விளக்க முறலாம். எட்டாம் பாகப் பாடத்தால் நாத்திருத்தம் அடையலாம்.

இப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கும் மொழி-யறிவுப் பயிற்சிகளில் மிகச் சிறந்த பயிற்சிகள் ஆறும் அத்தியாயத்தில் இருக்கின்றன. "இதற்கு முன் எவராலும் சொல்லப்படாத முடிபுகள், கருத்துகள் என்ன இதில் உள்ளன" என்று கேட்போருக்கு விடையளிப்பதும் அவ்வத்தியாயமே. தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும் தான்றற் புகழ்தல் தகுதியன்றாதலின் அதைப்பற்றி யான் கூறுதல் முறையன்று. படிப்பவர்கள் உய்த்துணர்ந்து கொள்ள வேண்டியதே.

இப் புத்தகத்தின் நன்மை கருதிச் சொல்லப்படும் அறிஞர்களின் ஆலோசனை வணக்கத்துடன் வரவேற்கப் பெற்று அடுத்த பதிப்பில் இடம்பெற ஆவன செய்யப்படும்.

கையெழுத்துப் பிரதிகளைப் பார்வையிட்டு இடையிடையே ஆலோசனை தந்த வித்துவான்கள் அ. இராஜ கோட்டியப்ப பிள்ளையவர்களுக்கும், அம்மையப்ப பிள்ளை அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகும். அடிக்கடி தூண்டி உற்சாகப்படுத்திய பால குருகுல நிர்வாகி திரு. பிரகாசம் அவர்களுக்கும் நன்றி கூறும் கடப்பாடுடையேன்.

இந் நூலைப் பிழையற, சிறந்த முறையில் அச்சிட ஆர்வத்துடன் இப்பணியில் ஒத்துழைத்த தமிழபிமானி "ஆனந்தா பிரஸ்" அச்சுக்கூடத் தலைவர் திரு. சந்தன மாரியப்பா அவர்களுக்கும், அவர்கள் ஆதீனத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் என் அன்பு கலந்த நன்றி.

"பொங்கும் மங்களம் எங்கும் தங்குக"

விருதுநகர்,
டிசம்பர் 1947.

சா. வேதமுத்து,
ஆக்கியோன்.

பதிப்புரை

நான் இந்தப் புத்தகத்தை வெளியிடுவோன் என்ற முறையில் இதன் உபயோகத்தையும், உள்ளடக்கத்தையும் சொல்லுவதை விட, இப்புத்தகத்தை வெளியிடுவதற்கான மூல காரணத்தை இங்கு எழுதுவதே போதுமானதெனக் கருதி அதைக் கீழே எழுதுகிறேன்.

1919-ல் நான் ஹைஸ்கூல் படிப்பை விட்டு இந்நகரில் வியாபாரத் தொழிலில் ஈடுபட்ட பொழுது, திண்ணைப் பள்ளிக்கூடங்களில் படித்து வர்த்தகம் செய்யும் அநேகருடன் பழகவும், தொடர்பு கொள்ளவும் வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவர்கள் ஆங்கிலம் ஒன்று தவிர மற்ற ஒவ்வொன்றிலும் ஹைஸ்கூல், காலேஜ்களில் படித்தவர்களைவிட மேலாக இருந்தது என்னைப் பிரமிக்கச் செய்தது. இவ்வளவிற்கும் அவர்கள் திண்ணைப் பள்ளிக் கூடங்களில் 4, 5 வருஷங்கள் மட்டும் அநேகமாக பணச் செலவின்றிப் படித்தவர்களே. அவர்கள் கணக்குகளை மனக் கணக்காகத் தீர்ப்பதும், தமிழைப் பிழையின்றி எழுதுவதும், கம்பராமாயணம், மகாபாரதம் முதலிய காவியங்களை வாசிப்பதும் அற்புதமாக இருக்கும்.

இதிலிருந்து, திண்ணைப் பள்ளிக்கூடக் கல்வித்திட்டத்தில் ஏதோ மேன்மைகளிருப்பதாகவும், ஹைஸ்கூல், காலேஜ் கல்வித் திட்டத்தில் ஏதோ குறைகளிருப்பதாகவும் அப்போதே என் மனதிற்குப் பட்டது. ஆனால் அவைகளுக்கான காரணங்கள் எனக்கு அப்போது தெரியவில்லை.

ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்து ஆசிரியரை அழைத்து வந்து அவரிடம் நான் சில நாட்கள் தமிழ்ப் பாடம் படித்துப் பார்த்தேன். அவரிடம் சில மாதங்களாவது படித்தால்,

தமிழில் நல்ல தேர்ச்சியடையலாமென்ற உறுதி எனக்கு ஏற்பட்டது. ஆனால், என்னால் சில நாட்களுக்கு மேல் படிக்க முடியவில்லை. ஏனென்றால், பெரிய வியாபாரத்தை, கடைக்கு வந்த உடனேயே நான் பொறுப்பாகக் கவனிக்க வேண்டிய நிலைமையில் இருந்தேன்.

இவ்வூர் முக்கியமான வியாபார ஸ்தலமாயிருந்தபடியால், இங்கு பல சிறந்த திண்ணைப் பள்ளிக்கூடங்கள் நன்கு நடைபெற்று வந்திருக்கின்றன.

தற்காலத் தேவைகளுக்குத் தகுந்தபடி சர்க்கார் அங்கீகாரமின்றி நவீன திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்று என் சொந்தத்தில் ஆரம்பிக்க நான் அப்போதே ஆசை கொண்டேன்.

அதன்பின் வியாபாரத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டே காங்கிரஸ் அரசியல் வேலைகளிலும், காந்திஜீயின் நிர்மாணத்திட்ட வேலைகளிலும் தொடர்பு வைத்துக் கொண்டு, ஏராளமான பணத்தைச் செலவு செய்து அவ் வேலைகளுக்குப் பலத்தைக் கொடுத்து வந்ததுடன், நானும் தேசிய ஊழியம் செய்ய அனுபவம் பெற்று வந்தேன். காந்திஜீ எழுதிய புத்தகங்களையும், அவருடைய வாரப் பதிப்பாகிய "யங் இந்தியா"ப் பத்திரிகையை (ஆரம்பத்திலிருந்து, அவர் அதை "ஹரிஜன்" பத்திரிகையாக மாற்றும் வரையிலும்) விடாமல் வாங்கி, பக்தியுடனும், சிரத்தையுடனும் படித்து என்னைப் பக்குவப் படுத்திவர ஆரம்பித்தேன்.

1937-ல் நமது மாகாண அரசாங்க நிர்வாகம் காங்கிரஸ் மந்திரிகளின் கைக்கு வந்தது. இதிலிருந்து கூடிய சீக்கிரம் நமது தேசத்திற்குப் பூரண சுதந்தரம் கிட்டி விடுமென்ற நிச்சயம் எனக்கு ஏற்பட்டது.

நமது நாடு அந்நியர்களுக்கு அடிமைப்பட்டதால் இங்கு அவர்களால் புகுத்தப்பட்டிருக்கிற அந்நிய நாட்டு முறைக் கல்வித் திட்டத்திற்குப் பதில் - நாம் மறந்து விட்ட - நமது நாட்டுமுறைக் கல்வித் திட்டத்தை - அது அறவே அழிந்து போகுமுன் கண்டுபிடித்து, அதைத் தற்காலத் தேவைகளுக்குத் தக்கபடி அபிவிருத்தி செய்து நடத்திவைக்க உறுதி செய்துகொண்டு சர்க்கார் கிராண்டில்லாமல் என் சொந்தத்தில் ஒரு லட்ச ரூபாய்க்குமேல் செலவு செய்து, எல்லா வசதிகளுடனும் கட்டிடங்கள் கட்டி கலாசாலைக்கு வேண்டிய மற்றச் சாதனங்களையும் சேர்த்து 1939-ல் பால குருகுலத்தை ஸ்தாபித்தேன். நான், பெரும் வருமானமுள்ள எனது பரம்பரையான வர்த்தகத்தொழிலை, அதிலும் யுத்தம் நடந்து கொண்டிருக்கும் காலத்தில், விட்டு விட்டு, முழுநேரமும் கலாசாலையின் முன்னேற்றங் கருதி உழைக்கத் தொடங்கினேன்.

அதில் சர்க்கார் அங்கீகாரம் பெற்ற i முதல் viii வகுப்புகள் கொண்ட உயர்தர ஆரம்பப் பாடசாலையும், அங்கீகாரம் பெறாத ix முதல் xi வகுப்புகள் கொண்ட வியாபாரப் பயிற்சிக் கலாசாலையும் உண்டு.

பாலகுருகுலத்தில் பழைய திண்ணைப் பள்ளிக்கூடத்து முறையைத் தழுவி தமிழ் கற்றுக் கொடுக்க முயற்சியெடுத்தேன். அதற்குத் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியராக இருந்து அனுபவம் பெற்றவரும், இக்காலப் பள்ளிக்கூடங்களில் தமிழ்ப் பண்டிதராக இருப்பவருமான ஒருவர் உதவி தேவையென்று உணர்ந்தேன். விசாரித்ததில் இருவகையிலும் பழக்கமுடையவர் கிடைப்பதாகத் தெரியவில்லை. இக்காலப் பள்ளிக்கூடங்களில் தமிழ்ப் பண்டிதர்களாக இருப்பவர்கள் பழங்காலத் திண்ணைப் பள்ளிக்கூட முறைகள் தெரிந்தவர்களாக இல்லையென்று தெரியவந்தது. ஆனால், இந்நூலின் ஆசிரியர் திரு. சா. வேதமுத்து பழைய திண்ணைப் பள்ளிக்கூட முறைப்படி தமிழ் கற்றும், அப்

பாடசாலைகளில் ஆசிரியராக இருந்தும் அம் முறைகளை நன்கு தெரிந்து கொண்டதுடன், நவீன காலப் போதனை முறைப் பாடசாலையில் பயின்றும், இக் காலங்களில் புதிது புதிதாய்த் தோன்றும் பல முறைகளைப் பரீட்சித்தும் போதனை முறைகளில் தேர்ச்சி பெற்றவராக இருப்பதோடு தற்காலத் தமிழ்ப் பண்டிதர்களின் தமிழறிவுக்கு எவ் விதத்திலும் குறைவில்லாதவராகவும் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவரைச் சந்தித்துப் பேசியதில், என்னுடைய அபிலாசையை நிறைவேற்றத் திறமையும் ஆர்வமும் உடையவர் அவரே என்று விளங்கிற்று.

திண்ணைப் பள்ளிக்கூடத் தமிழ்ப் பாடத் திட்டங்களையும், முறைகளையும் பற்றி சவிஸ்தாரமாய் ஆராய்ந்தோம். பால குருகுலத்தில் நடத்திப் பரிசீலனை செய்வதற்காகப் பழைமையும், புதுமையும் கலந்த ஒரு பாடத் திட்டமும், உரிய பாடங்களும் தயார் செய்ய முனைந்தோம்.

எங்கள் ஆசிரியர்களுக்கு அதைக் கையெழுத்துப் பிரதிகளாக எழுதிக் கொடுக்கச் செய்ததுடன், அவர்களுக்கு அடிக்கடி ஓய்வுநேரங்களில் திரு. வேதமுத்து மாதிரி வகுப்புகள் (Model Lessons) நடத்திக்காட்டி உதவி செய்து வந்தார். அதில் வெற்றி இருப்பது கண்டு அதைப் புஸ்தகமாக அச்சிட்டு வெளியிடும்படி சிலர் கேட்டுக் கொண்டார்கள். முழு வெற்றி கிடைக்க வேண்டுமானால், ஆசிரியர்களிடத்தில் பிரதிகள் இருப்பது போல, மாணவர்களிடமும் பிரதிகள் இருக்க வேண்டுமென்று கருதினேன்.

ஆசிரியர்கள் கைப்பிரதியாக உபயோகித்து வந்ததை திரு. வேதமுத்து எவ்வளவோ திருத்தி, சேர்த்து, விளக்கி, அரும் பிரயாசை யெடுத்து இதை எழுதியிருக்கிறார். அவரிடம் உண்மையான தமிழ் ஆர்வமும், ஆராய்ச்சியும், திறமையும் இல்லாவிட்டால், அவரால் இந்தப் புஸ்தகத்தை

தயார் செய்திருக்க முடியாது. அன்னாரின் ஆர்வத்தையும், முயற்சியையும், திறமையையும் நான் பெரிதும் பாராட்டு கிறேன். இப் புஸ்தகத்தைப் பார்த்துத் தமிழகமும் என்னைப்போல் அவரைப் பாராட்டுமென்று நம்புகிறேன்.

இந்தப் புஸ்தகம், தமிழ் நாட்டில் சீக்கிரம் வெற்றியடையவேண்டுமானால், முதலில் ஆசிரியர்கள் இந்தப் புஸ்தகத்தைப் படித்து, இதிலுள்ள அப்பியாசங்களைத் தாங்களே செய்து பார்த்து, அதன்பின் தங்கள் மாணவர் களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். இதற்குப் பள்ளிக்-கூட நிர்வாகிகள் ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஒவ்வொரு புஸ்தகம் (Table Copy) வாங்கிக் கொடுப்பது அவசிய மாகும். ஆசிரியர்கள் மூன்றாவது வகுப்புக்கு மேற்பட்ட தங்கள் மாணவர்களையும், தங்கள் பழைய மாணவர்களையும் இப் புஸ்தகத்தை வாங்கச் செய்து, அவர்களையும் தமிழ் மொழியில் நல்ல தேர்ச்சி அடையும்படி செய்யலாம்.

வகுப்புத் தமிழ்ப் புஸ்தகம் இப்போது உபயோகப் பட்டு வருவது போல விஷய ஞானத்திற்கு (Subject matter) இருந்து வரலாம். ஆனால், மொழியறிவுக்கும் தேர்ச்சிக்கும் இப் புஸ்தகம் மிகவும் இன்றியமையாதது. இப் புஸ்தகப்படி மொழியறிவில் நன்கு பழக்கி விட்டால் மாணவர்கள் விஷய ஞானத்தைப் புஸ்தகங்களில் தாங்களாகவே படித்து அறிந்து கொள்வார்கள். எனவே மொழியறிவுப் பழக்கமே முதலில் வேண்டப்படுவது.

இப் புஸ்தகம் வயது வந்தவர்களில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கும் பெரிதும் உபயோகப்படும்.

ஆசிரியர்கள் முதலில் இந்தப் புஸ்தகத்தை நன்கு படித்து விட்டால், அவர்களுக்கு, தமிழ் மொழியறிவை மாணவர்களுக்கு எப்படி சீக்கிரத்தில் இலகுவாக நன்கு கற்றுக் கொடுப்பதென்பது தெரிந்துவிடும்.

தமிழ் 247 எழுத்துக்களிலும், வடமொழி 65 எழுத்துக்களிலும் டிக்டேஷன் (Dictation) போட்டால் 100-க்கு 100 அம்சங்கள் (Marks) எடுக்கும்படி கற்றுக் கொடுத்து, எந்தச் சொல்லையும், சொற்றொடரையும் சொன்னவுடன் சாரியை சேர்த்து எழுத்துக்கூட்டிச் சொல்லப் பழக்கம் கொடுத்து விட்டாலே, மாணவருக்கு எழுத்துப்பிழை, சொற்பிழை, சந்திப்பிழை ஆகிய மூன்று பிழைகளும் ஏற்படாமலிருப்பதை நிதரிசனமாகக் காணலாம். ஆசிரியர்களும் மற்றவர்களும் இதையாவது பரீட்சை செய்து பார்ப்பார்களாக. வாக்கியப் பிழையோ அநேகமாக எவருக்கும் ஏற்படுவதில்லை. வாக்கியங்களைப் பிழையின்றி வேகமாக சீக்கிரத்தில் சொல்லவும், எழுதவும் தெரிவதற்காக வேண்டிய பாடங்கள் இப் புஸ்தகத்தில் இருக்கின்றன.

தமிழ் வசனத்தைப் பிழையறக் கற்கும் நோக்கமாய் இப் புஸ்தகத்தை வெளியிட்டதுபோல, தமிழ்ச் செய்யுள், தமிழ் இலக்கணம் ஆகியவற்றை முறைப்படி கற்க வேறு இரு நூல்களும் வெளியிட உத்தேசித்துள்ளோம். மிக விரைவில் தமிழ் எண்சுவடி முறைக் கணக்குப் புஸ்தகமும் வெளிவரும். எங்கள் முயற்சிக்குக் கடவுள் துணை செய்வாராக.

விருதுநகர்,
டிசம்பர் 1947.

கி. பெ. சி. வ. பிரகாசம்,
வெளியிடுவோன்.

★

பால குருகுல வித்யாலயம்



வியாபாரப் பயிற்சிக் கலாசாலை

பொருளடக்கம்

பொருள் பக்கம்

முதற் பாகம்: எழுத்துக்கள் கற்கும் வகை.

1-ம் பாடம்: எழுத்துக்களை உச்சரிக்கப் பழகும் பாடம். 1
2-ம் பாடம்: எழுத்துக்களை எழுதப் பழகும் பாடம். 4

இரண்டாம் பாகம்: எழுத்துப் பிழை நீக்கும் பாடங்கள்.

1-ம் பாடம்: தமிழ் நெடுங் கணக்கும், வழக்கத்தில் இருக்கும் வடமொழி யெழுத்தும். 12
2-ம் பாடம்: பொருள் மாறுபாடு ஏற்படும் படியான குறில், நெடில் சொற்கள். 13
3-ம் பாடம்: மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள். 16
4-ம் பாடம்: மொழிக்கு முதலில் வரக்கூடாத எழுத்துக்கள் வந்த பிழைகளும் அவற்றின் திருத்தங்களும். 18
5-ம் பாடம்: மொழிக்கு இறுதியில்வரும் எழுத்துக்கள். 19
6-ம் பாடம்: மொழிக்கு இறுதியில் வரக்கூடாத எழுத்துக்கள் வந்த பிழைகளும் அவற்றின் திருத்தங்களும். 20
7-ம் பாடம்: மொழிக்கு இடையில் சந்திக்கக் கூடாத எழுத்துக்கள் சந்திக்க எழுதுவதால் ஏற்படும் பிழைகளும் அவற்றின் திருத்தங்களும். 21
8-ம் பாடம்: ரகர, றகர வேறுபாடு. 22
9-ம் பாடம்: ளகர, ழகர வேறுபாடு. 28
10-ம் பாடம்: லகர, ழகர, ளகர வேறுபாடுகள். 33
11-ம் பாடம்: ணகர, னகர வேறுபாடுகள். 35

மூன்றாம் பாகம்: சொற்பிழை நீக்கும் பாடங்கள்.

1-ம் பாடம்: பகுதி, விகுதி கவனியாமையால் ஏற்படும் பிழைகளும், அவற்றின் திருத்தங்களும். 39
2-ம் பாடம்: நெருங்கிய ஒலியுடைய சொற்கள் சில பேச்சு வழக்கில் மாறிக் கொள்ளுதல். 40

3-ம் பாடம்: மருவி வழங்கும்-சில சொற்களும் அவற்றின் திருத்தங்களும், விளக்கங்களும். 41
4-ம் பாடம்: இலக்கியங்களில் பயின்றிருக்கும் மரபு தெரியாமையால் ஏற்படும் பிழைகளும் அவற்றின் திருத்தங்களும். 45
5-ம் பாடம்: ஒருமை பன்மை விளக்கம்-பெயர்ச்சொல் 46
6-ம் பாடம்: ஒருமை பன்மை விளக்கம்-வினைச்சொல் 47
7-ம் பாடம்: பிறமொழிச் சொற்கள். 48

நான்காம் பாகம்: சந்திப்பிழை நீக்கும் பாடங்கள்.

1-ம் பாடம்: தமிழ் நெடுங் கணக்கு உயிர்மெய் எழுத்துக்களைப் பிரிக்கும் பயிற்சி. 53
2-ம் பாடம்: முதலெழுத்துக்களைக் கொண்டே சொற்கள், சொற்றொடர்களை எழுதும் பயிற்சி. 57
3-ம் பாடம்: இயல்புப் புணர்ச்சித் தொடர்கள். 58
4-ம் பாடம்: விகாரப் புணர்ச்சித் தொடர்கள் (அ) தோன்றல். 62
5-ம் பாடம்: ,, (ஆ) கெடுதல். 68
6-ம் பாடம்: ,, (இ) திரிதல். 69

ஐந்தாம் பாகம்: வாக்கியப் பிழை நீக்கும் பாடங்கள்.

பல்வகைப் பொருள்களும். 80

ஆறும் பாகம்: சொற்கள் கற்கும் வகை.

1-ம் பாடம்: பெயர்ச் சொல்-விகற்பங்கள். 94
2-ம் பாடம்: வினைச் சொல்-விகற்பங்கள். 101

ஏழாம் பாகம்: இலக்கண நினைவுறுத்தற் பாடங்கள்.

1-ம் பாடம்: எழுத்திலக்கணத்தில் கவனிக்க வேண்டியவை. 120
2-ம் பாடம்: சொல்லிலக்கணத்தில் கவனிக்க வேண்டியவை. 122

எட்டாம் பாகம்: நாப்பழக்கப் பாடங்கள்.

1-ம் பாடம்: உலக வழக்கு நாப் பழக்கப் பாடங்கள் 127
2-ம் பாடம் வசன நடைத் தொடர்களை வாசிக்கும் வகை. 128

அறிவினாக்களும், அப்பியாசங்களும். 129-136

முதற் பாகம்

எழுத்துக்கள் கற்கும் வகை

குறிப்பு

(1) எழுத்துக்களை உச்சரிக்கப் பழகும் பாடம்; (2) எழுத்துக்களை எழுதப் பழகும் பாடம் என இப் பாகத்தில் இரண்டு பாடங்கள் அமைந்திருக்கின்றன. இவ்விரண்டையும் கற்கும் வகை அந்தந்தப் பாடத்தின் "குறிப்பு" என்ற பகுதியில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அதன்படி கற்க.

1. எழுத்துக்களை உச்சரிக்கப் பழகும் பாடம்

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	ஃ
க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ	க்
ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ	ங்
ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ	ச்
ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ	ஞ்
ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ	ட்
ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ	ண்
த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ	த்
ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ	ந்
ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ	ப்
ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ	ம்
ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ	ய்
ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ	ர்
ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ	ல்
வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ	வ்
ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ	ழ்
ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ	ள்
ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ	ற்
ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ	ன்

குறிப்பு:—

இந்நெடுங் கணக்கில் 19 வரிகளும், வரிக்கு 13 எழுத்துக்களுமாக மொத்தம் 247 எழுத்துக்கள் இருக்கின்றன. இவற்றுள் முதல் வரியிலுள்ள உயிர் எழுத்துக்கள் 12-ம், 2-ம் வரி முதல் 19-ம் வரி வரையுள்ள 18 வரிகளின் இறுதியிலுள்ள **க்** முதல் **ன்** வரையுள்ள மெய்யெழுத்துக்கள் 18-ம் **முதலெழுத்து** என்று சொல்லப்படும். இந்த 30 எழுத்துக்களின் ஒலியே மற்ற எழுத்துக்களிலும் வருவதால் அவைகள் சார்பெழுத்துக்கள் என்னப்படும். எனவே, தமிழ் எழுத்துக்கள் எண்ணிக்கையில் 247 ஆகத் தோன்றிய போதிலும் ஒலிகள் 30 தான் என்று தெரிந்து கொள்க. அந்த முப்பதிலும் ஐகாரமும், ஔகாரமும் தனி ஒலிகளல்லாமல் **அய் - அவ்** என்ற ஒலிகளின் சேர்க்கையாதலால் தமிழ் ஒலிகள் மொத்தம் 28 தான் என்று கூறுவோரும் உளர். ஆகையால், ஒலிகள் மிகுந்தது தமிழ் என அஞ்ச வேண்டியதில்லை.

முதலில் **அகரம்** முதல் **அஃகேனம்** வரை, ஆனா, ஆவன்னா என்று சாரியையோடு ஒரு வகை இராகத்துடன் ஒவ்வொன்றாய்ச் சொல்லிப் பழகுக. அப்படிச் சொல்லும் போது அவ்வவ்வொலியின் வரிவடிவம் இன்னின்னதென்று தெரிந்துகொள்ளவேண்டும். கரும் பலகையில் சுண்ணாம்புக் கட்டியால் எழுதிப் போட்டுக்கொள்ளலாம்; அல்லது வேறு வகையில் தயாரித்து வைத்துக்கொள்ளலாம்.

பிறகு, மற்ற வரிகளையும் வரிசையாய்ச் சொல்லிப் பழக வேண்டும். அப்போதும் வரிவடிவங்கள் கவனிக்கப் பட வேண்டும். முதல் வரியைக் கற்கச் செல்லும் காலமே

மற்ற எல்லா வரிகளையும் கற்கச் செல்லும் காலமாகும். ஒரு வரியின் மெய்யொலியுடன் உயிர் ஒலிகள் கலந்து வருவது போலவே, எல்லா மெய்யொலியுடனும், உயிர் ஒலிகள் கலந்து வருவதால் ஓசை ஒரே விதமாய்க் கேட்கும்.

இவ்வாறு உச்சரிப்புக் கற்பதால் வெகு இலகுவாக ஒலிகளைக் கற்றுக்கொள்ளலாம். இராகத்துடன் சொல்வதால் பிரியமாகவும் சொல்வார்கள். இராகத்தோடு சாரியை சேர்த்து உச்சரிப்பதால் நாக்கும் திருத்தமடையும். "... செந்தமிழும் நாப் பழக்கம் ..." ஆதலால், தமிழுக்கு உரிய எல்லாப் பயிற்சிகளும் இம்முறையால் ஒருங்கே சேருகிறதைக் காண்கிறோம். அதனால், தமிழால் உண்டாகும் எல்லாப் பயனையும் அடைய இம்முறையால் தோற்றுவாய் செய்கிறோம் என்றும் கூறலாம்.

மேலே சொல்லப்பட்ட முறைப்படி தமிழ் எழுத்துக்களைக் கற்றுக்கொண்டால், பின் வரும் பாடங்களைப் பிறர் உதவியின்றிக் கற்றுக் கொள்ளலாம். தானே கற்றுக் கொள்ள முடியாதவர்கள் இந்தப் பாடத்தை மட்டும் பிறரிடம் கேட்டுக் கற்றுக்கொள்ளலாம். அவர்களிடம் நெடுங் கணக்கை ஒப்புவிக்கவும் செய்யலாம்.

இப் பாடத்தை ஆசிரியர் கற்பிக்கும் பொழுது தமிழ் நெடுங்கணக்கைக் கரும் பலகையில் எழுதிப் போடலாம்; அல்லது பெரிய தாளில் மையால் பெரிய பெரிய எழுத்துக்களாக எழுதி வைத்துக்கொள்ளலாம். உச்சரிப்பைக் கவனித்துப் பிழையைத் திருத்த வேண்டும். இன்ன ஒலி வடிவின் வரிவடிவம் இன்னதுதான் என்று தெரியுமட்டும் திரும்பத் திரும்பக் கற்பிக்க வேண்டும். மனப் பாடமாய்ச் சொல்லச் செய்யவும் வேண்டும்.

2. எழுத்துக்களை எழுதப் பழகும் பாடம்

தமிழ் எழுத்துக்கள் ஒலி வடிவு, வரி வடிவு என இரு வடிவுகள் உடையன. ஒலி வடிவு ஓசை வேறுபாட்டால் 30 அல்லது 28 ஒலி பேதங்கள் உள்ளன என்று முந்தின பாடத்தில் பார்த்தோம். வரி வடிவு இத்தனை உருவ பேதங்கள் உள்ளன என்று இப்பாடத்தில் காண்போம்.

	எழுத்துக்களின் விபரம்.	உயிர் சேர்வதால் ஏற்படும் அடையாளங்கள்	உருவ பேத எண்
1	உயிர்எழுத்துக்கள் அ-ஔ	—	12
2	மெய் ,, க் - ன்	—	18
3	அகர உயிர் 18 மெய்களுடனும் சேர்வதால் மெய்யில் தோன்றும் அடையாளம்	புள்ளி நீக்கம்	1
4	ஆகார உயிர் ,,	ா, ◡	2
5	இகர உயிர் ,,	ி	1
6	ஈகார உயிர் ,,	ீ	1
7	உகர உயிர் ,,	ு, ு, ு	3
8	ஊகார உயிர் ,,	ூ, ூ, ூ	3
9	எகர உயிர் ,,	ெ	1
10	ஏகார உயிர் ,,	ே	1
11	ஐகார உயிர் ,,	ை, ை	2
12	ஒகர உயிர் ,,	ெ - ா, ெ ◡	2
13	ஓகார உயிர் ,,	ே - ா, ே ◡	2
14	ஔகார உயிர் ,,	ெ - ள	1
	ஆக		50

தமிழ் எழுத்துக்கள் வரிவடிவில் 247 என்று தோன்றிய போதிலும் உருவ பேதங்கள் 50 தான். ஒரு உயிரின் அடையாளம் 18 மெய்யிலும் ஒன்றுபோல் காட்டப் பட்டால் சரியாய் 42 உருவ பேதங்கள்தான் இருக்கும். சில மெய்களில் வெவ்வேறு விதமாகக் காட்டப்பட்டிருப்ப-தால்தான் 8 உருவங்கள் கூடுதலாகி 50 உருவ பேதங்களாக விளங்குகின்றன. ஆகவே, தமிழில் எழுத்துக்கள் அதிகம் என்று அஞ்ச வேண்டாம்.

தமிழ் எழுத்துக்களில் ஒலி வடிவங்களைச் சொல்லப் பழகும்போது வரிவரியாக இடமிருந்து வலமாகவும், வரி வடிவங்களை எழுதப் பழகும்போது கீழ்நோக்கி **அகர**முதல் **னகர**மீறாகவும் கற்பது சுலபமாக இருக்கும்.

எழுத்துக்களின் வரிவடிவத்தை எழுதிக் காட்டச் சொல்லி எழுத வேண்டும். ஒவ்வொரு எழுத்தும் இன்னவிடத்தில் தொடங்கி, இன்னவிடத்தில் முடியும் என்ற விவரம் எழுதிக் காட்டினாலன்றி, முன்பே எழுதப்பட்டிருப்பதைப் பார்ப்பதால் புரியாது. அப்படியே வடமொழி எழுத்துக்கள் 65ஐயும் எழுதிக் காட்டச் சொல்லி, பார்த்து எழுதிப் பழகிக் கொள்க.

கற்பவர்கள் திருத்தமாக எழுதிப் பழகுவதற்காகத் தமிழ் மொழி எழுத்துக்கள் 247-ம், வடமொழி எழுத்-துக்கள் 65-ம் (காட்டும்) சித்திரிக்கப்பட்ட தாள் ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் அழகிய எழுத்து முறை.

தமிழ் எழுத்துக்கள் 247-ம், வடமொழி எழுத்துக்கள் 65-ம் சம இடை வெளி கொண்ட ஐந்து கோடுகளுக்குள் அமைந்து சில எழுத்துக்கள் முற்றிலும் மூன்று கோடுகளுக்குள்ளும், மீத எழுத்துக்களின் பிரதான உருவங்கள் மூன்று கோடுகளுக்குள்ளும் அமைந்து விடுவதுடன் தமிழ் வரிவடிவ உருவங்கள் மொத்தம் 50-க்குள் அடங்கிவிடுவதானது தமிழுக்குரிய மேன்மையாகும்.

ஆகையால், மேலேயும் கீழேயும் ஒவ்வொரு கோடு இருப்பதாக வைத்துக்கொண்டு, ஆரம்பத்தில் மூன்று கோடுகளுக்குள் தமிழ் எழுத்துக்களை அழகாக எழுதி விடலாம். அதன்பின் மேலே இரண்டு கோடுகளும், கீழே இரண்டு கோடுகளும் இருப்பதாக வைத்துக்கொண்டு ஒரு கோட்டில் எழுத முடியும்.

சித்திரத்தில் மூன்று கோடுகளுக்குள் அடங்கிய எழுத்துக்களைக் கவனிக்க. சிலேட்டில் அதுபோல் மூன்று கோடுகள் போட்டு அவற்றைப்போல் எழுதிப் பழகுக. எழுத்துக்களின் உருவங்கள் கோடுகளின் மேலும், கீழும், பக்கத்திலும் எப்படி எப்படிப் போகின்றன என்பதைக் கவனித்து கற்றுக்கொள்க.

இவைகளை நன்கு எழுதிப் பழக்கமான பின் சித்திரத்தில் உள்ள எழுத்துக்களை அவைபோல் கோடுகள் போட்டு எழுதக் கற்றுக்கொள்க.

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

க ங ச ஞ ட ண த ந ப

ம ய ர ல வ ழ ள ற ன

ி ீ ு ூ ு ூ ெ ே ை

கவனிப்பு

தமிழ் அழகிய எழுத்து முறை "Chart" இந்தத் தாளின் முன்பக்கத்தில் கண்ட முறைப்படி அமைக்கப் பட்டிருக்கிறது. மாணவர்கள் கவனித்து எழுதிப் பழகிக் கொள்க.

வயது வந்த மாணவர்களும், மற்றவர்களும் கீழ்க்கண்ட விதிப்படி எழுதிப் பழகினால் சிறுவர்களை விட அதிகச் சீக்கிரத்தில் சரியான எழுத்து எழுதக் கூடியவர்களாகி விடலாம்.

முதலில் சிலேட்டில் ஒரே சம இடையிருக்கும் படியான மூன்று கோடுகள் போட்டு, சித்திரத்தில் கண்ட உயிர் எழுத்துக்களையும், அகரமேறிய மெய்களையும், மெய்களில் உயிர் பொருந்துமிடத்து ஏற்படும் அடையாளங் களையும் நன்கு எழுதிப் பழக வேண்டும். பிறகு அதே விதிப்படி தமிழ் 247 எழுத்துக்களையும் எழுதிப் பழக வேண்டும். பின்பு அவைகளை வேகமாக எழுத முயல வேண்டும். அதன் பின் கோடுகளின் இடை வெளிகளைக் குறைத்து சிறு எழுத்துக்களாக எழுதிப் பழக வேண்டும்.

இரண்டாவது ஒரே கோட்டில் விரைவாக வடிவம் குன்றாமல் சிலேட்டில் எழுதிப் பழகவேண்டும். வடமொழி எழுத்துக்களையும் அப்படியே பழக வேண்டும்.

மூன்றாவது கோடு போட்ட ஒற்றைக் கோட்டு நோட்டில் பென்சிலால் எழுதிப் பழக வேண்டும். இப்படி எழுதி வரும்போது சொற்களையும், சொற்றொடர்களையும் கூட எழுதிப் பழக வேண்டும்.

நான்காவதாக நோட்டில் மையால் தமிழ் 247 எழுத்துக் களையும், வடமொழி 65 எழுத்துக்களையும் திருத்தி எழுதித் தேர்ச்சியானபின் சொற்களையும், சொற்றொடர்களையும், வாக்கியங்களையும் எழுதிப் பழக வேண்டும்.

இப்படி எழுதிப் பழகிக் கொண்டால், எப்போதும் சரியான வடிவமுடைய எழுத்துக்கள் இயல்பாகவே வந்துவிடும். கடைசியாகக் கோடில்லாமலே எழுதக்கூடும்.

சிலேட்டுக் குச்சி நீளமாகவும், நுனியாகவும் இருக்க வேண்டும். சிலேட்டில் நன்கு எழுதக் கற்ற பின் மூன்று கோடுகள் போட்ட தாளில் பென்ஸிலால் எழுதிப் பழகுக. அதன் பின்பு மையால் எழுதுக. இந்தப் புஸ்தகத்தில் கண்டதுபோல் அச்சுக் கோடுகள் போட்ட தாளிலும், நோட்டிலும் மட்டும் ஒரு வருஷத்திற்கு எங்கள் முறைப்படி எழுதிப் பழகிவிட்டால், இரண்டாவது வருஷம் மேலே இரண்டு கோடுகளும், கீழே இரண்டு கோடுகளும் இருப்பதாக வைத்துக்கொண்டு ஒரு கோட்டில் அழகாக எழுதலாம். தாளில் அச்சுக் கோடுகள் அழுத்தமாக இராமல் சன்னமாக (Thin) இருக்க வேண்டும்.

கையெழுத்துக் கெடுவதற்குக் காரணம், ரப் நோட்டு, பேர் நோட்டு, காப்பி நோட்டு என்று மூன்று நோட்டுகளை வைத்துக்கொண்டு மூன்று விதமாக எழுதிப் பழகுவதும்; தமிழ் அழகிய எழுத்துக்கு முறை (Method) வகுத்துக் கொள்ளப்படாததுமாகும்.

குறிப்பு —

இதற்கு அடுத்து வரவேண்டிய "சொற்கள் கற்கும் வகை" என்னும் இரண்டாம் பாகம் கற்பவர்கள் நிலை கருதி கடைசியாக அமைக்கப்பட்டிருக்கிறது. பிழையின்றி எழுதவேண்டிய இன்றியமையாமை கருதி பிழை நீக்கும் பாடங்கள் இத்துடன் தொடர்கின்றன. பிழைகள் எழுத்துப் பிழை, சொற்பிழை, சந்திப் பிழை, வாக்கியப் பிழை என நான்கு வகைப்படும். அவை முறையே இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் பாகங்களாக வருகின்றன.

இரண்டாம் பாகம்

எழுத்துப் பிழை நீக்கும் பாடங்கள்

கவனிப்பு

எழுத்துப் பிழைகள்:- (1) சொல்லொலிகளை எழுத்தொலிகளால் நிரப்பாப் பிழை; (2) எழுத்து வெட்டுப் பிழை; (3) குறில், நெடில் வேறுபாடு அறியாப் பிழை; (4) மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் அறியாப் பிழை; (5) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் அறியாப் பிழை; (6) மொழிக்கு இடையில் சந்திக்கும் எழுத்துக்கள், இவை சந்திக்கா எழுத்துக்கள் இவ்வையெனத் தெரியாப் பிழை; (7) ரகர, றகரப் பொருள் வேறுபாடு அறியாப் பிழை; (8) ளகர, ழகரப் பொருள் வேறுபாடு அறியாப் பிழை; (9) லகர, ளகர, ழகரப் பொருள் வேறுபாடு அறியாப் பிழை; (10) னகர, ணகரப் பொருள் வேறுபாடு அறியாப் பிழையெனப் பத்து வகைப்படும்.

மேலே கண்ட பத்து வகைகளில் எழுத்துப் பிழைகள் ஏற்படுகின்றன என்பதைக் கண்டறிந்து அவைகளைப் போக்குவதற்குப் பாடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

1. **சொல்லொலிகளை எழுத்தொலிகளால் நிரப்பாப் பிழை** யென்பது "புழைக்கடை" யென்பதை, "புழக்கடை" யென்றும், "உடைமை" யென்பதை "உடமை" யென்றும் எழுதுவதாகும். சொல்லொலியை எழுத்தொலிகளால் நிரப்பாமையால் ஏற்படுவது இப்பிழை. இவ்வகைப் பிழை அரிச்சுவடி எழுத்துக்கள் 247ஐயும் நன்றாய்க் கற்றுக் கொள்வதாலும், சொற்களை எழுத்துக் கூட்டிச் சொல்லிப்

பழகுவதாலும் நீங்கும். அதற்காக முதல் பாடம் அரிச்சுவடி எழுத்துக்களாக அமைந்துள்ளது. அதேபோல வடமொழி எழுத்துக்கள் 65-ம் அடுத்துப் போடப்பட்டிருக்கின்றன.

2. **எழுத்து வெட்டுப் பிழை** யென்பது: ஒரு எழுத்தின் உறுப்புகளில் ஒன்றிரண்டை ஒரு வரியின் கடைசியில் போட்டுவிட்டு, ஒன்றிரண்டை அடுத்த வரியின் முதலில் போடுவது. உதாரணம்: – **கொ** – என்பதை கொம்பை மட்டும் முதல் வரியின் கடைசியில் போட்டுவிட்டு, – கா – என்பதை அடுத்த வரியின் துவக்கத்தில் போடுவது. இது எழுத்து வெட்டுப் பிழை. அரிச்சுவடி நன்ருய்ப் படித்து, மூன்று உறுப்புக்கள் இருந்த போதிலும் ஒரே எழுத்துத் தான் என்பதை அறிந்திருந்தால் ஒரு எழுத்தை இரண்டாய் வெட்டிப் போட முடியாது. இவ்வகைப் பிழை நீங்க அரிச்சுவடி படிப்பதே போதும். இதற்கு முதலாம் பாடப் படிப்பே உதவும்.

3. **குறில், நெடில் வேறுபாடு அறியாப் பிழை** யென்பது: ஒரு சொல்லின் முதலில் குறிலுக்குப் பதிலாக நெடிலையோ, நெடிலுக்குப் பதிலாகக் குறிலையோ போடும் செய்கையாகும். இப்படிப் போடுவதால் சொல்லொலிக்குப் பொருந்த எழுத்தொலி அமையாப் பிழையொன்றும், பொருள் மாறுபடும் பிழையொன்றுமாக இரண்டு பிழைகள் ஏற்பட்டு விடுகின்றன. இவ்வகைப் பிழையை நீக்க பொருள் மாறுபாடு ஏற்படும்படியான குறில் நெடில் சொற்கள் என்ற இரண்டாம் பாடம் அமைக்கப்பட்டிருக்கிறது.

4. **மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் அறியாப் பிழை** யென்பது: "இலை" என்பதை "யிலை" யென்று எழுதுவது

போன்றது. இவ்வகைப் பிழைகளை நீக்க "மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்" என்ற மூன்றும் பாடமும், "மொழிக்கு முதலில் வரக்கூடாத எழுத்துக்கள் வந்த பிழையும் அவற்றின் திருத்தமும்" என்ற நான்காம் பாடமும் போடப்பட்டிருக்கின்றன.

5. **மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் அறியாப் பிழை** யென்பது: மொழியின் இறுதியில் போடக் கூடாத எழுத்தைப் போடுவது. உதாரணம் 'ஊர்' என்பதை 'ஊற்' என்று எழுதுவது. இவ்வகைப் பிழைகளை நீக்க, "மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள்" என்ற ஐந்தாம் பாடமும், "மொழிக்கு இறுதியில் வரக்கூடாத எழுத்துக்கள் வந்த பிழையும், அவற்றின் திருத்தமும்" என்ற ஆறும் பாடமும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

6. **மொழிக்கு இடையில் சந்திக்கும் எழுத்துக்கள், இவை சந்திக்கக் கூடாத எழுத்துக்கள் இவையெனத் தெரியாப் பிழை** யென்பது: "வந்தான்" என்பதை "வன்தான்" என்று எழுதுவது. இவ்வகைப் பிழைகளை நீக்க "மொழிக்கு இடையில் சந்திக்கக் கூடாத எழுத்துக்கள் சந்திக்க எழுதுவதால் ஏற்படும் பிழைகளும், அவற்றின் திருத்தமும்" என்ற ஏழாம் பாடம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

7. **ரகர, றகரப் பொருள் வேறுபாடு அறியாப் பிழை** யென்பது: ஒரு சொல்லில் இடையின ரகரம் சேர்ப்பதாலும் வல்லின றகரம் சேர்ப்பதாலும் பொருள் மாறுபடுகிறது என்பதை அறியாப் பிழையாகும். உதாரணம் "அரம்", "அறம்". இடையின ரகரம் போடுவதால் ஒரு பொருளும், வல்லின றகரம் போடுவதால் இன்னொரு பொருளும்

ஏற்படுகிறதென்பதை அறியாவிட்டால் ஏதேனும் ஒன்றைப் போட்டுவிடுவார். அது அவர் கருதிய பொருளுக்கு மாறான பொருளைத் தரும். இவ்வகைப் பிழையைப் போக்க "ரகர, றகர வேறுபாடு" என்ற எட்டாம் பாடம் சேர்க்கப் பட்டிருக்கிறது.

8. **ளகர, ழகரப் பொருள் வேறுபாடு அறியாப் பிழை** யென்பது: ஒரு சொல்லில் ளகரம் சேர்ப்பதாலும், ழகரம் சேர்ப்பதாலும் பொருள் மாறுபடுகிறதென்பதை அறியாமல் ஏற்படும் பிழையாகும். உதாரணம் "அளி", "அழி" இவ் விரண்டும் வெவ்வேறு பொருள்களைத் தருவதைக் காண்க. இவ்வகைப் பிழைகள் ஏற்படாமல் தடுக்க "ளகர, ழகர வேறுபாடுகள்" என்னும் ஒன்பதாம் பாடம் அமைக்கப்பட்டிருக்கிறது.

9. **லகர, ழகர, ளகர வேறுபாடு அறியாப் பிழை** யென்பது: அலகு, அளகு, அழகு என்பன போன்றன. ஒன்றை நினைத்துக்கொண்டு இவைகளில் ஒன்றைப் போட்டால் பொருள் வேறுபட்டுப் போகும். பிழையுமாகும். இப்படிப் பட்ட பிழைகள் வாராதபடி காக்க "லகர, ழகர, ளகர வேறு பாடுகள்" என்னும் பத்தாம் பாடம் அமைக்கப்பட்டிருக்கிறது.

10. **னகர, ணகர பொருள் வேறுபாடு அறியாப் பிழை** யென்பது: சில இடங்களில் "சனிக்கிழமை" என்பதைச் "சணிக்கிழமை" என்றும், "பனிக் காலம்" என்பதைப் "பணிக் காலம்" என்றும் எழுதுவதாகும். இது பிழையே யாயினும் பொருள் மாறுபாடு ஏற்படாது. ஆனால், ஆனி, ஆணி என்பதில் பொருள் மாறுபட்டுப் போகும். இவ் வகைப் பிழைகளைப் போக்க "ணகர, னகர வேறுபாடு" என்னும் பதினோராம் பாடம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

முதலாம் பாடம்

தமிழ் நெடுங் கணக்கும், வழக்கத்தில் இருக்கும் வடமொழியெழுத்தும்

குறிப்பு

தமிழ் நெடுங் கணக்கு முதற் பாகத்தில் "தமிழ் எழுத்துக்கள் கற்கும் வகை" என்னும் பகுதியில் போடப்பட்டிருப்பதால், இங்கு விடப்படுகிறது. வடமொழி எழுத்துக்கள் 65 மட்டும் இங்கு அமைக்கப்பட்டிருக்கிறது.

வடமொழி எழுத்துக்கள்

ஜ ஜா ஜி ஜீ ஜு ஜூ ஜெ ஜே ஜை ஜொ ஜோ ஜௌ ஜ்

ஸ ஸா ஸி ஸீ ஸு ஸூ ஸெ ஸே ஸை ஸொ ஸோ ஸௌ ஸ்

ஷ ஷா ஷி ஷீ ஷு ஷூ ஷெ ஷே ஷை ஷொ ஷோ ஷௌ ஷ்

க்ஷ க்ஷா க்ஷி க்ஷீ க்ஷு க்ஷூ க்ஷெ க்ஷே க்ஷை க்ஷொ க்ஷோ க்ஷௌ க்ஷ்

ஹ ஹா ஹி ஹீ ஹு ஹூ ஹெ ஹே ஹை ஹொ ஹோ ஹௌ ஹ்

இரண்டாம் பாடம்

பொருள் மாறுபாடு ஏற்படும்படியான
குறில் நெடில் சொற்கள்

குறில்	நெடில்	குறில்	நெடில்
அசை	ஆசை	கடை	காடை
அடி	ஆடி	கட்டு	காட்டு
அடை	ஆடை	கண்	காண்
*அட்டம்	ஆட்டம்	கத்தல்	காத்தல்
அணி	ஆணி	கந்தம்	காந்தம்
அணை	ஆணை	கம்பு	காம்பு
அத்தி	ஆத்தி	கரம்	காரம்
அப்பம்	ஆப்பம்	கரி	காரி
அப்பு	ஆப்பு	கரை	காரை
*அமை	ஆமை	கலம்	காலம்
அரை	ஆரை	கலி	காலி
அலி	ஆலி	கலை	காலை
அலை	ஆலை	கல்	கால்
அவி	ஆவி	கவி	காவி
அழ	ஆழ	கவல்	காவல்
அழி	ஆழி	களி	காளி
அள்	ஆள்	களை	காளை
அறு	ஆறு	கற்று	காற்று
அரம்	ஆரம்	கனகம்	கானகம்
கங்கை	காங்கை	சட்டை	சாட்டை
கஞ்சி	காஞ்சி	சடை	சாடை
கடி	காடி	சட்டி	சாட்டி
*கடு	காடு	சதம்	சாதம்

*அட்டம் = எட்டு; *அமை = உண்டாக்கு; *கடு = விஷம்.

குறில்	நெடில்	குறில்	நெடில்
சந்து	சாந்து	பத்தி	பாத்தி
சந்தி	சாந்தி	பந்தம்	பாந்தம்
சமம்	சாமம்	பல்	பால்
சம்பு	சாம்பு	பலம்	பாலம்
சரம்	சாரம்	பனை	பானை
சலம்	சாலம்	மக்கள்	மாக்கள்
தங்கு	தாங்கு	மடி	மாடி
தடி	தாடி	மடு	மாடு
தட்டு	தாட்டு	மதம்	மாதம்
தண்டு	தாண்டு	மந்தம்	மாந்தம்
தரை	தாரை	மரி	மாரி
தளம்	தாளம்	மலை	மாலை
தனம்	தானம்	வசி	வாசி
நகம்	நாகம்	வடை	வாடை
நக்கு	நாக்கு	வட்டம்	வாட்டம்
நடு	நாடு	வதை	வாதை
நரி	நாரி	*வந்தி	வாந்தி
நரை	நாரை	வரம்	வாரம்
பகல்	பாகல்	வலம்	வாலம்
பங்கு	பாங்கு	வலை	வாலை
பசி	பாசி	வழி	வாழி
படம்	பாடம்	இடு	ஈடு
படி	பாடி	கிரி	கீரி
படு	பாடு	சிவன்	சீவன்
பட்டு	பாட்டு	திட்டி	தீட்டி
பட்டி	பாட்டி	திட்டு	தீட்டு
படை	பாடை	திண்டு	தீண்டு
பண்டம்	பாண்டம்	நிதம்	நீதம்
பதம்	பாதம்	பிழை	பீழை

*வந்தி = வணங்கு.

குறில்	நெடில்	குறில்	நெடில்
மிதம்	மீதம்	மெய்	மேய்
விடு	வீடு	வெட்டி	வேட்டி
விண்	வீண்	வெல்	வேல்
விதி	வீதி	ஒடி	ஓடி
விழி	*வீழி	ஒட்டை	ஓட்டை
உண்	ஊண்	கொடி	கோடி
உழை	ஊழை	கொடை	கோடை
குகை	கூகை	கொடு	கோடு
குடை	கூடை	கொல்	கோல்
குண்டு	கூண்டு	கொள்	கோள்
குறி	கூறி	தொகை	தோகை
குனி	கூனி	தொடு	தோடு
சுடு	சூடு	தொட்டி	தோட்டி
சுரை	*சூரை	தொண்டு	தோண்டு
சுளை	சூளை	நொய்	நோய்
தூக்கம்	தூக்கம்	பொய்	போய்
துண்டு	தூண்டு	மது	மாது
புசி	பூசி	மடம்	மாடம்
முக்கு	மூக்கு	மனம்	மானம்
முட்டை	மூட்டை	மிசை	மீசை
முடி	மூடி	முளை	மூளை
*முப்பு	மூப்பு	மெய்	மேய்
எடு	ஏடு	மொட்டை	மோட்டை
எரி	ஏரி	யுகம்	யூகம்
கெடு	கேடு	வடி	வாடி
செய்	சேய்	வகை	வாகை
செவி	சேவி	வதை	வாதை
பெண்	பேண்	வதம்	வாதம்
பெய்	பேய்	வனம்	வானம்

*வீழி = ஒரு கொடி; *முப்பு = ஒரு வைப்புச்சரக்கு;
*சூரை = ஒருசெடி.

மூன்றாம் பாடம்

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	12
க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ	12
ங												1
ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ	12
ஞ	ஞா					ஞெ			ஞொ			4
த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ	12
ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ	12
ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ	12
ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ	12
ய	யா			யு	யூ					யோ	யௌ	6
வ	வா	வி	வீ			வெ	வே	வை			வௌ	8
											ஆக	103

உதாரணம்

அரிசி	சீப்பு	நீர்	மெழுகு
ஆறு	சுண்ணாம்பு	நுங்கு	மேழி
இலை	சூரியன்	நூல்	மைசூர்
ஈயம்	செங்கல்	நெல்	மொட்டு
உரல்	சேலை	நேர்	மோர்
ஊசி	சைவம்	நையாண்டி	மௌலி
எருது	சொல்	நொண்டி	(கிரீடம்)
ஏர்	சோர்வு	நோன்பு	யவனர்
ஐயம்	சௌந்தரம்	நௌவி	யானை
ஒட்டகம்	ஞயம்	(மான்)	யுகம்
ஓமம்	ஞாலம்	பழம்	யூகம்
ஔவை	ஞெண்டு	பாட்டு	யோசனை
கல்வி	ஞொள்கல்	பிட்டு	யௌவனம்
காலை	தங்கம்	பீர்க்கு	வண்டி
கிழக்கு	தானியம்	புதுமை	வாழை
கீரை	திண்ணை	பூமி	விதை
குதிரை	தீனி	பெட்டி	வீணை
கூடு	துண்டு	பேட்டை	வெல்லம்
கெண்டி	தூண்	பையன்	வேழம்
கேணி	தெரு	பொன்னன்	வைத்தியம்
கைத்தறி	தேள்	போர்வை	வௌவால்
கொடி	தையல்	பௌவம்	
கோரை	தொட்டி	மல்லிகை	
கௌதாரி	தோள்	மாலை	★
ஙனம்	தௌவுதல்	மின்னல்	ஆகச்
சர்க்கரை	நண்டு	மீன்	சொற்கள்
சாலை	நாய்	முள்ளங்கி	103
சிலை	நிலை	மூத்தவர்	★

நான்காம் பாடம்

மொழிக்கு முதலில் வரக்கூடாத எழுத்துக்கள் வந்த பிழைகளும், அவற்றின் திருத்தங்களும்

உதாரணம்

பிழை	திருத்தம்	பிழை	திருத்தம்
யிலை	இலை	வோடம்	ஓடம்
யீகை	ஈகை	னண்டு	நண்டு
யெருது	எருது	னரி	நரி
யேக்கம்	ஏக்கம்	னாரை	நாரை
வுண்டு	உண்டு	னிலம்	நிலம்
வூக்கம்	ஊக்கம்	னோன்பு	நோன்பு
வொட்டகம்	ஒட்டகம்	னோயாளி	நோயாளி

குறிப்பு:- மொழிக்கு முதலில் வரக்கூடிய எழுத்துக்கள் இன்னின்னவை யென்றும், மொத்தம் இத்தனையென்றும், நன்னூல் விதிக்கிணங்க, மூன்றும் பாடத்தில் வரையறுத்து குறிப்பிடப்பட்டிருக்கின்றன. யகர வரியிலும், வகர வரியிலும் மொழிக்கு முதலில் வரக்கூடிய எழுத்துக்கள் சில உள. எனினும் யி, யீ, யெ, யே; வு, வூ, வொ, வோ - இவைகள் விடுபட்டிருப்பதைக் கவனிக்க. மேலும், அவ்வட்டவணையில் னகரவரி முழுவதும் விடுபட்டிருப்பதையும் நோக்குக. மேலே எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் பிழைச் சொற்களில், அவ்வட்டவணையில் குறிக்கப்படாத எழுத்துக்களே முதலில் வந்திருப்பதைக் கூர்ந்து நோக்கி, பிழைகள் இவையென்று முடிவு செய்துகொள்க.

யகர வரியில் சில உயிர்மெய்களும், வகர வரியில் சில உயிர்மெய்களும், அவ்வத் தொடர்புடைய உயிரெழுத்துப் போலவே உச்சரிக்கப்படுவதாலும், றன்னகர உயிர்மெய் (ன), தந்நகர உயிர்மெய் (ந) போல் உச்சரிக்கப்படுவதாலும் இம்மாதிரிப் பிழைகள் ஏற்பட்டுவிடுகின்றன. விதியைக் கவனித்து இவ்வகைப் பிழைகளை விலக்கிவிடுக.

ஐந்தாம் பாடம்

மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள்

ஆவி ஞணநமன யரலவ ழளமெய்
சாய் முகரநா லாறு மீறே (ந. சூ. 107)

உயிரெழுத்துக்கள் எல்லாம் 12
மெய்யெழுத்துக்களில்
ஞ், ண், ந், ம், ய், ர், ல், வ், ழ், ள், ன் ... 11
குற்றியல் உகரம் 1

உதாரணம் ஆக 24

சொல்	இறுதியில் நிற்கும் எழுத்து	சொல்	இறுதியில் நிற்கும் எழுத்து
பல	ல் + அ = ல	* * * * *	*
பலா	ல் + ஆ = லா	மண்	ண்
கிளி	ள் + இ = ளி	* * * * *	*
சிச்சீ	ச் + ஈ = சீ	பழம்	ம்
கொசு	ச் + உ = சு	காய்	ய்
தாழம்பூ	ப் + ஊ = பூ	மலர்	ர்
* * * * *	* * * * *	பல்	ல்
* * * * *	* * * * *	தெவ்	வ்
உலக்கை	க் + ஐ = கை	சிமிழ்	ழ்
* * * * *	* * * * *	எள்	ள்
கடுங்கோ	க் + ஓ = கோ	தேன்	ன்
* * * * *	* * * * *	வரகு	குற்றியல். உ.

குறிப்பு:— உயிரெழுத்துக்களில் "எ, ஏ, ஒ, ஔ" என்ற 4 எழுத்துக்களும், மெய்யெழுத்துக்களில் "ஞ், ங்" என்ற 2 எழுத்துக்களும் மொழிக்கு இறுதியில் வர விதி பெற்றிருக்கின்றன. ஆனால், அவைகள் பண்டைய இலக்கியங்களில் மிக அபூர்வமாக மாத்திரம் பயிலப்பட்டிருப்பதுடன், இக்கால வழக்குகளில் அறவே பயிலப்படாதிருப்பதால், உதாரணம் கொடுக்க முடியவில்லை. *உடுக்குறி அதற்கு அறிகுறி.

ஆரும் பாடம்

மொழிக்கு இறுதியில் வரக்கூடாத எழுத்துக்கள் வந்த பிழைகளும், அவற்றின் திருத்தங்களும்

உதாரணம்

பிழை	திருத்தம்	பிழை	திருத்தம்
பட்டற்	பட்டர்	பிராமணற்	பிராமணர்
பயிற்	பயிர்	ஊற்	ஊர்
தவிற்	தவிர்	சென்றுந்	சென்றுன்
இராமற்	இராமர்	வண்ணுந்	வண்ணுன்

குறிப்பு:-சில இடங்களில் வல்லின றகரத்தையும், இடையின ரகரத்தையும் பேதமின்றி உச்சரிப்பதால், இடையின ரகர ஒற்றுக்குப் பதிலாக வல்லின றகர ஒற்றைப் போட்டுவிடுகிறார்கள். அவ்வகைப் பிழைகளை, விதியைக் கவனித்து விலக்கிவிட வேண்டும்.

நகர ஒற்று மொழிக்கு இறுதியில் வர விதி பெற்றிருந்தபோதிலும், மேலே காட்டப்பட்டவைகளில் விகுதியாக வருதலால், "ஆன்" விகுதியில் நகர ஒற்று வருவதில்லை என்று தெரிந்து, மேலேகண்ட விதமாகத் திருத்தம் செய்துகொள்க. மேலும் தந்நகர ஒற்று மொழியின் இறுதியில் பயிலப்பட்டிருப்பதாக உதாரணம் கிடைக்கவேயில்லை யென்பதையும் தெரிந்துகொள்க.

ஏழாம் பாடம்

மொழிக்கு இடையில் சந்திக்கக்கூடாத எழுத்துக்கள் சந்திக்க எழுதுவதால்

ஏற்படும் பிழைகளும், அவற்றின் திருத்தங்களும்

உதாரணம்

பிழை	திருத்தம்	சந்தி விளக்கம்.
தன்டனை வன்டி	தண்டனை வண்டி	ட், ண்-இவ்விரண்டும் இனவெழுத்துக்கள். ஆகையால் ண், ட்-சந்திக்குமேயொழிய ன், ட் சந்திக்கா.
வன்தான்	வந்தான்	த், ந்-இனம். ன்-இவற்றின் இனமல்ல. ஆகையால், ன்-சந்திக்காது.
குன்ரு பந்றி	குன்று பன்றி	ற், ன்-இனம். ந், ர்-இவற்றின் இனமல்ல. ஆகையால் ன்-பின்-ர்-ஆவது, ற்-முன் ந்-ஆவது சந்திக்காது.
கல்க்கி	கல்கி	ல்-பின் எந்த ஒற்றும் இரட்டிக்காது
கற்ப்பு	கற்பு	ற்-பின் எந்த ஒற்றும் இரட்டிக்காது

குறிப்பு:- ங்-பின் க் வரும்; ஞ்-பின் ச் வரும்; ந்-பின் த் வரும்; ட்-பின்னும், ற்-பின்னும், க், ச், ப் முதலியவை வரும்; ண்-பின்னும், ன்-பின்னும் ட், ற் முதலியவைகளும், க், ச், ஞ், ப், ம், ய், வ் ஆகியவைகளும் வரும்; ம்-பின் ப், ய், வ் முதலியவைகள் வரும். ய், ர், ழ் முதலிய எழுத்துக்களின் பின் மொழி முதல் எழுத்துக்கள் வரும். ல், ள் பின் க், ச், ப் முதலிய எழுத்துக்கள் இரட்டிக்காமல் சந்திக்கும். இரட்டித்து ஒலிக்குமிடத்து ல்-ற் ஆகவும், ள்-ட் ஆகவும் மாறிக்கொள்ளும்.

எட்டாம் பாடம்

ரகர, றகர வேறுபாடு

எண்	சொல்	பொருள்	சொல்	பொருள்
1	அரம்	இரும்பைத் தேய்க்கும் கருவி	அறம்	வரையறுக்கப்பட்டது (அறு-பகுதி)
2	அரி	திருமால், அரிந்துவிடு (ஏவல்)	அறி	தெரிந்துகொள் (ஏவல்)
3	அருகு	சமீபம், பக்கம்	அறுகு	அறுகம் புல்
4	அருந்து	சாப்பிடு	அறுந்து	வெட்டுண்டு, அறுபட்டு.
5	அரை	பாதி, அரை என்னும் ஏவல்	அறை	வீட்டின் அறை, சொல், அடி.
6	இர	பிச்சையெடு	இற	செத்துப்போ.
7	இரங்கு	மனமிரங்கு, இரக்கங்கொள்	இறங்கு	கீழே யிறங்கு.
8	இரை	திணி, ஒலியிடு	இறை	சிதறு, தீர்வை
9	உரல்	'உரல்' என்னும் பொருள்	உறல்	பொருந்துதல்
10	உரி	தோலுரி, மர்ப்பட்டை, அரைப்படி	உறி	தூக்கும் பொருள்
11	உரை	சொல், தேய்	உறை	மூடி, இடம்
12	ஊர	நகர	ஊற	சுரக்க, நனைய.
13	எரி	தீ (எரிவது எரி)	எறி	எறிந்துவிடு என்னும் ஏவல்

எண்	சொல்	பொருள்	சொல்	பொருள்
14	ஏரி	வெட்டப் படாத குளம்	ஏறி	மேலே ஏறி
15	ஒரு	ஒன்று	ஒறு	தண்டி
16	கர	ஒளிந்துகொள்	கற	பால் கற என்னும் ஏவல்
17	கரி	யானை (கர-முடையது) அடுப்புக்கரி	கறி	காய்கறி, மிளகு, கடி
18	கருத்து	எண்ணம், நினைவு	கறுத்து	கோபித்து
19	கருப்பு	பஞ்சம்	கறுப்பு	கருமையான நிறம், பேய்
20	கரை	ஓரம், குளக்கரை, கரைத்தல்	கறை	களங்கம், மாசு, குற்றம்
21	கீரி	கீரி யென்னும் பிராணி	கீறி	கிழித்து, எழுதி (வினையெச்சம்)
22	குரங்கு	வானரம்	குறங்கு	தொடை
23	குரம்	குளம்பு	குறம்	குறத்தி சொல்லும் குறி
24	குரவன்	பெரியோன், ஆசிரியன்	குறவன்	ஒரு குலத்தான்
25	குரவை	கூத்து	குறவை	ஒரு வகை மீன்
26	குரு	ஆசிரியன், சிறு பரு	குறு (குறுமை)	குட்டையான (பெயரெச்சம்)

 24

எண்	சொல்	பொருள்	சொல்	பொருள்
27	குருகு	ஓர் பறவை	குறுகு	சமீபி, கிட்டு (ஏவல்)
28	குருக்கு	ஒரு செடி	குறுக்கு	நடு முதுகு, நடு, இடை
29	குரும்பை	தென்னை, பனை முதலியவற்றின் பிஞ்சு	குறும்பை	ஓர் ஜாதி ஆடு
30	கூரிய	கூர்மையான (பெயருரிச் சொல்)	கூறிய	சொல்லிய (பெயருரிச் சொல்)
31	கூரை	முகடு, வீட்டின் மேற்புறம் (கூராயிருப்பது)	கூறை	துணி, புடைவை (கூறு செய்யப் பட்டது)
32	கோரல்	விரும்புதல் (கோரு-பகுதி)	கோறல்	கொல்லுதல் (கொல்-பகுதி)
33	சுரா	கள்	சுறா	ஒருவகை மீன்
34	செரு	போர்	செறு	வயல், கோபி, திணி
35	சொரி	பொழி, கொடு	சொறி	சிரங்கு (சொறியச் செய்வது)
36	தரி	அணி, பொறு, தங்கு	தறி	வெட்டு, துணி நெய்யும் தறி
37	தரு	மரம்	தறு	கட்டு, முடி
38	திரை	அலை	திறை	கப்பம், அரசிறை
39	துரவு	பெரிய கிணறு	துறவு	துறத்தல், ஆசையைநீக்கல்

எண்	சொல்	பொருள்	சொல்	பொருள்
40	துரத்தல்	ஓட்டுதல்	துறத்தல்	நீக்குதல், ஒழித்தல்
41	துரை	பிரபு, தலைவன்	துறை	நீர் நிலையில் இறங்குமிடம்
42	தெரி	தோன்று, பொறுக்கியெடு	தெறி	சிதறு, விரலால் உந்து
43	தெரு	வீதி	தெறு	அழி
44	தேரல்	ஆராய்தல், பயிலல்	தேறல்	தெளிதல், தேன்
45	நாரி	பெண்	நாறி	நாற்றமெடுத்து
46	நிருத்தம்	நடனம், நடம்	நிறுத்தம்	நிறுத்தல்
47	நிரை	வரிசை, மந்தை	நிறை	மனவடக்கம்
48	நெரி	நொருக்கு, நசுக்கு	நெறி	வழி, மதம், நீதி
49	பரந்த	பரவிய	பறந்த	பறவை-பறந்த
50	பரவை	கடல்	பறவை	பட்சி, புள்
51	பரி	குதிரை	பறி	பிடுங்கு
52	பரை	பார்வதி	பறை	சொல், தம்பட்டம்
53	பாரை	கம்பி, கடப்பாறை	பாறை	கற்பாறை
54	புரணி	ஊன்	புறணி	புறங்கூறுதல்
55	புரம்	பட்டணம்	புறம்	பக்கம், முதுகு
56	பெரு	பெரிய	பெறு	அடை
57	பொரி	நெற்பொரி	பொறி	யந்திரம் (பெயர்ச்சொல்)

எண்	சொல்	பொருள்	சொல்	பொருள்
58	பொரு	போர் செய்	பொறு	பொறுத்துக்கொள்
59	பொருப்பு	மலை	பொறுப்பு	கடமை, உத்தரவாதம்
60	மரத்தல்	உணர்ச்சியறல்	மறத்தல்	மறந்துபோதல்
61	மரம்	விருட்சம்	மறம்	வீரம், பாவம், கொலை
62	மரித்தல்	சாதல்	மறித்தல்	தடுத்தல் (மான் குட்டி = மறி)
63	மரு	வாசனை	மறு	குற்றம், களங்கம், மற்ற.
64	மருகு	மருக்கொழுந்து	மறுகு	மயங்கு, நெடுந்தெரு.
65	மரை	ஒருமான், திருகுசுரை	மறை	மறைப்பாயாக, வேதம், இரகசியம்.
66	மாரன்	மன்மதன்	மாறன்	பாண்டியன்
67	மாரி	மழை	மாறி	வேறுபட்டு
68	முரி	ஒடி, கெடு	முறி	தளிர், இலை, பட்டயம்.
69	முருகு	அழகு, இளமை, வாசனை	முறுகு	திருகு, பதங்கடந்து வேகு.
70	முருக்கு	ஓர்வகை மரம்	முறுக்கு	திருக்கு, அதட்டு, தின்பண்டம் - முறுக்கப்பட்டது
71	மெய்யுரை	உண்மைச்சொல்	மெய்யுறை	கவசம், மேலங்கி

எண்	சொல்	பொருள்	சொல்	பொருள்
72	வரம்	அருள்(கொடுக்கப்பட்டது)	வறம்	வறட்சி
73	வருத்தல்	துன்பப்படுத்தல்	வறுத்தல்	காய், பயறு முதலியன வறுத்தல்
74	வரை	மலை, மூங்கில், அளவு	வறை	துவட்டற்கறி, பொரித்தகாய்கறி
75	விரகு	தந்திரம், வஞ்சகம்	விறகு	எரிக்குங்கட்டை
76	விரல்	கைகால் விரல்	விறல்	வெற்றி, வலிமை
77	விரை	விதை-பெயர்ச்சொல், வேகமாகு - வினை	விறை	கடினமாகு, விறைத்துப்போ
78	வீரி	காளி	வீறி	ஓங்கி
79	வெரு	பயமுறுத்து	வெறு	பகை
80	காரல்	காரித்துப்பல்	காறல்	அதேபொருள்
81	சுரண்டு	வருடு	சுறண்டு	,,
82	சுரீர்	ஒலிக்குறிப்பு	சுறீர்	,,
83	சுருசுருப்பு	அவசரம்	சுறுசுறுப்பு	,,
84	தருவாய்	தருணம்	தறுவாய்	,,
85	நருக்கு	துண்டு	நறுக்கு	,,

ஒன்பதாம் பாடம்

ளகர, ழகர வேறுபாடுகள்

எண்	சொல்	சொல்லமைப்பும், பொருளும்.	சொல்	சொல்லமைப்பும், பொருளும்.
1	அளகு	(பெயர்ச்சொல்) பெண் பறவை (சிறிய மூக்குடையது)	அழகு	(பெயர்ச்சொல்) அலங்காரம்
2	அளி	(பெயர்) வண்டு; (வினை) கொடு, பாதுகா	அழி	(வினை) கெடு
3	அளை	(பெயர்)-தயிர், குகை; (வினை)-துழாவுதல்	அழை	(வினை) கூப்பிடு
4	ஆளி	(பெயர்) அரசன் ஆள்வோன், சிங்கம்.	ஆழி	(பெயர்) கடல், சக்கரம், மோதிரம்.
5	ஆள்	(பெயர்) மனிதன் (வினை) உபயோகி (கையாள்)	ஆழ்	(வினை) ஆழ்ந்துபோ
6	ஆள்வார்	(பெயர்) ஆளுவோர், ஆளுகின்றவர்கள்	ஆழ்வார்	(வினையாலணையும் பெயர்) திருமால் பக்தியில் ஆழ்ந்தவர்கள்
7	இளை	(ஏவல் வினை) மெலி, களை	இழை	(ஏவல்) தேய், செய்; (பெயர். நூல், உள்ளம்

எண்	சொல்	சொல்லமைப்பும், பொருளும்.	சொல்	சொல்லமைப்பும், பொருளும்.
8	இளை	(வினை) மென்மையாகு	இழை	(வினை) இழந்துபோ
9	உளவு	வேவு பார்த்தல், மறைந்திருந்து கவனித்தல்	உழவு	(பெயர்) பயிர்த் தொழில், வருத்-தம், முயற்சி
10	உளி	தறிக்குங் கருவி	உழி	இடம், ஏழாம் வேற்றுமை யுருபு
11	கிளி	ஒரு பறவை	கிழி	துணியைக்கிழி-ஏவல்
12	குளவி	தேனீ	குழவி	குழந்தை
13	குளம்பு	பெயர்-விலங்-கின் பாதம்	குழம்பு	காய்கறிக்-குழம்பு
14	குளி	(வினை) குளிப்பாயாக	குழி	(பெயர்) சிறு கிடங்கு, பள்ளம் (குழலுடையது)
15	கூளம்	குப்பை, வைக்கோல்	கூழம்	எள்
16	கூளி	(பெயர்) பேய்	கூழி	(பெயர்) குள்ளப் பசு
17	கேள்	(வினை) செவி-கொடு, (பெயர்) சிநேகி-தன் (கேட்பவன்)	கேழ்	(வினை) பொருந்து; (பெயர்) நிறம்
18	கொளு	(வினை) பொருந்து; (பெயர்) பொருத்தம்	கொழு	(வினை) கொழுப் பாகு; (பெயர்) ஏர்க்காறு

எண்	சொல்	சொல்லமைப்பும், பொருளும்.	சொல்	சொல்லமைப்பும், பொருளும்.
19	கொளு-ந்து	(பெயர்) தீ	கொழு-ந்து	(பெயர்) இள இலை, மருக்கொழுந்து
20	கோளி	(வி.அ.பெ.) கொள்பவள்; (பெயர்) ஆல்; அத்தி	கோழி	(பெயர்) ஒரு பறவை
21	சுளி	(வினை) முகங்-கோணு, கோபி	சுழி	(வினை) வளை, வட்டமிடு; (பெயர்) நீர்ச்சுழி
22	சூள்	(பெயர்) ஆணை	சூழ்	(வினை) ஆராய், முற்றுகையிடு
23	சோளம்	,, ஒரு தானியம்	சோழம்	(பெயர்) ஒரு நாடு
24	தளை	,, கட்டு, விலங்கு; (வினை) கட்டிப் போடு	தழை	,, இலை; (வினை) தழைத் தோங்கு
25	தாளம்	(பெயர்) இசைக் கால அளவு	தாழம்	(பெயர்) தாழ்வு
26	தாள்	(பெயர்) கால், முயற்சி, அடித் தண்டு	தாழ்	,, கதவடை-கோல்; (வினை) பணிந்துபோ
27	தெளி	(வினை) தெளி-வாகு, சிதறு	தெழி	(வினை) அதட்டு, வருத்து

எண்	சொல்	சொல்லமைப்பும், பொருளும்	சொல்	சொல்லமைப்பும், பொருளும்.
28	தோளன்	(பெயர்) நண்பன் (தோள்மேல் கை போட்டுப் பேசுபவன்) தோளுக்கு துணையாபவன்	தோழன்	(பெயர்) நண்பன்
29	நாளி	(பெயர்) மூங்கில், நாய்	நாழி	(பெயர்) படி, நாழிகை
30	பளு	,, கனம்	பழு	(வினை) முதிர், கனி
31	பீளை	,, கண்-மலம்	பீழை	(பெயர்) புழுங்-குதல், துன்பம்
32	புளுகு	,, பொய்	புழுகு	(பெயர்) புனுகு
33	பூளை	,, இலவம்-பஞ்சு	பூழை	,, துவாரம், சிறு வாசல்
34	பொளி	(வினை) கொத்து, சுத்தியாலடி	பொழி	(வினை) ஊற்று, சொரி
35	முளவு	(பெயர்) முள்ளம்பன்றி	முழவு	(பெயர்) மத்தளம்
36	முளை	(பெயர்) முளைத்தவித்து (வினை) தோன்று	முழை	,, குகை
37	மூளை	(பெயர்) மண்டை உள்ளிருக்கும் பொருள்	மூழை	,, அகப்பை, துடுப்பு
38	வளி	(பெயர்) காற்று	வழி	,, பாதை
—	கிளவி	சொல்	கிழவி	வயதானவள்

எண்	சொல்	சொல்லமைப்பும், பொருளும்	சொல்	சொல்லமைப்பும், பொருளும்.
39	வாளி	(பெயர்) அம்பு, வளையம்	வாழி	(வியங்கோள் ஏவல்) வாழ்க
40	வாளை	,, ஒரு மீன்	வாழை	(பெயர்) ஒரு மரம்
41	வாள்	,, ஒரு கருவி, ஒளி	வாழ்	(வினை) வாழ்வாயாக
42	விளா	,, ஒரு மரம்	விழா	(பெயர்) திருவிழா, பண்டிகை
43	விளி	(வினை) கூப்பிடு, இற	விழி	(வினை) கண்திற, பார்
44	விளை	,, வளர், முதிர், உண்டு-பண்ணு	விழை	,, விரும்பு
45	வேளம்	(பெயர்) சிறைக் களம்	வேழம்	(பெயர்) கரும்பு, மூங்கில், யானை

பத்தாம் பாடம்

லகர, ழகர, ளகர வேறுபாடுகள்

எண்	சொல்	பொருள்	எண்	சொல்	பொருள்
1	அலகு	பறவையின் மூக்கு	19	ஒலி	சப்தம்
			20	ஒளி	வெளிச்சம்
2	அழகு	அலங்காரம்	21	ஒழி	மறை, நாசமாக்கு
3	அளகு	பெண் பறவை			
4	அலி	பால் பிரிவற்றது	22	கூலி	சம்பளம்
5	அழி	கெடு	23	கூழி	குள்ளப் பசு
6	அளி	கொடு	24	கூளி	பேய்
7	அலை	நீரின் அசைவு	25	கோலி	குண்டு
8	அழை	கூப்பிடு	26	கோழி	ஒரு பறவை
9	அளை	துழாவு	27	கோளி	ஆல், அத்தி மரங்கள்
10	ஆலி	பொம்மை			
11	ஆளி	சிங்கம்	28	சூல்	கருப்பம்
12	ஆழி	கடல்	29	சூழ்	ஆராய், முற்றுகையிடு
13	ஆல்	ஆலமரம்			
14	ஆழ்	ஆழ்ந்துபோ	30	சூள்	ஆணை
15	ஆள்	மனிதன்	31	தலை	சிரசு
16	இலை	வாழை இலை	32	தழை	இலை
17	இழை	நூல்	33	தளை	விலங்கு
18	இளை	மெலிந்துபோ			

எண்	சொல்	பொருள்	எண்	சொல்	பொருள்
34	பொலி	பெருகு	49	வாலை	மருத்துவக்கருவி
35	பொழி	ஊற்று, சொரி	50	வாழை	ஒரு மரம்
36	பொளி	கொத்து, சுத்தியால் அடி	51	வாளை	ஒரு வகை மீன்
			52	வால்	வால்
37	முலை	தனம், கொங்கை	53	வாழ்	வாழ்வாயாக
38	முழை	குகை	54	வாள்	ஒரு ஆயுதம்
39	முளை	முளைத்த வித்து	55	விலை	கிரையம்
			56	விழை	விரும்பு
40	மூலை	கோணம்	57	விளை	உண்டுபண்ணு
41	மூழை	அகப்பை, துடுப்பு		*	*
42	மூளை	மூளை	58	உலை	வேவிப்பது
			59	உழை	வேலை செய்
			60	உளை	சேறு
43	வலி	பலம்			
44	வழி	பாதை	61	கலை	கல்வி
45	வளி	காற்று	62	கழை	மூங்கில்
			63	களை	களையப்படுவது
46	வாலி	ஒருவன் பெயர்	64	குலை	கதிர், காய்குலை
47	வாழி	வாழ்க	65	குழை	காதணி, குழாயுடையது
48	வாளி	அம்பு	66	குளை	இலைத்திரள்

பதினோராம் பாடம்

ணகர, னகர வேறுபாடுகள்

எண்	சொல்	பொருள்	எண்	சொல்	பொருள்
1	அரண்	கோட்டை	15	கணி	கணக்கிடு
2	அரன்	சிவன்	16	கனி	பலன்
3	ஆணி	முளை போன்ற பொருள்	17	கணை	அம்பு
4	ஆனி	ஒரு மாதம்	18	கனை	சத்தமிடு
5	இவண்	இவ்விடம்	19	கண்ணி	முடிப்பு
6	இவன்	ஆண்பால் சுட்டுப் பெயர்	20	கன்னி	கலியாணமாகாத பெண்
7	உண்	சாப்பிடு	21	காணம்	ஒரு அளவை
8	உன்	உன்	22	கானம்	பாட்டு
9	ஊண்	உணவு	23	காண்	பார்
10	ஊன்	புலால்	24	கான்	காடு
11	எண்	எண்ணிக்கை	25	குணி	குணமுடையது
12	என்	என்	26	குனி	குனியென்னும் ஏவல், வில் (குனிவாயாக)
13	எவண்	எவ்விடம்	27	சுணை	பயிர்களில் இருப்பது
14	எவன்	எந்த ஆள்	28	சுனை	நீரூற்று

எண்	சொல்	பொருள்	எண்	சொல்	பொருள்
29	தணி	கீழே இறக்கு	43	மணு	ஒரு எடை
30	தனி	தனித்திரு	44	மனு	விண்ணப்பம்
31	துணி	தீர்மானி	45	மண்	மண்
32	துனி	ஊடலில் ஒரு வகை	46	மன்	நிலைப்பு, மிகுதி
33	நாண்	கயிறு	47	மாண்	மாண்பு
34	நான்	நான்	48	மான்	ஒரு மிருகம்
35	பணி	கட்டளையிடு	49	வாணம்	ஒரு வகைவெடி.
36	பனி	மழைபோல்வது	50	வானம்	ஆகாயம்
				*	*
37	பணை	பருமன்	51	தண்மை	குளிர்ச்சி
38	பனை	ஒரு மரம்	52	தன்மை	குணம்
			53	பேண்	காப்பாற்று
39	புணை	தெப்பம்	54	பேன்	தலைப் பேன்
40	புனை	செய்			
			55	மணம்	கலியாணம், வாசனை
41	மணை	பலகை	56	மனம்	மனம்
42	மனை	வீட்டிடம்			

ர ரா ரி ரீ ரு ரூ ரெ ரே ரை ரொ
ரோ ரௌ ர்

ல லா லி லீ லு லூ லெ லே லை
லொ லோ லௌ ல்

ன னா னி னீ னு னூ னெ னே
னை னொ னோ னௌ ன்

ற றா றி றீ று றூ றெ றே றை றொ
றோ றௌ ற்

ள ளா ளி ளீ ளு ளூ ளெ ளே ளை
ளொ ளோ ளௌ ள்

ண ணா ணி ணீ ணு ணூ ணெ ணே
ணை ணொ ணோ ணௌ ண்

ழ ழா ழி ழீ ழு ழூ ழெ ழே ழை
ழொ ழோ ழௌ ழ்

படங்களின் விளக்கம்

முதற் படத்தில் காட்டியபடி ரகர, லகர, னகர, வரிசைகளிலுள்ள எந்த எழுத்தை உச்சரித்தாலும், நாக்கு வாயின் முன் பாகத்தைத் தொடுவதையும், இரண்டாம் படத்தில் காட்டிய றகர, ளகர, ணகர வரிசைகளிலுள்ள எழுத்துக்களை உச்சரிக்கும்போது நாக்கு வாயின் நடுப் பாகத்தைத் தொடுவதையும், மூன்றும் படத்தில் காட்டிய ழகர வரிசை எழுத்துக்களை மட்டும் உச்சரிக்கும் போது நாக்கு வாயின் கடைசிப் பாகத்தைத் தொடுவதையும் கவனித்துக் கொண்டு, எழுத்துக்களைப் பேதம் நீங்கும் வரை தாமாகவே உச்சரித்துப் பழகுக.

எந்தப் புத்தகத்திலாவது ஒரு பக்கத்தை எடுத்துக் கொண்டு, அதில் இந்தப் படங்களிலுள்ள எழுத்துக்களின் வரிசையில் வரும் பல எழுத்துக்களும் பயன்பட்டிருக்கும் வார்த்தைகளை உச்சரித்துப் பார்த்து, அச் சமயங்களில் நாக்கு சுழலும் வகைகளைக் கவனித்துத் தெளிந்து கொள்க. மேலும் சொற்களை உச்சரிக்கும் போது, அவ்வச் சொற்களின் முதல் இடை, கடையிடங்களில் அவ்வெழுத்துக்கள் உச்சரிக்கப்படும் போது நாக்கு எவ்வெவ்வாறு மடிகிறது, எவ்வெவ் விடங்களைத் தொடுகிறது என்பதை ஊன்றிக் கவனித்துக் குறித்துக் கொள்க.

இவ்வாறு கவனித்து வந்தால் இயல்பாக எழுத்துக்களின் தனி ஒலிகளுக்கும், நாக்கின் அசைவுக்கும் சம்பந்தம் தெரிந்துவிடும். பிறகு நாக்கை வசப்படுத்தி உச்சரிப்பைச் சரியாக்கி விடலாம்.

மூன்றாம் பாகம்

சொற்பிழை நீக்கும் பாடங்கள்

கவனிப்பு

சொற் பிழைகள் (1) பகுதி, விகுதி கவனிக்காமையால் ஏற்படும் பிழைகள்; (2) நெருங்கிய ஒலியுடைய சொற்கள் சில பேச்சு வழக்கில் மாறிக்கொள்வதால் ஏற்படும் பிழைகள்; (3) மரூஉ வழங்குவதை மெய் வடிவு போல் கருதுவதால் ஏற்படும் பிழைகள்; (4) இலக்கியங்களில் பயின்றிருக்கும் மரபு தெரியாமையால் ஏற்படும் பிழைகள் (5) பெயர்ச்சொற்களில் சில பன்மை விகுதி மயக்கத்தால் ஏற்படும் பிழைகள்; (6) வினைச் சொற்களில் சில பன்மை விகுதி மயக்கத்தால் ஏற்படும் பிழைகள்; (7) பிறமொழிச் சொற்களை, அதனதன் ஒலிப்படி தமிழ் எழுத்தால் அமைக்காமையால் ஏற்படும் பிழைகள் என ஏழு வகைப்படும்.

1. **பகுதி, விகுதி கவனியாமையால்** ஏற்படும் பிழை என்பது: "செலவு" என்பதை "சிலவு" என்று எழுதுவது போன்றது. செல்-பகுதி. இவ்வகைப் பிழைகளை நீக்க "பகுதி, விகுதி கவனியாமையால் ஏற்படும் பிழைகளும், அவற்றின் திருத்தங்களும்" என்னும் முதலாம் பாடம் அமைக்கப்பட்டிருக்கிறது.

2. **நெருங்கிய ஒலியுடைய சொற்கள் சில பேச்சு வழக்கில் மாறிக் கொள்வதால்** ஏற்படும் பிழை என்பது: "வானம் - மானம்" என்பது போன்றது. இவ்வகைப் பிழைகளைப் போக்க "நெருங்கிய ஒலியுடைய சொற்கள் சில பேச்சு வழக்கில் மாறிக் கொள்ளுதல்" என்னும் இரண்டாம் பாடம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

3. **மருவி வழங்குவதை மெய் வடிவுபோல் கருதுவதால்** ஏற்படும் பிழை என்பது: "அம்மான்சேய்" என்பதை "அம்மாஞ்சி" என்று சொல்வது போன்றது. இவ்வகைப் பிழைகளை நீக்க "மரூஉ வழங்கும் சொற்களும், அவற்றின் திருத்தங்களும், விளக்கமும்" என்னும் மூன்றும் பாடம் அமைக்கப்பட்டிருக்கிறது.

4. **இலக்கியங்களில் பயின்றிருக்கும் மரபு தெரியாமையால்** ஏற்படும் பிழை என்பது: "ஒருத்தி" என்பது இலக்கிய மரபாயிருக்க, அதை "ஒருவள்" என்று எழுதுவது போன்றது. இவ்வகைப் பிழைகளைப் போக்க "இலக்கியங்களில் பயின்றிருக்கும் மரபு தெரியாமையால் ஏற்படும் பிழைகளும் அவற்றின் திருத்தங்களும்" என்னும் நாலாம் பாடம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

5. **பெயர்ச் சொற்களிற் சில பன்மை விகுதி மயக்கத்தால்** ஏற்படும் பிழை என்பது: "அது" என்பதற்கு "அவை" என்பது பன்மையாயிருக்க "அதுகள்" என்று எழுவது போன்றது. இவைகளை நீக்க "ஒருமை-பன்மை விளக்கம், பெயர்ச் சொல்" என்னும் ஐந்தாம் பாடம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

6. **வினைச் சொற்களிற் சில பன்மை விகுதி மயக்கத்தால்** ஏற்படும் பிழை என்பது: "நடந்தது" என்பதற்கு "நடந்தன" என்பது பன்மையாயிருக்க "நடந்ததுகள்" என்று எழுதுவது போன்றது. இவ்வகைப் பிழைகளை நீக்க "ஒருமை பன்மை விளக்கம்-வினைச் சொல்" என்னும் ஆறும் பாடம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

7. **பிறமொழிச் சொற்களை அதனதன் ஒலிப்படி தமிழ் எழுத்துக்களால் அமைக்காமையால்** ஏற்படும் பிழை என்பது: "க்ஷேமம்" என்பதை "சேமம்" என்று எழுதுவது போன்றது. இவ்வகைப் பிழைகளைப் போக்க "பிறமொழிச் சொற்கள்" என்னும் ஏழாம் பாடம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

முதலாம் பாடம்

பகுதி, விகுதி கவனியாமையால் ஏற்படும் பிழைகளும், அவற்றின் திருத்தங்களும்

பிழை	திருத்தம்	பகுதி அல்லது நிலைமொழி
சிலவு	செலவு	செல் — பகுதி
நிகளம்	நீளம்	நீள் — ,,
கேழ்வி	கேள்வி	கேள் — ,,
எண்ணை	எண்ணெய்	எள் — ,,
வெண்ணை	வெண்ணெய்	வெள் — ,,
சுவற்றை	சுவரை	சுவர் — மொழி. ஐ. வே. உ.
மனவி	மனைவி	மனை — பகுதி
சமயல்	சமையல்	சமை — ,,
காக்ஷி	காட்சி	காண் — ,,
மாக்ஷி	மாட்சி	மாண் — ,,
ஆக்ஷி	ஆட்சி	ஆள் — ,,

குறிப்பு:-எள் + நெய் = எண்ணெய்; வெள் + நெய் = வெண்ணெய்; "வெண்மை" என்னும் பண்புப் பெயர் வெள் + மை = வெண்மை என்றானது. எனவே, பகுதி "வெள்" என்பதேயாம். அத்துடன் "நெய்" சேர, வெள் + நெய் = "வெண்ணெய்" என்றாயிற்று. "சுவர்" என்பது இரண்டாம் வேற்றுமை உருபாகிய 'ஐ'யை ஏற்கும்போது "சுவரை" என்று வரும். காண் + சி = காட்சி; 'மாண்பு' சுருங்கி 'மாண்' என்றாகி, 'சி' விகுதிசேர "மாட்சி" என்றாயிற்று. ஆள் + சி = ஆட்சி.

இரண்டாம் பாடம்

நெருங்கிய ஒலியுடைய சொற்கள் சில பேச்சு வழக்கில் மாறிக்கொள்ளுதல்

எண்	சொல்	விளக்கம்	சொல்	விளக்கம்
1	உலகம்	பூமியும் அதன் கண் நிகழ்ச்சி-களும்	உலோ-கம்	இரும்பு, வெள்ளி, தங்கம் முதலியன
2	குலை	தாவரங்களின் காய்க்கொத்து	கொலை	கொல்வது கொலை
3	குடை	வெயில், மழை-யைத் தாங்கும் ஓர் கருவி.	கொடை	கொடுப்பது கொடை.
4	வானம்	இதனைப் படியா-தவர் மானம் என்பர். வானம் - ஆகாயம்	மானம்	மரியாதை; மானங் கெட்டவாழ்க்கை மரியாதைகெட்ட வாழ்க்கை.
5	விழி	விழி -ஏவல்- பார் என்பது. இதை முழி என்பர்.	முழி	முழங்கால், முழங் கை; முட்டுக்கு முழி யென்று பெயர்
6	முகந்து	அளவு கருவியால் முகத்தல்-முக-பகுதி	மோந்து	மோப்பம் பிடித்-தல், இதற்கு மோ - பகுதி.
7	மீசை	உதட்டின் மிசை யிருப்பது மீசை. இதனை வீசை யென்பர் கல்லார்	வீசை	எடுத்தலளவையில் ஓர் அளவின் பெயர்.

மூன்றாம் பாடம்

மருவி வழங்கும் சில சொற்களும் அவற்றின் திருத்தங்களும், விளக்கங்களும்

மருவி வழங்கும் சொல்	திருத்தம்	திருத்தச் சொல்லின் விளக்கம்
அண்ணாக்-கவறு	அரைஞாண்	ஞாண்=கயிறு; அரையில் கட்டும் ஞாண் அரைஞாண்
அநாதிப்பயல்	அநாதைப்-பயல்	நாதை=தலைவன், பராமரிப்பவன் அநாதை=பராமரிப்-பற்றவன்
அம்மாஞ்சி	அம்மான்சேய்	சேய்=பிள்ளை; அம்மான்சேய்=அம்மா-னுடைய பிள்ளை
அருவாமணை	அரிவாள் மணை	அரிகின்ற வாளுடைய பலகை; (அருகஆம்மணை : அருகாமணை)
ஆம்படையான்	அகமுடையான்	அகம்=வீடு; அகமுடை-யான்-வீட்டுக்காரன்
ஆத்துக்காரி	அகத்துக்காரி	அகம்=வீடு;வீட்டுக்காரி
இத்துப்-போயிற்று	இற்றுப்-போயிற்று	இற்று=கெட்டு
ஈராங்கா	ஈருள்ளி	உள்ளி=உள்ளேயிருப்பது ஈர்=பிளவு=பிளவுடைய உள்ளி
ஈத்தம் பழம்	ஈச்சம்பழம்	ஈச்சையின் பழம்=ஈச்சம்பழம்

மருவி வழங்கும் சொல்	திருத்தம்	திருத்தச் சொல்லின் விளக்கம்
உணரவை	உலரவை	(உணர=அறிய) உலர்தல்=காய்தல்; உலரவை=காயவை
உணர்த்து	உலர்த்து	உலர்தல்=காய்தல்; உலர்த்து=காய்வி.
ஊத்து	ஊற்று	ஊறுதலையுடையது ஊற்று
ஊந்து	ஊர்ந்து	ஊர்—பகுதி; ஊர்ந்து — வினையெச்சம்
ஊரணி	ஊருணி	ஊரால் உண்ணப்படுவது. ஊருண்ணி, ஊருணி
ஒண்டியாக	ஒன்றியாக	ஒன்றியாக; ஒன்றி, ஒருவன்
ஓஞ்சவேளை	ஓய்ந்த வேளை	ஓய்—முதனிலை; ஓய்ந்த வேளை=ஓய்வான நேரம்
கம்மாய், கண்மாய்	கம்வாய்	கம்=நீர்; வாய்=வழி; நீர் போகும் வழி (கம்வாய்)
கருகப்பிலை	கறிவேப்பிலை	கறிவேம்பின் இலை=கறிவேப்பிலை; கறி=காய்கறி
கண்ணுக்குட்டி	கன்றுக்குட்டி	கன்றாகியகுட்டி=கன்றுக்குட்டி
கருப்பட்டி	கருப்புக்கட்டி (கற்பகக்கட்டி)	கரும்புச் சாற்றிலிருந்து உண்டாகும்கட்டி கருப்புக் கட்டி; பின் பனஞ்சாற்றுக் கட்டிக்குப் பெயராயிற்று; பனை பூலோககற்பகவிருக்ஷமாகும்; அதன் கட்டி கற்பகக் கட்டி; அது மருவி கருப்புக் கட்டியாயிற்றென்பர் சிலர்

மருவி வழங்கும் சொல்	திருத்தம்	திருத்தச் சொல்லின் விளக்கம்
குலைத்தது	குரைத்தது	குரல்—குரை—சத்தம் (குலைத்தது-கெடுத்து விட்டது)
சதை	தசை	போலி
சித்தப்பன்	சிற்றப்பன்	சிறு + அப்பன் = சிற்றப்பன்
சித்தி	—	சிற்றன்னை-என எழுதுக
சும்மாடு	சுருள்மோடு	சுருள்-சுருட்டப்பட்ட; மோடு-திரள்
தம்பி	தம்பின்	தம் + பின் = தம் பின் தோன்றியவன்
தமையன்	தம்முன்	தம் + முன் = தம்முன் தோன்றியவன்
திரண்டபெண்	தெருண்ட-பெண்	தெருள் = அறிவு; புத்தி-யறிந்த பெண்
துண்ணூறு	திருநீறு	நீறு = நீற்றப்பட்டது; திரு = பரிசுத்தம்; திருநீறு = பரிசுத்தமான நீறு
நஞ்சை	நன்செய்	நன்செய் = நல் + செய்; நன்மைமிக்க செய்; செய்யப்பட்டது செய்
புஞ்சை	புன்செய்	புல்-அற்பம்; அற்ப விளை-வுடையது என்றுவது, அற்பமாய்ச் செய்யப்பட்ட தென்றுவது பொருள்படும் புல் + செய் = புன்செய்

மருவி வழங்கும் சொல்	திருத்தம்	திருத்தச் சொல்லின் விளக்கம்
பாவக்காய்	பாகற்காய்	பாகல் கொடியிலிருந்து விளையும் காய் பாகற்காய்
பேய்கிறது	பெய்கிறது	பெய்தல்-சொரிதல்
போக்கிரி	போக்கிலி	போக்கு இல்லாதவன் போக்கிலி
மக்கட்டி	கட்கட்டி	கண் + கட்டி = கட்கட்டி; கண்ணில் உண்டாகும் கட்டி
மம்பட்டி	மண்வெட்டி	மண்ணை வெட்டுவது மண் வெட்டி
மருதாணி	மருதோன்றி	—
முழிக்கிறான்	விழிக்கிறான்	விழி-கண்; விழிச் செய்கை விழிப்பு
மொழியில் புண்	முழியில் புண்	முழி = மூட்டு; மூட்டு, முட்டு என்றும் வரும்
ஆனை	யானை	ய்-கெட்டது; ய்ஆன்ஐ- = யானை
ஆறு	யாறு	ய்-கெட்டது; ய்ஆற்உ = யாறு
மொண்டி	நொண்டி	நொண்டுகிறவன் நொண்டி
கினவு	கனவு	—
அருமாந்த	அருமருந்தன்ன	அருமையான மருந்து அன்ன
கோர்த்து	கோத்து	கோ-பகுதி
கார்த்து	காத்து	கா-பகுதி
முழுங்கு	விழுங்கு	முழுங்கு-கொச்சை
சிகப்பு	சிவப்பு	சிகப்பு ,,

நாலாம் பாடம்

இலக்கியங்களில் பயின்றிருக்கும் மரபு தெரியாமையால் ஏற்படும் பிழைகளும், அவற்றின் திருத்தங்களும்

ஒருவள்-இது இலக்கிய மரபுக்கு மாறுபட்டது.

உதாரணம்:-

"கோட்டுப்பூச் சூடினுங் காயும் **ஒருத்தி**யைக்
காட்டிய சூடினீர் என்று" (திருக்குறள் 1313)

"ஒருவன் **ஒருத்தி** பலரொன்று பலவென
வருபெயர் ஐந்தொடு பெயர்முதல் இருநான்(கு)
உருபும் உறழ்தர நாற்பதாம் உருபே" (ந.சூ. 240)

"ஒருவன் **ஒருத்திப்** பெயர்மேல் எண்ணில"
(ந. சூ. 288)

ஆகையால், "ஒருவள்" என்று எழுதுதல் மரபன்று; "ஒருத்தி" யென்று எழுதுதலே மரபெனக் கொள்க.

வலது, இடது — இவைகளும் மரபுக்கு மாறுபட்டவைகளே.

உதாரணம்:-

"**வலம்**வந்த மடவார்கள் நடமாட முழவதிர
மழையென் றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்கும்
திருவை யாறே" (ஞா. ச. தேவாரம்)

வலது, இடது என்பன குறிப்பு வினை முற்றாகப் பொருள் பட்டு, வலப்பக்கம் உள்ளது, இடப்பக்கம் உள்ளது எனக் கருதக் கூடியதாகி விடும். ஆகையால், வலம், இடம் என்றே எழுதுக. 'வலது பக்கம், இடதுபக்கம் என்று எழுதாமல், வலப்பாகம், இடப்பாகம் என்று எழுதுவதே சரியானது.

ஐந்தாம் பாடம்

ஒருமை, பன்மை விளக்கம் — பெயர்ச்சொல்

ஒருமை	பன்மை	ஒருமை	பன்மை
புறா	புறாக்கள்	கண்	கண்கள்
செடி	செடிகள்	படம்	படங்கள்
மணி	மணிகள்	ஏற்றம்	ஏற்றங்கள்
கண்ணி	கண்ணிகள்	காய்	காய்கள்
ஈ	ஈக்கள்	மலர்	மலர்கள்
சுக்கு	சுக்குகள்	கல்	கற்கள்
பசு	பசுக்கள்	முடங்கல்	முடங்கல்கள்
ஆடு	ஆடுகள்	நிழல்	நிழல்கள்
கனு	கனுக்கள்	இதழ்	இதழ்கள்
சாது	சாதுக்கள்	முள்	முட்கள்
வாயு	வாயுக்கள்	மகள்	மகளிர்
தெரு	தெருக்கள்	பேன்	பேன்கள்
குரு	குருக்கள்	அவன்	அவர்
புழு	புழுக்கள்	அவள்	அவர்
சாறு	சாறுகள்	ஒருவன்	ஒருவர்
நகை	நகைகள்	அது	அவை
ஆந்தை	ஆந்தைகள்	நீ	நீர்
பொம்மை	பொம்மைகள்	நான்	நாங்கள்
சாரை	சாரைகள்	அதை	அவற்றை
மலை	மலைகள்	இதை	இவற்றை

ஆறாம் பாடம்

ஒருமை, பன்மை விளக்கம் — வினைச்சொல்

ஒருமை	பன்மை	ஒருமை	பன்மை
நடந்தான்	நடந்தார்	போகும்	போவன
நடந்தாள்	”	சென்றது	சென்றன
நடக்கிறான்	நடக்கிறார்	செல்கிறது	செல்கின்றன
நடக்கிறாள்	”	செல்லும்	செல்வன
நடப்பான்	நடப்பார்	இருந்தது	இருந்தன
நடப்பாள்	”	இருக்கிறது	இருக்கின்றன
நடந்தது	நடந்தன	இருக்கும்	இருப்பன
நடக்கிறது	நடக்கின்றன	ஓடிற்று	ஓடின
நடக்கும்	நடப்பன	ஓடுகிறது	ஓடுகின்றன
நடந்தாய்	நடந்தீர்	ஓடும்	ஓடுவன
நடக்கிறாய்	நடக்கிறீர்	சாய்ந்தது	சாய்ந்தன
நடப்பாய்	நடப்பீர்	சாய்கிறது	சாய்கின்றன
நடந்தேன்	நடந்தோம்	சாயும்	சாய்வன
நடக்கிறேன்	நடக்கிறோம்	மோதிற்று	மோதின
நடப்பேன்	நடப்போம்	மோதுகிறது	மோதுகின்றன
வந்தது	வந்தன	மோதும்	மோதுவன
வருகிறது	வருகின்றன	நீந்திற்று	நீந்தின
வரும்	வருவன	நீந்துகிறது	நீந்துகின்றன
போயிற்று	போயின	நீந்தும்	நீந்துவன
போகிறது	போகின்றன	மேய்ந்தது	மேய்ந்தன

ஏழாம் பாடம்

பிறமொழிச் சொற்கள்

(1) சமஸ்கிருதச் சொற்களிற் சில

1	எஜமான்	27	ராஜதானி	51	அத்தியாவசியம்
2	ஜாக்கிரதை	28	உபாத்தியாயர்	52	அசங்கியம்
3	அதிர்ஷ்டம்	29	கிரீடம்	53	அந்தரங்கம்
4	விஷயம்	30	யந்திரம்	54	அப்பியாசம்
5	விஜயம்	31	கர்ஜனை	55	அபராதம்
6	ராஜா	32	வருஷம்	56	அர்ச்சனை
7	ஜ்வலிப்பு	33	புருஷன்	57	அனுஷ்டித்தல்
8	கஷ்டம்	34	ஸ்திரீ	58	அஸ்திபாரம்
9	சந்தோஷம்	35	புஸ்தகம்	59	ஆச்சரியம்
10	நமஸ்காரம்	36	ரிஷிகள்	60	ஆமோதி
11	க்ஷேமம்	37	சிஷ்யர்	61	ஆரம்பம்
12	ஆசீர்வாதம்	38	ஸ்நானம்	62	ஆநந்தம்
13	அஷ்டாவக்கிரன்	39	ராஜ்யம்	63	ஆஸ்தி
14	திலம்	40	மஹாராஜா	64	ஆக்ஷேபி
15	காஷ்டம்	41	க்ஷேத்திரம்	65	ஹிருதயம்
16	மகிஷம்	42	நஷ்டம்	66	ஈச்வரன்
17	கிரந்தம்	43	ஸ்ரீரங்கம்	67	உத்தியோகம்
18	பரீக்ஷை	44	கிருஷ்ணவேணி	68	உபசாரம்
19	சிக்ஷை	45	இஷ்டம்	69	உபவாஸம்
20	ரக்ஷை	46	பிரசாதம்	70	உஷ்ணம்
21	உபாஸகர்	47	விக்ரஹம்	71	கிருஷி
22	பிரத்தியக்ஷம்	48	ஜாதி	72	கோஷ்டி
23	ஜனங்கள்	49	தர்மகர்த்தா	73	சகஜம்
24	ஜனகர்	50	அங்கவஸ்திரம்	74	பிரயோஜனம்
25	ஜலம்			75	போஜனம்
26	ஜீவன்				

76	புஷ்பம்	81	சூத்திரர்	85	ராஷ்டிர-பாஷா
77	விவாஹம்	82	வருணாஸ்-ரமம்	86	ஸ்வதந்தரம்
78	பாதரக்ஷை	83	பாரதவர்ஷம்	87	ஸ்வயராஜ்யம்
78	க்ஷத்திரியர்	84	ஹரிஜன்	88	வந்தேமாதரம்
80	வைசியர்				

(2) உருதுச் சொற்களிற் சில

1	அகஸ்மாத்	26	தமாஷ்	51	ரஜா
2	அசல்	27	தஸ்தவேஜ்	52	ராஜினாமா
3	அதாலத்	28	தாக்கல்	53	லங்கோடு
4	அமீனா	29	தாக்கீது	54	லடாய்
5	அமுல்	30	தாசில்தார்	55	லாடம்
6	அர்ஜி	31	தாலூகா	56	லுங்கி
7	ஹவுல்தார்	32	தைலி	57	லேவாதேவி
8	ஆஜர்	33	தொகையரா.	58	வார்சு
9	உண்டியல்	34	நகல்	59	ஜப்தி
10	உஷார்	35	நமூனா	60	ஜமாபந்தி
11	கச்சேரி	36	நாஷ்தா	61	ஜமீன்
12	கசாய்	37	பசலி	62	ஜமேதார்
13	கஜானா	38	படுதா	63	ஜல்தி
14	காலி	39	பர்வா	64	ஜவாப்
15	கில்லேதார்	40	பவுஞ்சு	65	ஜவாப்தாரி
16	கிஸ்து	41	பிராது	66	ஜவான்
17	கேபி	42	பைசல்	67	ஜாகிர்தார்
18	கைதி	43	மகஜர்	68	ஜாக்கை
19	கொத்தவால்	44	மசோதா	69	ஜாட்டி
20	கோஷா	45	மஜூதி	70	ஜாப்தா
21	சபாஷ்	46	மராமத்	71	ஜாமீன்
22	சாமான்	47	மாஜீ	72	ஜாரி
23	சுபேதார்	48	மிட்டாதார்	73	ஜால்ரா
24	டபேதார்	49	மிட்டாய்	74	ஜாலக்
25	டாணா	50	ரத்து	75	ஜாலர்

76	ஜிகினா	83	ஜோர்	90	ஹுக்கா
77	ஜிம்கானா	84	ஷர்பத்	91	ஹோதா
78	ஜிமிக்கி	85	ஷராத்து	92	பக்ரீத்
79	ஜில்லா	86	ஷரா	93	பேஷ்
80	ஜீனி	87	ஷராய்	94	லோட்டா
81	ஜெண்டா	88	ஷராப்பு	95	விராண்டா
82	ஜேப்பு	89	ஷோக்		

(3) இங்கிலீஷ் சொற்களிற் சில

1	ஆபீஸ்	23	ஸைக்கிள்	43	பௌண்டன்
2	இன்ஜினீயர்	24	ஸ்டேஷன்		பேனா
3	இன்ஜின்	25	ஜங்ஷன்	44	மதராஸ்
4	ஈஸ்டர்	26	டிக்கெட்	45	முனிஸிப்-
5	ஈரங்கி	27	டைம்		பாலிடி
6	எக்ஸ்பிரஸ்	28	துரூமெயில்	46	முனிஸீப்
7	எலிமெண்டரி	29	பஸ்	47	முனிசீப்கோர்ட்
	ஸ்கூல்	30	பாரிஸ்டர்	48	மூர்மார்கெட்
8	ஹைஸ்கூல்	31	பார்க்	49	மவுண்ட்
9	கண்டிராக்ட்	32	பார்ஸல்	50	ரயில்
10	கார்டு	33	பாட்டில்	51	ரிக்ஷா
11	காங்கிரஸ்	34	பிளேட்பாரம்	52	ரேட்டு
12	கார்பாலிக்	35	பிரிட்ஜ்	53	ரோட்டு
13	காலேஜ்	36	புளூ-	54	லாம்பு
14	காப்பி		மவுண்டன்	55	லாரி
15	கிறிஸ்மஸ்	37	போர்ட்டர்	56	லாண்ட்ரின்
16	கேட்	38	போலீஸ்	57	லாந்தர்
17	கேக்	39	போஸ்டாபீஸ்	58	லைட்
18	கேப்டன்	40	போஸ்டுக்-	59	லைட்டவுஸ்
19	சார்ஜ்		கார்டு	60	வாஷிங்-
20	ஸார்	41	போட்டோ	61	கம்பெனி
21	ஸிவில்	42	போட்டோ-	62	வார்
22	சிலேட்		கிராப்பர்	63	ஹேர்

T:3 CP31
N148

நான்காம் பாகம்

சந்திப் பிழை நீக்கும் பாடங்கள்

கவனிப்பு

"சந்திப் பிழை" என்பது, பதமும் பதமுமாவது, பகுதியும் விகுதியுமாவது, பதமும் உருபுகள் சாரியைகள் முதலியனவுமாவது சந்திக்கும்போது ஏற்படும் பிழைகள்.

சந்தித்தல்=பொருந்துதல்; சந்து=பொருந்துமிடம்; சந்து செய்தல்=பொருத்துதல்; சந்தை=விற்போரும், கொள்வோரும் சந்திக்குமிடம்.

இதுபோல் சொற்கள் முதலியன சந்திப்பதைச் "சந்தி" என்றனர். "புணர்ச்சி" யென்று கூறுவதும் உண்டு. நன்னூலில் "புணரியல்" என்ற பகுதியில் கூறப்படும் விதிகள் சந்தியில் ஏற்படும் மாறுதல்களைப் பற்றியனவே. உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என்று மூன்று பிரிவுகளுக்குள், சந்தியில் ஏற்படும் மாறுதல்களையெல்லாம் அடக்கியுள்ளார் நன்னூலார்.

நன்னூலில் மொத்தம் 462 சூத்திரங்கள் உண்டு. அதில் பாயிரத்தில் 55 சூத்திரங்கள் போக, மீதியான 407 சூத்திரங்கள்தான் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் கூறுபவை. அவற்றுள் புணர்ச்சி விதி கூறுவன 107 சூத்திரங்கள். அவைகளுக்குச் செய்கைச் சூத்திரங்கள் என்று பெயர். செய்கைச் சூத்திரங்களே முக்கியமானவைகள்.

சந்திப் பிழைகளில் (1) இயல்பாய்ப் புணர்வதைச் சந்தி சேர்த்து எழுதுவதால் ஏற்படும் பிழைகள்; (2) விகாரப் புணர்ச்சியில் தோன்றல் விகாரத்தை அவ்விதம் இல்லாமல் எழுதுவதால் ஏற்படும் பிழைகள்; (3) விகாரப் புணர்ச்சியில் கெடுதல் விகாரத்தை இயல்புப் புணர்ச்சி போல் எழுதுவதால் ஏற்படும் பிழைகள்; (4) விகாரப் புணர்ச்சியில் திரிதல் விகாரத்தைப் பலவிதமாய் எழுது-வதால் ஏற்படும் பிழைகள் என நான்கு வகைப்படும்.

இவ்வகைப் பிழைகள் நேராவண்ணம் தடுப்பதற்காகப் பின் வரும் பாடங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன:—

1. **தமிழ் நெடுங்கணக்கு — உயிர்மெய் யெழுத்துக்களைப் பிரிக்கும் பயிற்சி.** இது புணர்ச்சி விதிகளை நன்கு கவனிக்க உதவும்.

2. **முதலெழுத்துக்களைக் கொண்டே சொற்கள் சொற்றொடர்களை எழுதும் பயிற்சி** - இதுவும் மேலே சொன்ன காரியத்திற்கு உதவக் கூடியது.

3. **இயல்புப் புணர்ச்சித் தொடர்கள்** - இயல்பாய்ப் புணர்வதை விகாரமாக்காதபடி தடுக்க இப்பாடம் போடப்பட்டிருக்கிறது.

4. **விகாரப் புணர்ச்சித் தொடர்கள் (அ) தோன்றல்**-தோன்றல் விகாரம் எவ்வெவ்விடங்களில் வருமென்பதைத் தெரிந்து கொள்ள இப்பாடம் போடப்பட்டிருக்கிறது.

5. **விகாரப் புணர்ச்சித் தொடர்கள் (ஆ) கெடுதல்**-கெடுதல் விகாரம் எவ்விதம் வருமென்பதைக் காட்ட இப்பாடம் அமைக்கப்பட்டிருக்கிறது.

6. **விகாரப் புணர்ச்சித் தொடர்கள் (இ) திரிதல்** - எவ்வெவ் விடங்களில் திரிதல் விகாரம் ஏற்படுமென்பதைக் காட்ட இப்பாடம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

முதலாம் பாடம்

தமிழ் நெடுங்கணக்கு
உயிர் மெய்யெழுத்துக்களைப் பிரிக்கும் பயிற்சி

கவனிப்பு

தமிழ் எழுத்துக்கள் இரண்டு வகைப்படும். அவை: முதலெழுத்து, சார்பெழுத்து என்பன. முதலெழுத்து என்பது உயிர் 12-ம், மெய் 18-ம் ஆகிய 30-ம். "உயிரும் உடம்புமா முப்பது முதலே" என்பது சூத்திரம்.

சார்பெழுத்துக்களில் உயிர்மெய்யெழுத்துக்கள் முக்கியம். அவை 216. ஒவ்வொரு மெய்யோடும் 12 உயிர்களும் சேர்வதால் 216 ஆகின்றன. $18 \times 12 = 216$ என்பதைக் கவனிக்க. "உயிர்மெய்யெழுத்து" என்னும் சொற்றொடர் "உயிரும் மெய்யும் சேர்ந்து உண்டாகிய எழுத்து" என்று விரியும். எனவே உயிர்மெய்யெழுத்து ஒவ்வொன்றும் இரண்டிரண்டு எழுத்துக்கள் சேர்ந்தது என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

புணரியலில் உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல் என வகுத்து விதி சொல்லப்பட்டிருப்பதால், ஒரு பதம் உயிரீற்றுப் பதமா, மெய்யீற்றுப் பதமா என்று தெரிந்துகொண்டாலன்றி அவ்விதிகளைக் கொண்டு புணர்ச்சி மாறுபாடுகளைக் கண்டுகொள்ள முடியாது. உயிரீற்றுப் பதம் என்பது தனி உயிர்கள் கடைசியில் நிற்பதைக் குறித்ததன்று. எப்போதும், எங்கும் தனி உயிர்கள் கடைசியில் நிற்பதில்லை. உயிர்மெய்கள் அல்லது மெய்கள்தான் இறுதியில் நிற்கும். "பசு" என்பது "ப்அ ச்உ" என்று பிரிக்கப்படும். இறுதியில் நிற்பது உயிர். இவ்வாறு தெரிந்துகொள்வதற்காக இப்பாடமும், இரண்டாம் பாடமும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

க் + அ = க	ங் + அ = ங	ச் + அ = ச
க் + ஆ = கா	ங் + ஆ = ஙா	ச் + ஆ = சா
க் + இ = கி	ங் + இ = ஙி	ச் + இ = சி
க் + ஈ = கீ	ங் + ஈ = ஙீ	ச் + ஈ = சீ
க் + உ = கு	ங் + உ = ஙு	ச் + உ = சு
க் + ஊ = கூ	ங் + ஊ = ஙூ	ச் + ஊ = சூ
க் + எ = கெ	ங் + எ = ஙெ	ச் + எ = செ
க் + ஏ = கே	ங் + ஏ = ஙே	ச் + ஏ = சே
க் + ஐ = கை	ங் + ஐ = ஙை	ச் + ஐ = சை
க் + ஒ = கொ	ங் + ஒ = ஙொ	ச் + ஒ = சொ
க் + ஓ = கோ	ங் + ஓ = ஙோ	ச் + ஓ = சோ
க் + ஔ = கௌ	ங் + ஔ = ஙௌ	ச் + ஔ = சௌ

ஞ் + அ = ஞ	ட் + அ = ட	ண் + அ = ண
ஞ் + ஆ = ஞா	ட் + ஆ = டா	ண் + ஆ = ணா
ஞ் + இ = ஞி	ட் + இ = டி	ண் + இ = ணி
ஞ் + ஈ = ஞீ	ட் + ஈ = டீ	ண் + ஈ = ணீ
ஞ் + உ = ஞு	ட் + உ = டு	ண் + உ = ணு
ஞ் + ஊ = ஞூ	ட் + ஊ = டூ	ண் + ஊ = ணூ
ஞ் + எ = ஞெ	ட் + எ = டெ	ண் + எ = ணெ
ஞ் + ஏ = ஞே	ட் + ஏ = டே	ண் + ஏ = ணே
ஞ் + ஐ = ஞை	ட் + ஐ = டை	ண் + ஐ = ணை
ஞ் + ஒ = ஞொ	ட் + ஒ = டொ	ண் + ஒ = ணொ
ஞ் + ஓ = ஞோ	ட் + ஓ = டோ	ண் + ஓ = ணோ
ஞ் + ஔ = ஞௌ	ட் + ஔ = டௌ	ண் + ஔ = ணௌ

த்+அ = த	ந்+அ = ந	ப்+அ = ப
த்+ஆ = தா	ந்+ஆ = நா	ப்+ஆ = பா
த்+இ = தி	ந்+இ = நி	ப்+இ = பி
த்+ஈ = தீ	ந்+ஈ = நீ	ப்+ஈ = பீ
த்+உ = து	ந்+உ = நு	ப்+உ = பு
த்+ஊ = தூ	ந்+ஊ = நூ	ப்+ஊ = பூ
த்+எ = தெ	ந்+எ = நெ	ப்+எ = பெ
த்+ஏ = தே	ந்+ஏ = நே	ப்+ஏ = பே
த்+ஐ = தை	ந்+ஐ = நை	ப்+ஐ = பை
த்+ஒ = தொ	ந்+ஒ = நொ	ப்+ஒ = பொ
த்+ஓ = தோ	ந்+ஓ = நோ	ப்+ஓ = போ
த்+ஔ = தௌ	ந்+ஔ = நௌ	ப்+ஔ = பௌ

ம்+அ = ம	ய்+அ = ய	ர்+அ = ர
ம்+ஆ = மா	ய்+ஆ = யா	ர்+ஆ = ரா
ம்+இ = மி	ய்+இ = யி	ர்+இ = ரி
ம்+ஈ = மீ	ய்+ஈ = யீ	ர்+ஈ = ரீ
ம்+உ = மு	ய்+உ = யு	ர்+உ = ரு
ம்+ஊ = மூ	ய்+ஊ = யூ	ர்+ஊ = ரூ
ம்+எ = மெ	ய்+எ = யெ	ர்+எ = ரெ
ம்+ஏ = மே	ய்+ஏ = யே	ர்+ஏ = ரே
ம்+ஐ = மை	ய்+ஐ = யை	ர்+ஐ = ரை
ம்+ஒ = மொ	ய்+ஒ = யொ	ர்+ஒ = ரொ
ம்+ஓ = மோ	ய்+ஓ = யோ	ர்+ஓ = ரோ
ம்+ஔ = மௌ	ய்+ஔ = யௌ	ர்+ஔ = ரௌ

ல்+அ = ல	வ்+அ = வ	ழ்+அ = ழ
ல்+ஆ = லா	வ்+ஆ = வா	ழ்+ஆ = ழா
ல்+இ = லி	வ்+இ = வி	ழ்+இ = ழி
ல்+ஈ = லீ	வ்+ஈ = வீ	ழ்+ஈ = ழீ
ல்+உ = லு	வ்+உ = வு	ழ்+உ = ழு
ல்+ஊ = லூ	வ்+ஊ = வூ	ழ்+ஊ = ழூ
ல்+எ = லெ	வ்+எ = வெ	ழ்+எ = ழெ
ல்+ஏ = லே	வ்+ஏ = வே	ழ்+ஏ = ழே
ல்+ஐ = லை	வ்+ஐ = வை	ழ்+ஐ = ழை
ல்+ஒ = லொ	வ்+ஒ = வொ	ழ்+ஒ = ழொ
வ்+ஓ = லோ	வ்+ஓ = வோ	ழ்+ஓ = ழோ
ல்+ஔ = லௌ	வ்+ஔ = வௌ	ழ்+ஔ = ழௌ

ள்+அ = ள	ற்+அ = ற	ன்+அ = ன
ள்+ஆ = ளா	ற்+ஆ = றா	ன்+ஆ = னா
ள்+இ = ளி	ற்+இ = றி	ன்+இ = னி
ள்+ஈ = ளீ	ற்+ஈ = றீ	ன்+ஈ = னீ
ள்+உ = ளு	ற்+உ = று	ன்+உ = னு
ள்+ஊ = ளூ	ற்+ஊ = றூ	ன்+ஊ = னூ
ள்+எ = ளெ	ற்+எ = றெ	ன்+எ = னெ
ள்+ஏ = ளே	ற்+ஏ = றே	ன்+ஏ = னே
ள்+ஐ = ளை	ற்+ஐ = றை	ன்+ஐ = னை
ள்+ஒ = ளொ	ற்+ஒ = றொ	ன்+ஒ = னொ
ள்+ஓ = ளோ	ற்+ஓ = றோ	ன்+ஓ = னோ
ள்+ஔ = ளௌ	ற்+ஔ = றௌ	ன்+ஔ = னௌ

இரண்டாம் பாடம்

முதலெழுத்துக்களைக் கொண்டே சொற்கள், சொற்றொடர்களை எழுதும் பயிற்சி

வழக்கமான முறையில் எழுதியது.	முதலெழுத்துக்களைக் கொண்டு எழுதியது.
விருதுநகர்	வ்இ ர்உ த்உ ந்அ க்அ ர்
மதுரை	ம்அ த்உ ர்ஐ
சிவகாசி	ச்இ வ்அ க்ஆ ச்இ
கோவில்	க்ஓ வ்இ ல்
இமயமலை	இ ம்அ ய்அ ம்அ ல்ஐ
தாம்பிரவருணி	த்ஆ ம் ப்இ ர்அ வ்அ ர்உ ண்இ
வெண்ணெய்	வ்எ ண் ண்எ ய்
தமிழ்மொழி	த்அ ம்இ ழ் ம்ஒ ழ்இ
இலக்கணம்	இ ல்அ க் க்அ ண்அ ம்
பால குருகுலம்	ப்ஆ ல்அ க்உ ர்உ க்உ ல்அ ம்
ஆவணி மாதம்	ஆ வ்அ ண்இ ம்ஆ த்அ ம்
வளர்பிறை	வ்அ ள்அ ர் ப்இ ற்ஐ

குறிப்பு:- இம்மாதிரி எந்தச் சொல்லையும், சொற்றொடரையும் முதலெழுத்துக்களைக் கொண்டு எழுதும் பயிற்சியடைந்திருப்பது, புணர்ச்சியிலக்கணம் கற்பதற்கு உதவியாயிருக்கும். உயிரீற்றுப் புணரியல் இன்னதென்றும், மெய்யீற்றுப் புணரியல் இன்னதென்றும் தெரிந்துகொள்ள இந்தப் பயிற்சி அவசியம். இப்படிப் பிரித்துப் பார்த்துத் தான் இன்ன எழுத்து இறுதியிலிருக்கிறதென்று கண்டு பிடிக்கமுடியும்.

மூன்றாம் பாடம்

இயல்புப் புணர்ச்சித் தொடர்கள்

"எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞநமய வக்க ளியல்பும்
குறில்வழி யத்தனி யைந்நொது முன்மெலி
மிகலுமாம் ணளனல வழிநத் திரியும்." *(ந. சூ. 158)

கரும + ஞாலம் = கருமஞாலம்
இள + ஞமலி = இளஞமலி
மலை + நாடு = மலைநாடு
வெறி + நாய் = வெறிநாய்
முத்தி + நிலை = முத்திநிலை
மங்கை + நுதல் = மங்கைநுதல்
நீதி + நெறி = நீதிநெறி
கள்ள + மனம் = கள்ளமனம்
கொடி + மிகுதி = கொடிமிகுதி
ஒரு + முழம் = ஒருமுழம்
திரு + மேனி = திருமேனி
மதலை + மொழி = மதலைமொழி
குழவி + வளையல் = குழவிவளையல்
எலி + வளை = எலிவளை
குரு + வாக்கு = குருவாக்கு
பழைய + வினை = பழையவினை
பனை + வெல்லம் = பனைவெல்லம்
கணக்கு + வேலை = கணக்குவேலை
குழந்தை + வைத்தியம் = குழந்தைவைத்தியம்

*(ந. சூ.— நன்னூல் சூத்திரம்)

(வினையெச்சப் பெயரெச்சத் தொடர்கள்)

"செய்யிய வென்னும் வினையெச்சம் பல்வகைப்
பெயரி னெச்சமுற் றற னுருபே
அஃறிணைப் பன்மை யம்மமுன் னியல்பே."
(ந. சூ. 167)

இருந்து + போனான் = இருந்து போனான்
நடந்த + குதிரை = நடந்த குதிரை
படித்த + கைதி = படித்த கைதி
வென்ற + கோமான் = வென்ற கோமான்
போன + சனியன் = போன சனியன்
ஓடிய + சாரை = ஓடிய சாரை
படிக்கிற + சிறுவன் = படிக்கிற சிறுவன்
ஓடிய + சுணங்கன் = ஓடிய சுணங்கன்
சுழன்ற + சூறுவளி = சுழன்ற சூறுவளி
சென்ற + செந்நாய் = சென்ற செந்நாய்
செலித்த + சேவல் = செலித்த சேவல்
சேவித்த + சைவர் = சேவித்த சைவர்
சொன்ன + சொக்கர் = சொன்ன சொக்கர்
சோறு வாங்கிய + சோம்பன் = சோறு வாங்கிய சோம்பன்
சாப்பிட்ட + தம்பி = சாப்பிட்ட தம்பி
விழுந்த + தங்கை = விழுந்த தங்கை
பெற்ற + தாய் = பெற்ற தாய்
திரும்பிய + திருமகள் = திரும்பிய திருமகள்
தூரத்துண்ட + திருமகன் = தூரத்துண்ட திருமகன்
கண்கண்ட + தெய்வம் = கண்கண்ட தெய்வம்
சிறந்த + தேவர் = சிறந்த தேவர்
தொடர்ந்த + தோகையர் = தொடர்ந்த தோகையர்
விழுந்த + பம்பரம் = விழுந்த பம்பரம்
ஓடின + பாம்பு = ஓடின பாம்பு

எடுத்த + பிரம்பு = எடுத்த பிரம்பு
வழிந்த + பீளை = வழிந்த பீளை
கிழிந்த + புத்தகம் = கிழிந்த புத்தகம்
ஓடின + பூச்சி = ஓடின பூச்சி
வளர்ந்த + பெட்டை = வளர்ந்த பெட்டை
பிரிந்த + பேடு = பிரிந்த பேடு
பருத்த + பொம்மை = பருத்த பொம்மை
பழைய + போர் = பழைய போர்

(முற்றுத் தொடர்கள்)

வந்தது + கழுதை = வந்தது கழுதை
நனைந்தது + காடு = நனைந்தது காடு
பேசிற்று + கிளி = பேசிற்று கிளி
உடைந்தது + குளம் = உடைந்தது குளம்
பறந்தது + கூகை = பறந்தது கூகை
நசுங்கிற்று + கெண்டி = நசுங்கிற்று கெண்டி
கிளைத்தது + கேசம் = கிளைத்தது கேசம்
சிறந்தது + கைலை = சிறந்தது கைலை
எரிந்தது + கொள்ளி = எரிந்தது கொள்ளி
பறந்தது + கோழி = பறந்தது கோழி
எழுந்தது + கௌதாரி = எழுந்தது கௌதாரி
கிழிகிறது + சட்டை = கிழிகிறது சட்டை
செல்கிறது + சாரை = செல்கிறது சாரை
விரிகிறது + சிறகு = விரிகிறது சிறகு
வருகிறது + சீனி = வருகிறது சீனி
இருக்கிறது + சுண்டல் = இருக்கிறது சுண்டல்
ஒழிகிறது + சூது = ஒழிகிறது சூது
செழிக்கிறது + செந்நெல் = செழிக்கிறது செந்நெல்
செல்கிறது + சேனை = செல்கிறது சேனை
வளர்கிறது + சைவம் = வளர்கிறது சைவம்
தோன்றுகிறது + சொப்பனம் = தோன்றுகிறது சொப்பனம்

வருகிறது + சோளம் = வருகிறது சோளம்
வளர்ந்தது + தட்டை = வளர்ந்தது தட்டை
குவிந்தது + தானியம் = குவிந்தது தானியம்
சேர்ந்தது + திரவியம் = சேர்ந்தது திரவியம்
கிடைத்தது + துண்டு = கிடைத்தது துண்டு
முறிந்தது + தூண் = முறிந்தது தூண்
செழித்தது + தென்னை = செழித்தது தென்னை
சென்றது + தேள் = சென்றது தேள்
வந்தது + தை = வந்தது தை
போயிற்று + தொல்லை = போயிற்று தொல்லை
விரிந்தது + தோகை = விரிந்தது தோகை
பார்க்கிறது + பல்லி = பார்க்கிறது பல்லி
ஓடுகிறது + பாம்பு = ஓடுகிறது பாம்பு
சிரிக்கிறது + பிள்ளை = சிரிக்கிறது பிள்ளை
பாய்கிறது + புலி = பாய்கிறது புலி
கத்துகிறது + பூனை = கத்துகிறது பூனை
பொறுக்குகிறது + பெட்டை = பொறுக்குகிறது பெட்டை
ஊர்கிறது + பேன் = ஊர்கிறது பேன்
கிழிகின்றன + பைகள் = கிழிகின்றன பைகள்
தெரிகின்றது + பொம்மை = தெரிகின்றது பொம்மை
போகிறது + போக்காடு = போகிறது போக்காடு
வருகிறது + பௌர்ணமி = வருகிறது பௌர்ணமி

(ஆறனுருபுத் தொடர்கள்)

தனது + கைகள் = தனது கைகள்
நினது + சட்டை = நினது சட்டை
உனது + தாயார் = உனது தாயார்
எனது + பையன் = எனது பையன்

நாலாம் பாடம்

விகாரப் புணர்ச்சித் தொடர்கள் (அ) தோன்றல்

"இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்
கசதப மிகும்வித வாதன மன்னே." (ந.சூ. 165)

வெள்ளை + கரும்பு	=	வெள்ளைக் கரும்பு
வாழை + காய்	=	வாழைக் காய்
பச்சை + கிளி	=	பச்சைக் கிளி
தண்டு + கீரை	=	தண்டுக் கீரை
ஓட்டை + குடம்	=	ஓட்டைக் குடம்
பள்ளி + கூடம்	=	பள்ளிக்கூடம்
தும்பி + கை	=	தும்பிக்கை
கீரை + கொல்லை	=	கீரைக் கொல்லை
பெட்டை + கோழி	=	பெட்டைக் கோழி
மூக்கு + சளி	=	மூக்குச் சளி
கரும்பு + சாறு	=	கரும்புச் சாறு
நரம்பு + சிலந்தி	=	நரம்புச் சிலந்தி
கொம்பு + சீப்பு	=	கொம்புச் சீப்பு
மா + சுக்கு	=	மாச்சுக்கு
பூ + சூடு	=	பூச்சூடு
கத்தரி + செடி	=	கத்தரிச் செடி
குரங்கு + சேட்டை	=	குரங்குச் சேட்டை
அரை + சைவம்	=	அரைச் சைவம்
குறும்பு + சொக்கன்	=	குறும்புச் சொக்கன்
கீரை + தண்டு	=	கீரைத் தண்டு
தீ + தாங்கி	=	தீத் தாங்கி
சித்திரை + திருவிழா	=	சித்திரைத் திருவிழா
பெண்ணை + தீண்டேன்	=	பெண்ணைத் தீண்டேன்
செம்பு + தட்டு	=	செம்புத்தட்டு

இரும்பு + தூண் = இரும்புத் தூண்
வடக்கு + தெரு = வடக்குத் தெரு
கிழக்கு + தேசம் = கிழக்குத் தேசம்
அரைக்கீரை + தைலம் = அரைக்கீரைத் தைலம்
வகுப்பு + தொல்லை = வகுப்புத் தொல்லை
இலுப்பை + தோப்பு = இலுப்பைத் தோப்பு
இனிப்பு + பண்டம் = இனிப்புப் பண்டம்
ஓலை + பாய் = ஓலைப் பாய்
உழக்கு + பிட்டு = உழக்குப் பிட்டு
கேப்பை + பீட்டை = கேப்பைப் பீட்டை
வகுப்பு + புத்தகம் = வகுப்புப் புத்தகம்
பெட்டி + பூட்டு = பெட்டிப் பூட்டு
இரும்பு + பெட்டி = இரும்புப் பெட்டி
வண்டி + பேட்டை = வண்டிப்பேட்டை
கறுப்பு + பையன் = கறுப்புப் பையன்
தை + பொங்கல் = தைப் பொங்கல்
கதை + போட்டி = கதைப் போட்டி

(யகர இறுதிக் கசதபக்கள்)

"யரழ முன்னர்க் கசதப வல்வழி
இயல்பு மிகலு மாகும் வேற்றுமை
மிகலு மினத்தோ டுறழ்தலும் விதிமேல்." (ந.சூ.224)

சிப்பாய் + கலகம் = சிப்பாய்க் கலகம்
நாய் + கால் = நாய்க் கால்
மிட்டாய் + கிண்ணம் = மிட்டாய்க் கிண்ணம்
கத்தரிக்காய் + குழம்பு = கத்தரிக்காய்க் குழம்பு
வாழைக்காய் + கூட்டு = வாழைக்காய்க் கூட்டு
தேங்காய் + கொப்பரை = தேங்காய்க் கொப்பரை
ஊறுகாய் + சட்டி = ஊறுகாய்ச் சட்டி
ஊமத்தங்காய் + சாறு = ஊமத்தங்காய்ச் சாறு

தேங்காய் + சில்லு = தேங்காய்ச் சில்லு
பேய் + சுரை = பேய்ச் சுரை
வாழைக்காய் + சீப்பு = வாழைக்காய்ச் சீப்பு
விளாங்காய் + செப்பு = விளாங்காய்ச் செப்பு
மிளகாய் + சேர்ப்பு = மிளகாய்ச் சேர்ப்பு
பம்பாய் + சைனியம் = பம்பாய்ச் சைனியம்
தேங்காய் + சொத்து = தேங்காய்ச் சொத்து
பம்பாய் + சோளம் = பம்பாய்ச் சோளம்
தேங்காய் + தண்ணீர் = தேங்காய்த் தண்ணீர்
தேங்காய் + திருகல் = தேங்காய்த் திருகல்
பேரிக்காய் + துண்டு = பேரிக்காய்த் துண்டு
மிளகாய் + தூள் = மிளகாய்த் தூள்
பம்பாய் + தெரு = பம்பாய்த் தெரு
எட்டிக்காய் + தைலம் = எட்டிக்காய்த் தைலம்
ஏலக்காய் + தொழில் = ஏலக்காய்த் தொழில்
ஏலக்காய் + தோரணம் = ஏலக்காய்த் தோரணம்
மிளகாய் + பழம் = மிளகாய்ப் பழம்
புடலங்காய் + பாகம் = புடலங்காய்ப் பாகம்
வாழைக்காய் + பிட்டு = வாழைக்காய்ப் பிட்டு
எண்ணெய் + பீப்பாய் = எண்ணெய்ப் பீப்பாய்
பேய் + புடல் = பேய்ப் புடல்
மிளகாய் + பொடி = மிளகாய்ப் பொடி
நாய் + பேன் = நாய்ப் பேன்
பம்பாய் + பையன் = பம்பாய்ப் பையன்
கத்தரிக்காய் + பொரியல் = கத்தரிக்காய்ப் பொரியல்
நெய் + போளி = நெய்ப் போளி

(ரகர இறுதிக் கசதபக்கள்)

வேர் + கடலை = வேர்க் கடலை
ஊர் + காவல் = ஊர்க் காவல்
வேர் + கிழங்கு = வேர்க் கிழங்கு

புதூர் + கீரை	=	புதூர்க் கீரை
நீர் + குமிழி	=	நீர்க்குமிழி
ஊர் + கூட்டம்	=	ஊர்க் கூட்டம்
ஏர் + கைப்பிடி	=	ஏர்க் கைப்பிடி
ஊர் + கொட்டாரம்	=	ஊர்க் கொட்டாரம்
ஏர் + கோப்பு	=	ஏர்க் கோப்பு
தேர் + சக்கரம்	=	தேர்ச் சக்கரம்
ஊர் + சாக்கடை	=	ஊர்ச் சாக்கடை
சிற்றூர் + சிறுவன்	=	சிற்றூர்ச் சிறுவன்
சிங்கப்பூர் + சீனி	=	சிங்கப்பூர்ச் சீனி
கல்நார் + சுன்னம்	=	கல்நார்ச் சுன்னம்
பேரையூர் + சூரி	=	பேரையூர்ச் சூரி
மலர் + செண்டு	=	மலர்ச் செண்டு
உள்ளூர் + சேவகன்	=	உள்ளூர்ச் சேவகன்
சாப்டூர் + சைன்யம்	=	சாப்டூர்ச் சைன்யம்
வேற்றூர் + சொத்து	=	வேற்றூர்ச் சொத்து
வேலூர் + சோளம்	=	வேலூர்ச் சோளம்
ஆமத்தூர் + தண்ணீர்	=	ஆமத்தூர்த் தண்ணீர்
வேலூர் + தாவணி	=	வேலூர்த் தாவணி
திருப்பத்தூர் + திருவிழா	=	திருப்பத்தூர்த் திருவிழா
திருப்பூர் + தீர்மானம்	=	திருப்பூர்த் தீர்மானம்
சிங்கப்பூர் + துறைமுகம்	=	சிங்கப்பூர்த் துறைமுகம்
வேற்றூர் + தூதுவர்	=	வேற்றூர்த் தூதுவர்
நெய்யூர் + தென்னை	=	நெய்யூர்த் தென்னை
சிங்கப்பூர் + தேங்காய்	=	சிங்கப்பூர்த் தேங்காய்
வேலூர் + தையல்	=	வேலூர்த் தையல்
சேற்றூர் + தொப்பி	=	சேற்றூர்த் தொப்பி

அரியலூர்+தோட்டம் = அரியலூர்த் தோட்டம்
திருச்செந்தூர்+பண்டாரம் = திருச்செந்தூர்ப் பண்டாரம்

நெய்யூர்+பாக்கு = நெய்யூர்ப் பாக்கு
ஊர்+பிள்ளையார் = ஊர்ப் பிள்ளையார்
வேற்றூர்+பீதி = வேற்றூர்ப் பீதி
உள்ளூர்+புத்தகசாலை = உள்ளூர்ப் புத்தகசாலை
புலியூர்+பூதம் = புலியூர்ப் பூதம்
மேட்டூர்+பெட்டி = மேட்டூர்ப் பெட்டி
வேற்றூர்+பையன் = வேற்றூர்ப் பையன்
விருதுநகர்+பொடியன் = விருதுநகர்ப் பொடியன்
பெரம்பூர்+போக்கிலி = பெரம்பூர்ப் போக்கிலி

(ழகர விறுதிக் கசதபக்கள்)

தமிழ்+கலை = தமிழ்க் கலை
தமிழ்+காவியம் = தமிழ்க் காவியம்
சிமிழ்+கிண்ணம் = சிமிழ்க் கிண்ணம்
செந்தமிழ்+கீதம் = செந்தமிழ்க் கீதம்
செந்தமிழ்+குற்றம் = செந்தமிழ்க் குற்றம்
இதழ்+கூட்டம் = இதழ்க் கூட்டம்
ஊழ்+கெடுதல் = ஊழ்க் கெடுதல்
இகழ்+கேடு = இகழ்க் கேடு
புகழ்+கையன் = புகழ்க் கையன்
தமிழ்+கோட்டை = தமிழ்க் கோட்டை
தமிழ்+சரிதம் = தமிழ்ச் சரிதம்
செந்தமிழ்+சாலை = செந்தமிழ்ச் சாலை
சிமிழ்+சிற்பம் = சிமிழ்ச் சிற்பம்

தமிழ் + சீர் = தமிழ்ச் சீர்
இதழ் + சுருக்கம் = இதழ்ச் சுருக்கம்
பூவிதழ் + சூழல் = பூவிதழ்ச் சூழல்
செந்தமிழ் + செறிவு = செந்தமிழ்ச் செறிவு
பெரும்புகழ் + சேரன் = பெரும்புகழ்ச் சேரன்
தமிழ் + சொல் = தமிழ்ச் சொல்
செந்தமிழ் + சோலை = செந்தமிழ்ச் சோலை
செந்தமிழ் + தனிநூல் = செந்தமிழ்த் தனிநூல்
தமிழ் + தாள் = தமிழ்த் தாள்
தமிழ் + தினசரி = தமிழ்த் தினசரி
தமிழ் + தீபிகை = தமிழ்த் தீபிகை
இதழ் + துணுக்கு = இதழ்த் துணுக்கு
பூவிதழ் + தூள் = பூவிதழ்த் தூள்
தமிழ் + தெய்வம் = தமிழ்த் தெய்வம்
செந்தமிழ் + தேறல் = செந்தமிழ்த் தேறல்
புகழ் + பதக்கம் = புகழ்ப் பதக்கம்
தமிழ் + பாடம் = தமிழ்ப் பாடம்
அகழ் + பின் = அகழ்ப் பின்
அகழ் + புறம் = அகழ்ப் புறம்
செவ்விதழ் + பூ = செவ்விதழ்ப் பூ
சிமிழ் + பெட்டி = சிமிழ்ப் பெட்டி
தமிழ் + பேர் = தமிழ்ப் பேர்

ஐந்தாம் பாடம்

விகாரப் புணர்ச்சித் தொடர்கள் (ஆ) கெடுதல்

"மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவு மாகும்." (ந. சூ. 219)

குணம் + நலம்	=	குண நலம்
பணம் + நாட்டம்	=	பண நாட்டம்
மனம் + நிலை	=	மன நிலை
படம் + நீட்சி	=	பட நீட்சி
மனம் + நுட்பம்	=	மன நுட்பம்
வானம் + நூல்	=	வான நூல்
ஜனம் + நெருக்கம்	=	ஜன நெருக்கம்
மனம் + நேர்மை	=	மன நேர்மை
மனம் + நொய்வு	=	மன நொய்வு
சங்கம் + நோக்கம்	=	சங்க நோக்கம்
மலம் + பரிபாகம்	=	மல பரிபாகம்
மனம் + வலிமை	=	மன வலிமை
மதம் + வாதம்	=	மத வாதம்
மரம் + விற்பனை	=	மர விற்பனை
மரம் + வீடு	=	மர வீடு
மதம் + வெறி	=	மத வெறி
உத்தியோகம் + வேட்டை	=	உத்தியோக வேட்டை
அதிகாரம் + வைப்பு	=	அதிகார வைப்பு
ஆறுமுகம் + அண்ணாவி	=	ஆறுமுக அண்ணாவி
சண்முகம் + ஆச்சாரி	=	சண்முக ஆச்சாரி
சத்தியம் + இஸ்லாம்	=	சத்திய இஸ்லாம்
மரம் + உரல்	=	மர உரல்
மனம் + ஊக்கம்	=	மன ஊக்கம்
கலம் + எள்	=	கல எள்
அர்த்தம் + ஏடு	=	அர்த்த ஏடு
ஆறுமுகம் + ஐயர்	=	ஆறுமுக ஐயர்

ஆறும் பாடம்

விகாரப் புணர்ச்சித் தொடர்கள் (இ) திரிதல்

குறில் வழியில் வந்த யகரவீற்று நிலைமொழியின் முன் வருகின்ற மொழி முதல் மெல்லினம் மிகும். அதாவது இரட்டிக்கும்.

"... குறில் வழியத்தனி யைங்நோது
முன்மெலி மிகலுமாம்" (ந. சூ. 158)

மொழிமுதல் மெல்லினம் - ஞ, ந, ம

மெய் + ஞானம் = மெய்ஞ் ஞானம்
மெய் + நீளம் = மெய்ந் நீளம்
செய் + நன்றி = செய்ந்நன்றி
பொய் + மொழி = பொய்ம் மொழி

" ... ணளனல வழிநத் திரியும்" (ந. சூ. 158)

ணளனல - என்னும் மெய்யீற்றுச் சொற்களின் முன்வரும் நகரமும் திரியும்.

மண் + நன்று = மண்ணன்று
முள் + நீளம் = முண்ணீளம்
பொன் + நல்லது = பொன்னல்லது
கல் + நான்கு = கன்னான்கு

நிலை மொழியீறு உயிராகவும், வருமொழி முதலும் உயிராகவும் இருந்து சந்தித்தால், அவைகளை யகரமும் வகரமும் சேர்த்து வைக்கும்.

"இ ஈ ஐவழி யவ்வு மேனை
உயிர்வழி வவ்வு மேமுனிவ் விருமையும்
உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்." (ந. சூ. 162)

மணி + அழகு = மணியழகு
தீ + எரிகிறது = தீயெரிகிறது
பலகை + எங்கே = பலகையெங்கே
அணு + எடு = அணுவெடு
ஓகோ + என்றான் = ஓகோவென்றான்

குறிப்பு:- நிலைமொழியீற்றில் உயிர் இருக்கிறதென்பதைக் கவனிக்க வேண்டும். ஒவ்வொரு உயிர்மெய்யிலும், ஒரு மெய்யும் ஒரு உயிரும் சேர்ந்திருக்கிறதென்பதை முன்பே அறிந்திருக்கக் கூடுமாதலால் இதை விளக்குவது இலகுவே. எனினும், பின் வருமாறு எடுத்துக் காட்டலாம்:-

ம்அ ண்இ; த்ச; ப்அ ல்அ க்ஐ; அ ண்ஆ; ஒ க்ஓ.

ஒவ்வொரு சொல்லின் இறுதியிலும் உயிர் நிற்பதைக் கவனிக்க வேண்டும்.

வினாவெழுத்துக்களில் எகரமும், மூன்று சுட்டு எழுத்துக்களும் முதலில் இருக்க, வருமொழியில் முதலில் உயிராவது யகர மெய்யாவது வந்தால் வகரம் தோன்றும்; பிற வந்தால் அவையே இரட்டிக்கும்.

"எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் மெய்தின் வவ்வும்
பிறவரி னவையுந் தூக்கிற் சுட்டு
நீளின் யகரமுந் தோன்றுத னெறியே" (ந. சூ. 163)

எ + அணி = எவ்வணி
எ + யானை = எவ்யானை
அ + அருள் = அவ்வருள்
இ + ஆபரணம் = இவ்வாபரணம்
உ + ஆடு = உவ்வாடு

எ + காடு = எக்காடு அ + செடி = அச்செடி இ + தகரம் = இத்தகரம் உ + படை = உப்படை எ + நாடு = எந்நாடு அ + மாடு = அம்மாடு இ + வீடு = இவ்வீடு உ + கரும்பு = உக்கரும்பு	எ, அ, இ, உ - இவைகள் ஒவ்வொன்றோடும் கடல், சந்து, தென்னை, நிலம், பனை, மலை, வாசல் - ஆகிய சொற்களைக் கூட்டி எழுதச் சொல்லி அப்பியாசங் கொடுக்கலாம்.

நிலைமொழி யீற்றில் குற்றியலுகரம் நிற்க, வருமொழி
முதலில் உயிர் வந்தால் குற்றியலுகரம் ஓடிவிடும்;
யகரம் வந்தால் உகரம் இகரமாய் மாறிவிடும்.

"உயிர்வரி னுக்குறண் மெய்விட் டோடும்
யவ்வரி னிய்யா முற்றுமற் றேரோவழி." (ந. சூ. 164)

கல்விக்கு + அழகு	=	கல்விக்கழகு
அச்சு + எழுத்து	=	அச்செழுத்து
எட்டு + ஆள்	=	எட்டாள்
எழுத்து + இகழேல்	=	எழுத்திகழேல்
உப்பு + எங்கே	=	உப்பெங்கே
மாற்று + ஆள்	=	மாற்றாள்
எனக்கு + யாது	=	எனக்கியாது
கொலுசு + யாவை	=	கொலுசியாவை
திட்டு + யாது	=	திட்டியாது
முத்து + யார்	=	முத்தியார்
கொம்பு + யாங்கு	=	கொம்பியாங்கு
ஒற்று + யாது	=	ஒற்றியாது

நிலைமொழி யீற்றில் உயிரிருக்க வருமொழி முதலில்
மொழி முதல் வல்லினம் வருமானால்
அவ்வல்லினம் இரட்டிக்கும்.

"இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்
கசதப மிகும்வித வாதன மன்னே" (ந. சூ 165)

(மொழி முதல் வல்லினம் - க, ச, த, ப)

ஓட + கண்டேன்	=	ஓட(க்) கண்டேன்
ஓட + சென்றான்	=	ஓட(ச்) சென்றான்
ஓட + தான்	=	ஓட(த்) தான்
ஓட + புறப்பட்டான்	=	ஓட(ப்) புறப்பட்டான்
எனக்கு + கொடு	=	எனக்கு(க்) கொடு
உனக்கு + சரி	=	உனக்கு(ச்) சரி

அவனுக்கு + தானே = அவனுக்கு(த்) தானே
அவர்களுக்கு + போதும் = அவர்களுக்கு(ப்) போதும்
வாழை + காய் = வாழை(க்) காய்
வாழை + சருகு = வாழை(ச்) சருகு
வாழை + தண்டு = வாழை(த்) தண்டு
வாழை + பழம் = வாழை(ப்) பழம்

குறிப்பு:- அடைப்புக் குறிக்குள்ளிருப்பதைக் கூர்ந்து கவனிக்க.

நிலைமொழி நெடிற்றொடர்க் குற்றியலுகர, உயிர்த்தொடர்க் குற்றியலுகர இறுதியை யுடையதாய் இருந்து, வேற்றுமைப் பட்டால் - டகர, றகரங்கள் இரட்டிக்கும்.

"நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுட்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே." (ந. சூ. 183)

1.	ஆடு	1.	[redacted]
2.	ஆட்டை	2.	மாட்டை
3.	ஆட்டால்	3.	மாட்டால்
4.	ஆட்டுக்கு	4.	மாட்டுக்கு
5.	ஆட்டிலிருந்து	5.	மாட்டிலிருந்து
6.	ஆட்டினுடைய	6.	மாட்டினுடைய
7.	ஆட்டில்	7.	மாட்டில்
8.	ஆடே	8.	மாடே
1.	ஆறு	1.	சோறு
2.	ஆற்றை	2.	சோற்றை
3.	ஆற்றால்	3.	சோற்றால்
4.	ஆற்றுக்கு	4.	சோற்றுக்கு
5.	ஆற்றிலிருந்து	5.	சோற்றிலிருந்து
6.	ஆற்றினுடைய	6.	சோற்றினுடைய
7.	ஆற்றில்	7.	சோற்றில்
8.	ஆறே	8.	சோறே

நிலைமொழி யீற்றில் மெய்யெழுத்து இருக்க வருமொழி
முதலில் உயிர் வந்தால் அவ்வுயிர் அம்மெய்யுடன்
சேர்ந்து உயிர்மெய் போலாகும்.

"உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே." (ந. சூ. 204)

மரம் + இதுதான்	=	மரமிதுதான்
பழம் + எங்கே	=	பழமெங்கே
பணம் + இல்லை	=	பணமில்லை
சுகம் + ஏது	=	சுகமேது
அவனும் + இவனும்	=	அவனுமிவனும்
ஒருவரும் + இல்லை	=	ஒருவருமில்லை.
நான் + எடுக்கவில்லை	=	நானெடுக்கவில்லை
அவன் + அல்லன்	=	அவனல்லன்
இவன் + ஏடு	=	இவனேடு
இவன் + ஓடு	=	இவனோடு
நாய் + எங்கே	=	நாயெங்கே
அவர் + அவர்	=	அவரவர்
காவல் + ஆள்	=	காவலாள்
தாள் + இல்லை	=	தாளில்லை

மொழியீற்று மெய்யெழுத்துக்களில், தனிக் குறில்
ஒன்றுடன் மட்டும் நிற்பவை உயிர் வந்தால் இரட்டிக்கும்.

"தனிக்குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும்."
(ந. சூ. 205)

மண் + ஓட்டர்	=	மண்ணோட்டர்
பெண் + எங்கே	=	பெண்ணெங்கே
பொன் + அணி	=	பொன்னணி
உன் + ஆடு	=	உன்னாடு
மெய் + அடிமை	=	மெய்யடிமை
பொய் + ஆள்	=	பொய்யாள்

கல் + உரல்	=	கல்லுரல்
நெல் + அரிசி	=	நெல்லரிசி
உள் + ஒளி	=	உள்ளொளி
எள் + ஏது	=	எள்ளேது

நிலைமொழி யிறுதியில் ண் - ன் இருக்க வருமொழியில் மொழிமுதல் வல்லினம் வந்தால், ண் - ட் ஆகவும், ன் - ற் ஆகவும் மாறிப்போம்.

"ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்
இயல்பு மாகும் வேற்றுமைக் கல்வழிக்
கனைத்துமெய் வரினு மியல்பா கும்மே." (ந. சூ. 209)

(மொழி முதல் வல்லினம் க,ச, த, ப)

கண் + கட்டி	=	கட்கட்டி
கண் + செவி	=	கட்செவி
மண் + பானை	=	மட்பானை
பொன் + கடுக்கன்	=	பொற்கடுக்கன்
பொன் + சட்டி	=	பொற்சட்டி
பொன் + தகடு	=	பொற்றகடு
பொன் + தாமரை	=	பொற்றாமரை
பொன் + பானை	=	பொற்பானை

தனிக் குறிலைச் சேராத மொழியிறுதியிலுள்ள ணகர—னகர மெய்கள், வருமொழி முதலில் வரும் நகரமானது திரிந்து அதாவது மாறிவிட்டால் போய்விடும்.

"குறிலணை வில்லா ணனக்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே." (ந. சூ. 260)

ஊண் + நன்று	=	ஊணன்று
கோன் + நல்லன்	=	கோனல்லன்

நிலைமொழியிறுதியில் மகர ஒற்று நிற்க, வருமொழி முதலில் வல்லினமல்லாத பிற எழுத்துக்கள் வந்தால், மகரம் போய்விடும்; வல்லினம் வந்தால், மகர ஒற்றானது வரும் வல்லின இனமாக மாறும்.

"மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவு மாகும்." (ந. சூ. 219)

மரம் + உரல்	=	மர உரல்
சண்முகம் + உபாத்தியாயர்	=	சண்முக உபாத்தியாயர்
வலம் + நிலை	=	வல நிலை
முகம் + கண்டேன்	=	முகங் கண்டேன்
மரம் + செடி	=	மரஞ் செடி
பணம் + தந்தான்	=	பணந் தந்தான்

குறிப்பு:- வல்லின மொழிமுதல் எழுத்துக்கள் க, ச, த, ப ஆகிய நான்குமாம். அவற்றுள் பகரத்துக்கு மகரமே இனமாகையால் அதுவே வரும். ஆகையால், அதற்கு உதாரணம் தேவையில்லை.

நிலைமொழி யீற்றில் லகர - ளகர ஒற்றுகள் வந்திருக்க, வருமொழி முதலில் வல்லினம் வந்தால், லகர ஒற்று - றகர ஒற்றாகவும், ளகர ஒற்று - டகர ஒற்றாகவும் மாறும்; மெல்லினம் வந்தால் லகர ஒற்று - னகர ஒற்றாகவும், ளகர ஒற்று - ணகர ஒற்றாகவும் மாறும்.

"லளவேற் றுமையிற் றடவும் அல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி
மேவி னணவும் இடைவரி னியல்பும்
ஆகும் இருவழி யானு மென்ப." (ந. சூ. 227)

நால் + காசி = நாற்காசி		
பால் + குடம் = பாற்குடம்		
பல் + கள் = பற்கள்		வல்லினம் வர,
புல் + செடி = புற்செடி		லகர ஒற்று - றகர
கல் + சாடி = கற்சாடி		ஒற்ருக மாறினதை
நல் + தாமரை = நற்ருமரை		இங்கு காண்க.
பகல் + பொழுது = பகற்பொழுது		

கள் + குடம் = கட்குடம்	வல்லினம்வர, ளகர
எள் + செடி = எட்செடி	ஒற்று - டகர
முள் + தண்டு = முட்டண்டு	ஒற்ருக மாறினதைக்
முள் + புதர் = முட்புதர்	காண்க.

நல் + நூல் = நன்னூல்	
நல் + நெறி = நன்னெறி	மெல்லினம் வர,
பல் + நூல் = பன்னூல்	லகர ஒற்று - னகர
கல் + மலை = கன்மலை	ஒற்ருக மாறினதைக்
நூல் + முகம் = நூன்முகம்	காண்க.

வாள் + முகம் = வாண்முகம்	மெல்லினம்வர ளகரம்
எள் + நெய் = எண்ணெய்	- ணகர மாயிற்று.

வருமொழியில் தகர - நகரங்கள் வர, நிலைமொழியில் னகர-லகரம் இருந்தால், முறையே றகர-னகரங்களாகவும், ணகர - ளகரம் இருந்தால், முறையே டகர - ணகரங்களாகவும் மாறிவிடும்.

"னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகும் தநக்கள் ஆயும் காலே." (ந. சூ. 237)

பல் + தாது = பன்ருது	லகரத்தின் முன் தகரம்-றகர
பல் + நீட்சி = பன்னீட்சி	மாகவும், நகரம்-னகரமாகவும் மாறிவிட்டன

பொன் + தீது = பொன்றீது பொன் + நன்று = பொன்னன்று	}	னகரத்தின் முன் தகரம் - றகரமாகவும், நகரம் - னகரமாகவும் மாறின.
முள் + தீது = முட்டீது முள் + நன்று = முண்ணன்று	}	ளகரத்தின் முன் தகரம் - டகரமாகவும், நகரம் - ணகரமாகவும் மாறின.
பெண் + தீது = பெண்டீது பெண் + நன்று = பெண்ணன்று	}	ணகரத்தின் முன் தகரம் - டகரமாகவும், நகரம் - ணகரமாகவும் மாறின.

குறிப்பு:- புணர்ச்சியில் வரும் மாறுதல்களெல்லாம் நாவின் இலகுபற்றியே ஏற்படுமென்று மொழி நூல் கூறுகிறது. ஒவ்வொருவரும் உச்சரித்துப் பார்த்து இவ்வுண்மையை விளக்கலாம்.

எல்லாம் என்னும் பொதுச் சொல்லானது, வேற்றுமை யேற்கு மிடத்து அஃறிணைப் பொருளைக் குறிக்க வந்தால், அற்று என்னும் சாரியையும், 'உம்' என்பதையும் ஏற்கும்;
உயர்திணைப் பொருளைக் குறித்து வந்தால்
நம், உம் என்பவைகளை யேற்றுவரும்.

"எல்லா மென்பது இழிதிணை யாயின்
அற்றோ டுருபின் மேலும் முறுமே
அன்றே னம்மிடை யடைந்தற் றுகும்." (ந. சூ. 245)

எல்லா + அற்று (வேற்றுமை யுருபு) உம்

எல்லா + நம் + (வேற்றுமை யுருபு) உம்

1.	எல்லாம்	எல்லாம்
2.	எல்லாவற்றையும்	எல்லா நம்மையும்
3.	எல்லாவற்றாலும்	எல்லா நம்மாலும்
4.	எல்லாவற்றுக்கும்	எல்லா நமக்கும்
5.	எல்லாவற்றிலிருந்தும்	எல்லா நம்மிலிருந்தும்
6.	எல்லாவற்றினுடையவும்	எல்லா நம்முடையவும்
7.	எல்லாவற்றிலும்	எல்லா நம்மிலும்
8.	...	...

வேற்றுமை யுருபுகள் ஏற்கும்போது தான், தாம், நாம் இம் மூன்று பெயர்களும் முதல் குறுகும்; யான், யாம், நீ, நீர் என்னும் பெயர்கள் முறையே என், எம், நின், நும் என வரும். இவ்வேழு பெயர்களோடும் குவ்வுருபு புணரும்போது இடையில் அகரச்சாரியை வரும். ஆனால், அவ்விடங்களில் "தனிக்குறில் முன்னொற்று உயிர்வரினிரட்டும்" என்னும் விதிப்படி இரட்டிக்காது. இதுவும் வேற்றுமைக்கே.

"தான்தாம் நாம்முதல் குறுகும் யான் யாம்
நீ நீர் என்எம் நின் நுமாம்பிற
குவ்வி னவ்வரு நான்கா றிரட்டல." (ந. சூ. 247)

1	தான்	தாம்	நாம்	தான், தாம்,
2.	தன்னை	தம்மை	நம்மை	நாம் என்ற
3.	தன்னால்	தம்மால்	நம்மால்	பெயர்கள்
4.	தனக்கு	தமக்கு	நமக்கு	மற்ற
5.	தன்னின்	தம்மின்	நம்மின்	வேற்றுமை-
6.	தன்னுடைய	தம்முடைய	நம்முடைய	களில் முதல்
7.	தன்னில்	தம்மில்	நம்மில்	குறுகினதைக்
8.	...	...	...	காண்க.

1. யான்	யாம்	நீ	நீர்
2. என்னை	எம்மை	நின்னை	நும்மை
3. என்னால்	எம்மால்	நின்னால்	நும்மால்
4. எனக்கு	எமக்கு	நினக்கு	நுமக்கு
5. என்னின்	எம்மின்	நின்னின்	நும்மின்
6. என்னுடைய	எம்முடைய	நினது	நுமது
7. என்னில்	எம்மில்	நின்னில்	நும்மில்
8. ...	...	...	...

குறிப்பு:- என் + அ + கு = எனக்கு. இதில் தனிக் குறில் முன்னொற்றாக நின்ற என்-இரட்டிக்காமை காண்க. இரட்டித்தால் "என்னக்கு" என்று வரும். அப்படி வரவில்லை.

ஆறும் வேற்றுமையிலும் என் + உடைய = என்னுடைய என்று இரட்டித்து வந்தாலும் அது சொல்லுருபாதலின் அதைக்கொண்டு இரட்டிக்கும் என்று கூறலாகாது.

பழைய நூல்களில் "உன்" என்றும், "உங்கள்" என்றும் வழங்கப்படவில்லை. "நின்" என்றும், "நும்" என்றுமே வழங்கப்பட்டிருக்கிறது. பிற்காலங்களில் எப்படியோ "நின்" என்பது "உன்" என்றும், "நும்" என்பது "உங்கள்" என்றும் மாறிவிட்டது. உதாரணம்:-

"நன்னீரை வாழி யனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்" (திருக்குறள்)

"நும்முச் சேறுப்ப அழுதாள் நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ வென்று" (திருக்குறள்)

"நான்" என்பதும் பழைய நூல்களில் இல்லை. "யான்" என்பதே வழக்கு.

"யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்" (திருக்குறள்)

ஐந்தாம் பாகம்

வாக்கியப் பிழை நீக்கும் பாடங்கள்

முன்னுரை:- வாக்கியப் பிழையின்றி வாக்கியம் எழுத வேண்டுமானல் வாக்கியம் இன்னதென்று தெரிந்துகொள்ள வேண்டும். வாக்கியம் சொற்களால் ஆகியதாகையால், சொற்கள் இன்னவென்றும் தெரிந்துகொள்ள வேண்டும். சொற்கள் பற்றிய முழுவிவரமும், ஆறும் பாகம், "**சொற்கள் கற்கும் வகை**" என்னும் பாடங்களில் வரும். ஆகையால் இங்கு சொற்களைப் பற்றிச் சுருக்கமாகவே கூறப்படும்.

"வாக்கியம்" கற்குமிடத்தில் பெயர்ச்சொல், வினைச் சொல் என்ற இரண்டு வகைச் சொற்களைத் தெரிந்து கொண்டாலே போதும்.

ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது பெயர்ச் சொல். ஒரு செயலின் பெயரைச் சுட்டுவது வினைச்சொல். பெயர்ச் சொல்லில் திணை, பால், எண், இடம், வேற்றுமை இவை விளங்கும்; வினைச்சொல்லில் திணை, பால், எண், இடம், காலம் இவை வெளிப்படும்.

ஒரு சொல் பெயர்ச் சொல்லா, அல்லது வினைச்சொல்லா என்று தெரிந்து கொள்ளும் வழி, வேற்றுமைப் படுத்தியும், காலப்படுத்தியும் பார்ப்பதாகும். வேற்றுமை யேற்குமானல் பெயர்ச்சொல்; காலம் ஏற்குமானல் வினைச்சொல் என்று அறிந்துகொள்ள வேண்டும்.

பெயர்ச் சொற்களும், வினைச் சொற்களும் அடையும் விகற்பங்கள் ஆறும் பாகத்தில் காட்டப்படும். அங்கு சொல்லின் இறுதியெழுத்து ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணம் காட்டப்படுமாகையால், எல்லாச் சொற்களையும் அதனதன் விகற்பங்களுடன் அறிந்துகொள்ள முடியும். வாக்கியம் இன்னதென்று காட்டி, வாக்கியப் பிழையில்லாமல் எழுதும் வகை மட்டும் இங்கு காட்டப்படும்.

வாக்கியம் இன்னதென்பது

"வாக்கியம்" என்பது எழுவாயும், பயநிலையும் சேர்ந்தது. எழுவாய் - பெயர்ச் சொல்லாக இருக்கும். பெயர்ச் சொல் உரிய வினைச் சொல்லுடன் பொருந்திப் பொருள்படுமிடத்து அப் பெயர்ச் சொல் "எழுவாய்" எனப்படும். "பயநிலை" என்பது வினைச் சொல்லா யிருக்கும். அவ் வினைச் சொல்லும் முற்றிய வினையா யிருந்தால்தான் "பயநிலை" என்னப்படும். "அவன்" என்பது பெயர்ச் சொல்; "நடந்தான்" என்பது வினைச் சொல்; இவ்விரண்டும் பொருந்திப் பொருள்படுமிடத்து வாக்கியம் ஆகும். "நடந்தான்" என்னும் வினைச்சொல் முற்று வினை. ஆகையால், அது "பயநிலை" யாகும். நட என்றாவது, நடந்து என்றாவது வந்தால், அவ்வினைச் சொல் பயநிலையாக மாட்டாது. அப்போது வாக்கியமும் ஆக மாட்டாது.

சில வாக்கியங்கள் எழுவாய், பயநிலை ஆகியவைகளுடன் செயப்படு பொருளும் பொருந்தியிருக்கும். செயப்படு பொருள் பெயர்ச் சொல்லாகவே யிருக்கும். "இராமன் பழத்தைத் தின்றான்" என்பதில் எழுவாய், செயப்படு பொருள், பயநிலை ஆகிய மூன்று உறுப்புகள் இருக்கின்றன. இராமன்-எழுவாய்; பழம்-செயப்படு பொருள்; தின்றான்-பயநிலை. எழுவாயின் செயலை ஏற்கும் பொருள் செயப்படு பொருளாகும்.

சில வாக்கியங்கள் எழுவாய், செயப்படு பொருள், பய நிலை ஆகியவைகளுடன் அடைமொழிகளும் பொருந்தி யிருக்கும். "நல்ல பையன் கனிந்த பழத்தைச் சுவைத்துச் சுவைத்துச் சாப்பிடுவான்" என்னும் வாக்கியத்தில் இவ்-வடைமொழிகளைக் காண்கிறோம். விளக்கம்:-

பையன் — (எழுவாய்)
நல்ல — (எழுவாய் அடைமொழி)
பழத்தை — (செயப்படு பொருள்)
கனிந்த — (செயப்படு பொருள் அடைமொழி)
சாப்பிடுவான் — (பயனிலை)
சுவைத்துச் சுவைத்து— (பயனிலை அடைமொழி)

பின்வருமாறு கேள்விகள் கேட்டால் தெளிவாய் விளங்கும்:-

(1) யார்? பையன்
(2) எப்படிப்பட்ட பையன்? நல்ல பையன்
(3) என்ன செய்வான்? சாப்பிடுவான்
(4) எப்படிச் சாப்பிடுவான்? சுவைத்துச் சுவைத்துச் சாப்பிடுவான்
(5) எதைச் சாப்பிடுவான்? பழத்தை
(6) எப்படிப்பட்ட பழத்தை? கனிந்த பழத்தை

இப்படி அடை மொழிகள் சேர்ந்து வரும் வாக்கியங்களை மேலே கண்ட விதமான கேள்விகள் கேட்டுப் பிரித்துப் பிரித்துக் கூறிவிடலாம்.

சொல்லாக அல்லது சொற்றொடராக நிற்கும்போது, உரிச் சொல்லாகப் பெயர் பெறுவது வாக்கியமாக அமையும் போது அடைமொழியென்று சொல்லப்படும். எழுவாயைத் தழுவி வருவதை எழுவாய் அடைமொழியென்றும், செயப்படு பொருளைத் தழுவி வருவதைச் செயப்படு பொருள் அடைமொழி யென்றும், பயனிலையைத் தழுவி வருவதைப் பயனிலை அடைமொழி யென்றும் கூறிவிடலாம்.

எழுவாயின் வகைகள்

"எழுவாய்" என்பது எழுகின்ற வழியென்று பொருள் படும். வாக்கியம் எழுகின்ற வழி அதுவாதலால் அப்பெயர் பெற்றது போலும்.

"படர்க்கை எழுவாய்", "முன்னிலை எழுவாய்", "தன்மை எழுவாய்", "தோன்றா எழுவாய்" என எழுவாய்களுக்குப் பெயர் கொடுக்கலாம். படர்க்கைப் பெயர்கள் எழுவாயாக வந்தால் படர்க்கை எழுவாய் என்றும், முன்னிலைப் பெயர்கள் எழுவாயாக வந்தால் முன்னிலை எழுவாய் என்றும், தன்மைப் பெயர்கள் எழுவாயாக வந்தால் "தன்மை எழுவாய்" என்றும் சொல்லப்படும். இவற்றுள் படர்க்கை எழுவாய்க்கு மட்டும் திணை, பால் உண்டு. முன்னிலை, தன்மை எழுவாய்களுக்கு திணை, பால் இல்லை; † ஒருமை, பன்மை மட்டுமே உண்டு.

"தோன்றா எழுவாய்" என்பது, "அவன் வந்தானா?" என்னும் கேள்விக்கு, "வந்தான்" என்று மட்டும் விடை வந்தால், "அவன்" என்னும் சொல் தோன்றாமல் நின்று பொருள் தருவதால் அதனைத் "தோன்றா எழுவாய்" என்போம்.

செயப்படு பொருளின் வகைகள்

செயப்படு பொருளில் ஆக்கற் செயப்படுபொருள், அழித்தற் செயப்படுபொருள், அடைதற் செயப்படு பொருள், நீத்தற் செயப்படு பொருள், ஒத்தற் செயப்படு பொருள், உடைமைச் செயப்படு பொருள் எனச் செயப்படு பொருள்கள் பல வகைப்படும். அதன் விவரமெல்லாம் இங்கு வேண்டப்படாமையால் விடப்படுகிறது.

---

† "படர்க்கை வினைமுற்று நாமங் குறிப்பிற்
பெறப்படும் திணைபா லனைத்து மேனை
இடத்தவற் றொருமைப் பன்மைப் பாலே." (ந. சூ. 265)

பயநிலையின் வகைகள்

பயநிலைகள் - வினைப் பயநிலை, பெயர்ப் பயநிலை, வினாப் பயநிலை என மூன்று வகைப்படும். வினைமுற்றே பயநிலை-யாக வருவது வினைப் பயநிலை. பெயர்ச் சொல்லே பயநிலை-யாக வருவது பெயர்ப் பயநிலை. "அவன் தோட்டக்காரன்" என்னும் வாக்கியத்தில் பெயர்ச்சொல்லே பயநிலையாக வந்துள்ளது. இதுதான் பெயர்ப் பயநிலை. "அவன் தோழனா?" என்னும் வாக்கியத்தில் விளங்குவது வினாப் பயநிலை.

வாக்கியங்களின் வகைகள்

வாக்கியங்கள் பல வகைப்படும். தனிநிலை வாக்கியம், தொடர் நிலை வாக்கியம், இடைப் பிறவரல் வாக்கியம் என்பன அவற்றுட் சில:-

"அவன் பாடத்தைப் படித்தான்" என்பது தனி நிலை வாக்கியம். "சட்டம்பிள்ளை எச்சரிக்க அவன் பாடத்தைப் படித்தான்" என்பது தொடர்நிலை வாக்கியம். "உபாத்தி-யாயர் வந்து விட்டார்" என்று சட்டம்பிள்ளை சொல்லி எச்சரிக்க அவன் பாடத்தைப் படித்தான்" என்பது இடைப் பிறவரல் வாக்கியம். இதில் "உபாத்தியாயர் வந்து விட்டார்" என்பது இடைப் பிறவரல்.

தனி நிலை வாக்கியம்

தனி நிலை வாக்கியம்: (1) ஒரு எழுவாய்க்குப் பல பயநிலைகள் உள்ள வாக்கியம்; (2) பல எழுவாய்களுக்கு ஒரு பயநிலை உள்ள வாக்கியம் என இருவகைப்படும்.

“கோபாலன் சாப்பிட்டான்; உறங்கினான்; எழுந்து படித்தான்.” என்பது ஒரு எழுவாய்க்குப் பல பயனிலைகள் உள்ள வாக்கியம்; இப்படிப்பட்ட வாக்கியத்தை ஒரே பய-னிலையுள்ள வாக்கியமாக ஆக்கி விடலாம். “கோபாலன் சாப்பிட்டு, உறங்கி, எழுந்து படித்தான்.” என்று முடித்து விட்டால் ஒரே பயனிலையுள்ள வாக்கியமாக ஆகிவிடும்.

“ஆடுகளும் மாடுகளும் மேய்ந்தன” என்னும் வாக்கியம், பல எழுவாய்களுக்கு ஒரு பயனிலையுள்ள வாக்கியம். “ஆடுகள் மேய்ந்தன, மாடுகள் மேய்ந்தன” என்று பிரித்து விட்டால் இரண்டு தனி வாக்கியங்களாக ஆகிவிடும்.

தொடர்நிலை வாக்கியம்

தொடர்நிலை வாக்கியத்தில் பல வாக்கியங்களை இணைத்துக் கொண்டே போகலாம். உதாரணம்;-

“தமிழ்ப் பெருமக்கள் இற்றைக்கு ஈராயிரம் ஆண்டு-களுக்கு முன்னர், அக்காலத்தில் கூட்டுவாழ்க்கை முறையில் முன்னேறியிருந்த எந்நாட்டினரும், எம்மொழியினரும் அடைந்திராத கலை வளமும் பிற நலன்களும் கைவரப்-பெற்று, அரசியல் முறையில் உலகப் பெரு மக்களுக்கு வழி காட்டும் உயரிய நிலையில் வாழ்ந்து வந்தனர் என்பது தமிழ் இலக்கிய இலக்கண நூல்களானும், கல்வெட்டு, செப்பேடு, அகழ்ந்து கண்டு பிடிக்கும் சின்னங்கள் முதலிய சாசனங்களானும், பிறநாட்டுப் போக்கு வர-வாளர்கள் எழுதிவைத்திருக்கும் குறிப்புரைகளானும் நன்கு விளங்குகின்றதென்று வரலாற்றாராய்ச்சி வல்லுநர்களும்,

நூலாராய்ச்சிப் புலவர்களும் எடுத்துக்கூறி வருவதைக் கேட்கும் இனப்பற்று மிக்க தமிழர் எவரும் செந்தமிழ் மொழியின் சிறப்பினையும், தமிழினத்தின் பண்டைய நாகரீகத்தினையும் நன்குணர்ந்து, உணர்ச்சியால் உந்தப்பட்டு முதலில் தமிழரசு அமைய வேண்டும் என்னும் முடிவுக்கு வந்து, தமிழரசின் முறையை நன்கு தெரிந்து கொள்ள திருக்குறளில் பொருட்பால் என்னும் பகுதியில் அரசியல் பற்றிக் கூறியிருக்கும் அதிகாரங்களைக் கற்றுக் கொள்வதே வழியெனத் தேர்ந்து, அவைகளைச் சரியாய்க் கற்க மொழியறிவு இன்றியமையாத தென்பதையும் ஓர்ந்து, மொழியறிவு சரியாய்ப் பெறவோ தக்க சாதனமில்லையே யென மயங்கி, பின் பால குருகுல வித்யாலயத்தார் வெளியிட்டிருக்கும் "தமிழ் கற்கும் முறை" என்னும் நூல் மொழியறிவை வளர்ப்பது எனக் கேள்வியுற்று, இந்நூலை வாங்கிப் படித்து மொழியறிவு பெற்று, திருக்குறள் படித்து, தமிழரசின் தன்மையைத் தெரிந்து, தமிழ் நாட்டில் தமிழரசு அமைத்துப் பண்டைய உயர்வை அடைவர் எனில் அது முற்றும் உண்மையேயாம்."

தனித்தனி வாக்கியங்களை முடிவு காட்டாமல் தொடர்ந்துகொண்டு போவதே தொடர்நிலை வாக்கியம்.

இடைப் பிறவரல் வாக்கியம்

இடைப் பிறவரல் வாக்கியம் என்பது இடையில் சிலவோ பலவோ வாக்கியங்கள் முற்றுப்பெற்றும், முதல் எழுவாய்க்குரிய பயனிலை, இடையிலுள்ள வாக்கியங்களை உள்ளடக்கி இறுதியில் நின்று முடிவதாகும்.

தமிழ்ப் பெரியார்களில் ஒருவர், "நம் முன்னோர்கள் மருத்துவ நூலில் வல்லுநரெனினும், வான நூலாராய்ச்சியில் வடவரே நம்மவரினும் வளம்பெற்றிருந்தனர்" என்று கூறும் போலிப் புலவர்களை, 'செஞ்ஞாயிற்றுச் செலவும் - அஞ்-ஞாயிற்றுப் பரிப்பும் - பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும் - வளிதிரிதரு திசையும்-வறிது நிலையிய காயமும் என்றிவை-சென்றளந்து அறிந்தோர் போல என்றும் - இனைத்து என்போரு முளரே...' என்னும் புறநானூற்றுப் பாட்டைப் பார்க்குமாறு அறைகூவி அழைக்கின்றேன்" என்று ஒரு மணி நேரம் கடல்மடை திறந்தாற்போல், தமிழரின் கலை வளத்தைக் கேட்போர் மனம் வீறுகொள்ளுமாறு விளக்கிக் கூறினர்.

வாக்கியப் பிழை இன்னதென்பது

வாக்கியத்தின் உறுப்புகள் எழுவாய், செயப்படு பொருள், பயநிலை என்னும் மூன்றுமே. அவைகளைத் தழுவி வருபவை அடைமொழிகளாகும். இவைகள் ஒன்றுடன் ஒன்று பொருந்தாமல் வருவது வாக்கியப் பிழை யாகும்.

எழுத்துப் பிழை, சொற் பிழை, சந்திப் பிழை இவைகளைப்போல வாக்கியப் பிழைகளை வகுத்துக் கூறி, அவைகளைப் போக்குவதற்குரிய வழிகளைக் கூற வகையில்லை. வாக்கியத்தின் இலக்கணம் நமது இலக்கண நூலில் இல்லாமையால் வாக்கியப் பிழைகளை வரையறுத்துக் கூற இடமில்லை. விதியிருந்தால்தான் அதைக்கொண்டு குற்றம் கண்டு கூறக்கூடும். விதியில்லாமையால் குற்றம் கண்டு பிடிக்கக் கூடவில்லை. அவைகளை நீக்கும் வழியும் கூற முடியவில்லை.

ஆகையால், இப் பாகத்தில் கூறியிருக்கும் சில உதாரண வாக்கியங்களை உதவியாகக் கொண்டு வாக்கியப் பிழையில்லாமல் எழுதும் முயற்சியில் ஈடுபடுவார்களாக

ஆறும் பாகம்

சொற்கள் கற்கும் வகை

கவனிப்பு

"சொல்" என்பது இன்னதென்று முதலாவது தெரிந்துகொள்ள வேண்டும். எழுத்து தனித்தாவது, சில சேர்ந்தாவது ஒரு பொருளைத் தெரிவிக்குமானால், அது சொல்லாகும். எழுத்து தன்னை மட்டும், அதாவது தான் இன்ன எழுத்து என்று மட்டும் தெரிவிப்பதோடு நின்று விட்டால் அது சொல்லாகாது. தன்னைத் தெரிவிப்பதோடு ஒரு பொருளையும் தெரிவிக்குமானால்தான் அது சொல் லெனப்படும். அதுபற்றிய விதி, காக்கை பாடினியம், தொல்காப்பியம்; நன்னூல் இம் மூன்று இலக்கண நூல்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

காக்கை பாடினியம்

"தன்னை யுணர்த்தி னெழுத்தாம் பிறபொருளைச்
சுட்டுதற் கண்ணதாம் சொல்"

தொல்காப்பியம்

"எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே"

"பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும் என்மனார் புலவர்"

நன்னூல்

"ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்று
இருதிணை யைம்பாற் பொருளையுந் தன்னையும்
மூவகை யிடத்தும் வழக்கோடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே."

எனவே, எழுத்து தனித்தாவது, சில சேர்ந்தாவது பொருள் தருமானால் அது சொல்லென்றும், எழுத்து தனித்தாகிலும், சேர்ந்தாகிலும் நின்றும், பொருள் தராவிட்டால் அது சொல்லல்ல, வெறும் எழுத்து என்றும் தெரிந்துகொண்டோம்.

இனி சொற்கள் எத்தனை வகைப்படும் என்று தெரிந்து கொள்ள வேண்டும். பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைச் சொற்கள் இருந்த போதிலும், * இடைச் சொல் பெயரிடத்திலாவது, வினையிடத்திலாவது நின்று பொருள் தருமேயல்லாமல், தனித்துப் பொருள் தராதாகையாலும், உரிச்சொல் †பண்புப் பெயர்ச் சொல்லேயாதலாலும் இடைச் சொல்லும், உரிச் சொல்லும் தனிக் குணம் உடையதல்லவென்று தெரிகிறது. அதனால்தான் தொல்காப்பியர்,

"சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப அறிந்திசி னோரே"

"இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கிற் றோற்று மென்ப" என்றார்.

---

*"வேற்றுமை வினைசா ரியையோப் புருபுகள்
தத்தம் பொருள விசைநிறை யசைநிலை
குறிப்பெனெண் பகுதியில் தனித்தியல் இன்றி
பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்(து)
ஒன்றும் பலவும்வந் தோன்றுவ திடைச்சொல்"

†"பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணம் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன உரிச்சொல்"

ஆகையால், பெயர்ச் சொல்லையும், வினைச் சொல்லையும் நன்கு தெரிந்துகொண்டால், எல்லாச் சொற்களையும் தெரிந்து கொண்டது போலாகுமெனலாம்.

பெயர்ச் சொற்கள் எண்ணிறந்தன; வினைச் சொற்களும் அத்தகையன. அப்படியிருக்க அவைகளைத் தெரிந்து கொள்வது எப்படியென்று ஐயம் தோன்றும். யான் தமிழ் இலக்கணத்தில் கவனம் செலுத்தி வந்ததின் பயனாக பெயர்ச்சொற்களின் போக்கையும், வினைச் சொற்களின் போக்கையும் ஒரு வரம்புக்குள் அடக்கி விடலாம் என்று தெளியலானேன்.

பெயர்ச் சொற்களின் விகற்பம் அல்லது மாறுதல் எட்டு வேற்றுமைகளே. வினைச் சொற்களின் விகற்பம் (1) ஏவல், (2) வியங்கோள் ஏவல், (3) வினைமுற்று, (4) வினையெச்சம், (5) பெயரெச்சம், (6) வினையாலணையும் பெயர், (7) தொழிற்பெயர், (8) வினையடிப் பெயர் என எட்டு வகையாம். ஒரு வினைச் சொல் இரு நூற்றுக்கு மேலான விதங்களில் வருவதைக் காணலாம். நன்னூலார் வினைமுற்றைப்பற்றி மட்டும் விதந்து கூறினர்.

அச்சூத்திரம் வருமாறு காண்க:-

“ஒருவன்முத லைந்தையும் படர்க்கை யிடத்தும்
ஒருமைப் பன்மையைத் தன்மைமுன் னிலையினும்
முக்கா லத்தினு முரண முறையே
மூவைந் திருமூன் றுறழ் முற்று
வினைப்பத மொன்றே மூவொன் பானும்

பெயர்ச் சொற்கள் மாறுதலடையும்போது வேற்றுமை யுருபுகள், சாரியைகள், விகுதிகள் இவைகளோடு புணர்ந்து வேற்றுமைப்படும். வினைச்சொற்கள் காலங்காட்டும் இடை-

நிலைகள், விகுதிகள், சாரியைகள் இவைகளோடு புணர்ந்து விகற்பப்படும். பதத்தோடு பதம் புணர்ந்தாலும் சரி, பதத்தோடு உருபுகள், விகுதிகள், சாரியைகள் இவைகள் புணர்ந்தாலும் சரி புணர்ச்சி விதி ஒன்றே. நிலைமொழி யீற்றில் நிற்கும் எழுத்தையும், வரும் பதமோ, உருபோ, சாரியையோ, விகுதியோ, இடைநிலையோ இவற்றின் முதலில் நிற்கும் எழுத்தையும் பொறுத்தே புணர்ச்சியின் மாறுதல் ஏற்படுகிறது. பெரும்பாலும் நிலைமொழியீற்று எழுத்தைப் பொறுத்தே மாறுதல் ஏற்படுகிறது. ஆகையால், நிலைமொழியின் கடைசியில் நிற்கும் எழுத்துக் களைக் கணக்கிட்டு, அவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணம் கொடுத்து விட்டால் எல்லாச் சொற்களின் மாறுதல்களும் தெரிந்துவிடும் என்பது எமது இலக்கணப் பயிற்சியால் கிடைத்த உண்மையாகும். "மரம்" என்னும் பெயர்ச்சொல் மரத்தை, மரத்தால் என்று வேற்றுமைப் படுவதுபோல, குளம், வடம், குடம் என்னும் மகரவீற்றுச் சொற்களும் அதே மாதிரி மாறுதலடைவதைப் பார்க்கலாம். "நட" என்னும் வினைச்சொல் நடந்தான், நடக்கிறான், நடப்பான் என்று விகற்பப்படுவது போல, கிட, மற, இற என்னும் அகரவீற்றுச் சொற்களும் அதே மாதிரி விகற்ப மடைவதை எளிதில் காணலாம்.

எனவே, இறுதியெழுத்துக்களைக் கணக்கிட்டு, வகைக்கு ஒவ்வொன்றாக உதாரணங் கொடுத்துவிட்டால், அவ்வவ் விறுதியையுடைய சொற்களை அவ்வவ்வாறே எழுதிப் பார்த்து, எல்லாச் சொற்களின் போக்கையும் அறிந்து கொள்வார்கள் என்று கருதி, இப்பாடத்தில் உதாரணங்கள் கொடுக்கப்படுகின்றன.

எல்லாச் சொற்களும் 24 அல்லது 23 எழுத்துக்களையே இறுதியாகக் கொண்டு அமைகின்றன என்று நன்னூலில் 3 சூத்திரங்கள் வரையறுத்துக் கூறுகின்றன. அவை பின் வருவன:-

"ஆவி ஞணநமன யரலவ ழளமெய்
சாயு முகரநா லாறு மீறே" (107)

"நடவா மடிசீ விடுகூ வேவை
நொப்போ வௌவுரி ஞுண்பொருந் திரும்தின்
தெய்யார் செல்வவ் வாழ்கே ளஃகேன்
றெய்திய விருபான் மூன்று மீற்றவும்
செய்யே னேவல் வினைப்பகாப் பதமே" (137)

"எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞநமய வக்க ளியல்பும்
குறில்வழி யத்தனி யைந்நொது முன்மெலி
மிகலுமாம் ணளனல வழிநத் திரியும்" (158)

இவ்வாறு வரையறுத்துக் கூறியிருப்பவைகளிலும், சில எழுத்துக்கள் மொழிக்கு இறுதியில் வருவது இக்கால நூல்களில் காணப்படவில்லை.

பெயர்ச் சொற்களில் அ, ஊ, எ, ஏ, ஒ, ஓ, ஔ, ஞ், ங் என்ற எழுத்துக்களை இறுதியாகக் கொண்ட சொற்கள் காணப்படவில்லை. வினைச் சொற்களில் எ, ஏ, ஒ, ஔ, ஞ், ங் என்ற எழுத்துக்கள் இறுதியில் அமைந்த சொற்கள் காணப்படவில்லை. ஆகையால், அவைகளைத் தவிர மற்றவைகளுக்கு மட்டும் உதாரணங் கொடுப்பது போதுமானதாகும்.

பெயர்ச் சொற்களில் பன்மை விகுதியான "கள்", வேற்றுமையில் வரும் விதம் ஒன்று கூடுதலாகக் காட்டப்படும். வினைச் சொற்களில் ஒரே இறுதியையுடையது இரண்டு அல்லது மூன்று விதமாய் வருவதானால், அவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணம் கொடுக்கப்படும். "படு", "படுத்தான்" என்று வர, "விடு", "விட்டான்" என்றும்; "சா", "செத்தான்" என்று வர, "வா" "வந்தான்" என்றும், "கா", "காத்தான்" என்றும் வருபவைகளுக்குத் தனித்தனி உதாரணம் கொடுக்கப்படும்.

பெயர்ச் சொல் விகற்பங்களும், வினைச் சொல் விகற்பங்களும் தனித்தனியே இரண்டு பாடங்களாக வரும். "பெயர்ச் சொல் விகற்பங்கள்", "வினைச் சொல் விகற்பங்கள்" எனப் பாடங்களின் பெயர்கள் அமையும். ஒவ்வொரு உதாரணத்தின் அடியிலும் பயிற்சிக்காக, அதே இறுதியையுடைய சொற்கள் பல வரையப்படும். அவைகளை, மாதிரியின்படி விகற்பித்து எழுதியும், சொல்லியும் பார்க்க வேண்டும்.

"முதலாம் பாடம் — பெயர்ச் சொல் விகற்பங்கள்" என்றும், "இரண்டாம் பாடம்—வினைச் சொல் விகற்பங்கள்" என்றும் பாடங்களுக்குப் பெயர்கள் கொடுக்கப்படுகின்றன. பெயர்ச் சொற்களும், வினைச் சொற்களும் அடையும் மாறுதல்களைத்தான், இலக்கண நூல் மரபுப்படி, விகற்பங்கள் என்று கூறுகிறோம். இக்கால வழக்கில் பயின்றுவருகின்ற சொற்களுக்கு மட்டும் உதாரணமும், அப்பியாசமும் கொடுக்கிறோம். இறுதியில் வருவதாக இலக்கண நூல்களில் விதிக்கப்பட்டிருப்பவைகளில் சில இக்கால வழக்கில் வாராமையால் அவற்றை விட்டுவிட்டு, வரக்கூடியவைகளுக்கு மட்டும் உதாரணமும், அப்பியாசமும் கொடுக்கப்பட்டிருப்பதைக் கற்பவர்கள் கருத்தில் இருத்திக்கொள்ள வேண்டும்.

முதலாம் பாடம்

பெயர்ச் சொல் — விகற்பங்கள்

கவனிப்பு

பெயர்ச் சொல் விகற்பங்கள் கற்கு முன், பெயர்ச் சொல் இன்னது என்று தெரிந்து கொள்வது அவசியம். இடுகுறியாகவாவது, காரணத்தோடாவது மரபு முறை-யிலோ, ஆக்க முறையிலோ ஒரு பொருளுக்குப் பெயராக வந்து, காலம் தோற்றாமல், வேற்றுமையை ஏற்கக் கூடியதாய் இருந்தால் அது பெயர்ச் சொல்லாகும். ஒரு சொல் பெயர்ச் சொல்லா, வினைச் சொல்லா என்று கண்டு பிடிக்கும் விவரம் தெரிந்துகொள்ள வேண்டும். வேற்றுமையை ஏற்கும் சொல் பெயர்ச் சொல்; காலத்தை ஏற்கும் சொல் வினைச் சொல் என்று முடிவு செய்து கொள்க. பின் வரும் சூத்திரம் இதனை விளக்கும்:—

"இடுகுறி காரண மரபோ டாக்கந்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா
வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்
றேற்பவும் பொதுவு மாவன பெயரே." (ந. சூ. 275)

ஒரு சொல் பெயர்ச் சொல் என்று தெரிந்துகொண்ட பின், அதனை இங்கு காட்டப்படும் உதாரணங்களைப் பார்த்துக் கொண்டு வேற்றுமைப் படுத்தி எழுதியும், சொல்லியும் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். அச் சொல் ஒருமையில் இருந்தால், பன்மைப் படுத்தி, வேற்றுமையாக்கவும் தெரிந்துகொள்ள வேண்டும்.

1. புறா	1. நரி	1. ஈ
2. புறாவை	2. நரியை	2. ஈயை
3. புறாவால்	3. நரியால்	3. ஈயால்
4. புறாவுக்கு	4 நரிக்கு	4. ஈய்க்கு
5. புறாவிலிருந்து	5. நரியிலிருந்து	5. ஈயிலிருந்து
6. புறாவினுடைய	6. நரியினுடைய	6. ஈயினுடைய
7. புறாவில்	7. நரியில்	7. ஈயில்
8. புறாவே	8. நரியே	8. ஈயே

குறிப்பு:- கடா, மாமா, அம்மா, அப்பா, அண்ணா, தாத்தா, கனா, வினா, விழா, ஐயா முதலிய ஆகாரவீற்றுப் பெயர்ச் சொற்களெல்லாம் "புறா" என்ற சொல்லைப்போல வேற்றுமைப்பட்டு வருவதை எழுதிப் பார்த்துக் கண்டு கொள்க.

அடி, தடி, படி, மடி, இடி, குடி, முடி, செடி, வெடி, கொடி, பொடி, ஆடி, காடி, சாடி, தாடி, மாடி, மூடி, சேடி, பேடி, கோடி, கட்டி, சட்டி, தட்டி, பட்டி, வட்டி, குட்டி, சுட்டி, புட்டி, முட்டி, கெட்டி, செட்டி, பெட்டி, கொட்டி, அணி, மணி, பிணி, துணி, ஆணி, காணி, சாணி, வாணி, ஏணி, கேணி, தோணி, அண்ணி, கண்ணி, கிண்ணி, உண்ணி, கதி, சதி, நதி, பதி, மதி, விதி, பாதி, மீதி, வீதி, பேதி, மேதி, அத்தி, கத்தி, இத்தி, புத்தி, முத்தி, ஆத்தி, பாத்தி, சிப்பி, தொப்பி, உமி, சாமி, பூமி, அம்மி, கும்மி, பரி, உரி, எரி, பலி, புலி, எலி, ஒலி, பொலி, பல்லி, கறி, தறி, மறி, பொறி, கனி, பனி, நுனி, கன்னி, ஆனி, தீனி, கூனி, மேனி இவைகளெல்லாம் "நரி" போலவே வரும், சொல்லியும் எழுதியும் பார்க்க. இகர இறுதிச் சொற்களில் இன்னும் சில கண்டுபிடித்து அவ்வாறு செய்யலாம்.

தேனீ போன்ற ஈகார வீற்றுச் சொற்கள் "ஈ" போலவே வேற்றுமைப்படும். சொல்க; எழுதுக.

1. சுக்கு	1. பசு	1. ஆடு
2. சுக்கை	2 பசுவை	2. ஆட்டை
3. சுக்கால்	3 பசுவால்	3. ஆட்டால்
4 சுக்குக்கு	4. பசுவுக்கு	4 ஆட்டுக்கு
5 சுக்கிலிருந்து	5. பசுவிலிருந்து	5. ஆட்டிலிருந்து
6. சுக்கினுடைய	6. பசுவினுடைய	6. ஆட்டினுடைய
7. சுக்கில்	7. பசுவில்	7. ஆட்டில்
8. சுக்கே	8. பசுவே	8. ஆடே

1. சாறு
2. சாற்றை
3. சாற்றால்
4. சாற்றுக்கு
5. சாற்றிலிருந்து
6. சாற்றினுடைய
7. சாற்றில்
8. சாறே

குறிப்பு:

செக்கு, கொக்கு, பொக்கு, மொக்கு, சாக்கு, நாக்கு, பாக்கு, வாக்கு, மூக்கு, தேக்கு, நஞ்சு, பஞ்சு, பிஞ்சு, குஞ்சு, நெஞ்சு, அச்சு, குச்சு, மூச்சு, பேச்சு, கட்டு, தட்டு, பட்டு, வட்டு, சிட்டு, பிட்டு, துட்டு, பொட்டு, மொட்டு, பாட்டு, சீட்டு, பூட்டு. மூப்பு, தோப்பு இவைகளை வேற்றுமைப் படுத்துக. "சுக்கு" போலவே வருவதைக் காண்பீர். வரகு, விறகு, சுளகு, கடுகு முதலியவைகளும் அப்படியே வரும்.

சிசு, கொசு, மடு, வடு, பரு, மறு, உரு, குரு, எரு, தெரு இவைகளெல்லாம் "பசு" போலவே வரும். செய்து பார்க்க.

காடு, மாடு, ஈடு, வீடு, கூடு, சூடு, பூடு, ஏடு, கேடு, பேடு, மேடு, வேடு, ஓடு, கோடு, தோடு இவைகள் "ஆடு" போல் வரும். எழுதிப் பார்க்க; சொல்லியும் பார்க்க.

ஆறு, நாறு, ஈறு, கூறு, நூறு, சேறு, சோறு இவைகளெல்லாம் "சாறு" போல் வரும். எழுதிப் பார்க்க; சொல்லியும் பார்க்க.

1. கடை	1. கண்	1. ஆண்
2. கடையை	2. கண்ணை	2. ஆணை
3. கடையால்	3. கண்ணால்	3. ஆணால்
4. கடைக்கு	4. கண்ணுக்கு	4. ஆணுக்கு
5. கடையிலிருந்து	5 கண்ணிலிருந்து	5. ஆணிலிருந்து
6. கடையினுடைய	6 கண்ணினுடைய	6. ஆணினுடைய
7. கடையில்	7. கண்ணில்	7. ஆணில்
8. கடையே	8. கண்ணே	8. ஆணே

குறிப்பு:- (அ) சடை, படை, மடை, வடை, இடை, விடை, உடை, குடை, எடை, கொடை, தொடை, அட்டை, கட்டை, சட்டை, தட்டை, பட்டை, மட்டை, குட்டை, முட்டை, செட்டை, பெட்டை, ஒட்டை, கொட்டை, மொட்டை, நகை, வகை, குகை, புகை, தொகை, வாகை, ஈகை, கூகை, தோகை, நங்கை, கங்கை, பனை, மனை, சினை, தினை, வினை, சுனை, முனை, பானை, யானை, பூனை, சேனை, மணை, கணை, திணை, கதை, விதை, உதை, பாதை, வாதை, சிதை, பேதை, மேதை, கோதை, போதை, அசை, பசை, இசை, திசை, ஆசை, மீசை, வீசை, பூசை, வேசை, ஓசை, தோசை, கச்சை, மொச்சை, இமை, சுமை, அம்மை, பொம்மை, சபை, அடைப்பை, அசப்பை, அரை, கரை, தரை, நரை, மறை, வரை, இரை, திறை, நிறை, பிறை, உறை, குறை, சுரை, துரை, துறை, நுரை, புரை, முறை அலை, கலை, தலை, மலை, இலை, சிலை, விலை, உலை, குலை, கொலை, தொலை, ஆலை, காலை, சாலை, மாலை, சேலை, வேலை, ஓலை, சோலை இவைகள் யாவும் "கடை" போல் வருவதைச் சொல்லி, எழுதிப் பார்த்து முடிவு செய்க.

(ஆ) பண், மண், விண், புண், எண், பெண் இவைகள் "கண்" போல் வரும். சொல்க; எழுதுக.

(இ) ஊண், பூண், அரண், பரண் என்பன "ஆண்" போல் வரும். சொல்லியும், எழுதியும் பயில்க.

1. படம்	1. கண்ணன்	1. காய்
2. படத்தை	2. கண்ணனை	2. காயை
3. படத்தால்	3. கண்ணனால்	3. காயால்
4. படத்துக்கு	4. கண்ணனுக்கு	4. காய்க்கு
5. படத்திலிருந்து	5. கண்ணனிலிருந்து	5. காயிலிருந்து
6. படத்தினுடைய	6 கண்ணனுடைய	6. காயினுடைய
7. படத்தில்	7. கண்ணனில்	7. காயில்
8. படமே	8. கண்ணனே	8. காயே

குறிப்பு:- தடம், மடம், வடம், இடம், திடம், விடம், குடம், புடம், முடம், பாடம், மாடம், பீடம், கூடம், சூடம், மூடம், வேடம், ஓடம், பட்டம், மட்டம், வட்டம், திட்டம், விட்டம், குட்டம், கொட்டம், ஆட்டம், கூட்டம், தேட்டம், ஓட்டம், கோட்டம், தோட்டம், பணம், மணம், பிணம், குணம், ஆணம், காணம், சாணம், பாணம், வாணம், சேணம், ஓணம், கோணம், அண்ணம், வண்ணம், கிண்ணம், பதம், மதம், இதம், விதம், காதம், சாதம், பாதம், மாதம், வாதம், சீதம், மீதம், வீதம், சூதம், பூதம், வேதம், ஓதம், கரம், மரம், உரம், கலம், பலம், மலம், வலம், நிலம், புலம், பழம், முழம், ஆழம், ஈழம், வேழம், களம், தளம், வளம், உளம், குளம், பள்ளம், உள்ளம், வெள்ளம், அயம், காயம், ஈயம், நேயம், தவம், பாவம் ஆகிய இவை-களும், இவை போன்ற மகர ஈற்றுச் சொற்களும் "படம்" போலவே வரும். சொல்லியும், எழுதியும் பார்க்க.

அண்ணன், அரன், அயன், பிரமன், சேரன், பேரன், திரன், சோரன், மாறன் இச் சொற்களையும், இதுபோன்ற சொற்களையும் முன் போல செய்க. "கண்ணன்" போலவே வருவதைக் காண்பாம்.

நெய், மெய், நொய், பொய், மொய், தாய், நாய், பாய், வாய், சேய், பேய், வேய். நோய் இவைகளைச் சொல்லியும், எழுதியும் பார்த்தால் "காய்" போலவே வரும்.

1. சுவர்	1. கல்	1. பகல்
2. சுவரை	2. கல்லை	2. பகலை
3. சுவரால்	3. கல்லால்	3. பகலால்
4. சுவருக்கு	4. கல்லுக்கு	4 பகலுக்கு
5. சுவரிலிருந்து	5. கல்லிலிருந்து	5. பகலிலிருந்து
6. சுவரினுடைய	6. கல்லினுடைய	6. பகலினுடைய
7. சுவரில்	7. கல்லில்	7. பகலில்
8. சுவரே	8. கல்லே	8. பகலே

குறிப்பு:- அலர், பலர், மலர், சிலர், கார், தார், ஈர், ஊர், ஏர், தேர், பேர், வேர், போர், மோர் ஆகியவைகளையும், மற்றும் ரகர ஈற்றுச் சொற்களையும் சொல்லியும், எழுதியும் பார்க்க. "சுவர்" போல் வரும்.

பல், வில், புல், நெல், சொல் இத்தகைய தனிக்குறில் முன் வரும் லகரவீற்றுச் சொற்களெல்லாம் 'கல்" போலவே வருவதைச் சொல்லியும், எழுதியும் பார்த்து முடிவு செய்து கொள்க.

கடல், மடல், திடல், உடல், குடல், புடல், பரல், உரல், குரல், சனல், மனல், நுனல், அன்னல், அனல், கனல், கானல், ஏனல், கம்மல், கப்பல், ஆல், கால், சால், பால், மால், சூல், நூல், சேல், வேல், கோல், தோல், அவல், சேவல், ஆம்பல், சாம்பல், சோம்பல், கன்னல், இன்னல், பின்னல், மின்னல் ஆகியவைகளெல்லாம் "பகல்" போல் வருவதைச் சொல்லியும், எழுதியும் பார்த்துத் தெரிந்து கொள்க.

1. இதழ்	1. எள்	1. ஆள்
2. இதழை	2. எள்ளை	2. ஆளை
3. இதழால்	3. எள்ளால்	3. ஆளால்
4. இதழுக்கு	4. எள்ளுக்கு	4. ஆளுக்கு
5. இதழிலிருந்து	5. எள்ளிலிருந்து	5. ஆளிலிருந்து
6. இதழினுடைய	6. எள்ளினுடைய	6. ஆளினுடைய
7. இதழில்	7. எள்ளில்	7. ஆளில்
8. இதழே	8. எள்ளே	8. ஆளே

குறிப்பு:- இகழ், புகழ், சிமிழ், குமிழ், ஊழ், கூழ் இவைகளும், இவைகளைப் போன்றவைகளும் 'இதழ்'' போல் வருவதைச் சொல்லியும், எழுதியும் பார்த்துக் கண்டு கொள்க.

கள், புள், முள், கொள் இவைகளெல்லாம் தனிக்குறில் முன்னொற்றுச் சொற்களாதலால் "எள்" போலவே வேற்றுமைப்படும். முன்போல் செய்து பார்க்க.

நாள், வாள், தேள், கோள், தோள், மகள், புத்தேள், துகள், மக்கள், மஞ்சள் இவைகள் "ஆள்" போலவே வரும்.

1. இதழ்கள் 2. இதழ்களை 3. இதழ்களால் 4. இதழ்களுக்கு 5. இதழ்களி-லிருந்து 6. இதழ்களி-னுடைய 7. இதழ்களில் 8. இதழ்களே	**குறிப்பு:-** இதுவரை எடுத்துக் காட்டிய பெயர்ச் சொற்களெல்லாம், ஒருமைப் பெயர்ச்சொற்கள். பன்மை யாக்கும் போது "கள்" என்னும் விகுதி சேரும். "இதழ்கள்" என்னும் பெயர்ச் சொல் போலவே, எல்லாப் பன்மைப் பெயர்ச் சொற்களும் வேற்றுமைப்படும். உதாரணமாகக் காட்டப்பட்டவைகளையும், பயிற்சிக்-காகக் கொடுக்கப்பட்டவைகளையும் பன்மையாக்கி வேற்றுமைப் படுத்திப் பார்க்க.

TAMIL NADU ARCHIVES LIBRARY
111947

இரண்டாம் பாடம்

வினைச்சொல் - விகற்பங்கள்

கவனிப்பு

வினைச் சொல் விகற்பங்கள் கற்கு முன் வினைச்சொல் இன்னதென்று தெரிந்துகொள்ள வேண்டும். “வினை”, “வேலை”, “தொழில்”, “செயல்” என்பன ஒரே பொருள் தருவன. ஒரு பொருளின் பெயரைக் காட்டுவது பெயர்ச் சொல்; அப்பொருளின் செயலைக் காட்டுவது வினைச்சொல். பெயர்ச் சொல்லுக்கு அடையாளம், வேற்றுமை ஏற்பது. வினைச் சொல்லுக்கு அறிகுறி பின்வரும் ஆறு அம்சங்களைக் காட்டுவது:—

(1) செய்பவன் இன்னாரென்று காட்டுவது; (2) அச் செயலைச் செய்ய அவன் கையாண்ட கருவி இன்னதென்று வெளிப்படுத்துவது; (3) அவ்வேலையைச் செய்த இடம் (படர்க்கை, முன்னிலை, தன்மை ஆகியவைகளில்) இன்னதென்று குறிப்புத் தருவது; (4) அச் செய்கை இன்னதென்று தெரிப்பது; (5) செய்த காலம் இன்னதென்று விளக்குவது; (6) செய்யப்பட்ட பொருள் இன்னதென்று சுட்டுவது — ஆகிய இவ்வாறு அம்சங்களையும் துலங்க வைக்கும் ஒன்று வினைச் சொல்லாகும். *

இவ்வாறு அம்சங்களில் - செயப்படு பொருள் குன்றிய வினையில் - கருவியும், செயப்படுபொருளும்போக மற்ற நாலும் விளங்கும். செயப்படுபொருள் குன்றா வினையில் அவ்வாறு அம்சங்களும் குறைவறத் துலங்கும். ஒரு சொல்லைச் சோதித்துப் பார்த்து இது பெயரா, வினையா என்று முடிவு செய்துகொள்ளத் தெரிய வேண்டும்.

---

*“செய்பவன் கருவி நிலஞ்செயல் காலம்
செய்பொரு ளாறுந் தருவது வினையே”. (ந. சூ. 320)

"வெட்டினான்" என்னும் சொல்லில் மேலே காட்டிய ஆறு அம்சங்களும் அமைந்திருப்பதை இங்கு காட்டுகிறேன்; காண்க:—

யார் வெட்டினான் ?	ஒருவன்	— செய்பவன்
எதால் ,, ?	வாளால்	— கருவி
எங்கு ,, ?	படுக்கையில்	— நிலம்
செய்ததென்ன ?	வெட்டுதல்	— செயல்
எப்போது வெட்டினான்?	கடந்த காலத்தில்	— காலம்
வெட்டப்பட்டது எது ?	மரம்	—செய்பொருள்

இவ்வாறு கேள்விகள் கேட்டு, அச்சொல் தருகிற விடையைக் கொண்டு இது இன்ன சொல் என்று முடிவு செய்துகொள்க. மேலும் வினைச்சொல் வேற்றுமை ஏற்காது.

"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலை காலமொடு தோன்றும்"
(தொல். சொல். வினையியல் சூ. 1.)

என்னும் சூத்திரத்தைக் கவனிக்க.

பிறகு, வினைச் சொல்லில் இன்னின்ன வகைகள் உண்டென்றும் தெரிந்துகொள்ள வேண்டும். வினைச் சொல்லில் (1) ஏவல், (2) வியங்கோள் ஏவல், (3) வினைமுற்று, (4) வினையெச்சம், (5) பெயரெச்சம், (6) வினையாலணையும் பெயர், (7) தொழிற் பெயர், (8) வினையடிப் பெயர் முதலிய பல வகைகள் இருக்கின்றன. இருந்தும் வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் ஆகிய மூன்றைப்பற்றி மட்டும் நன்னூலார் விதந்து கூறியிருக்கின்றார். † முக்கியம் கருதி அவற்றை மட்டும் விளக்கினார் போலும்.

அவைதாம்,

†"முற்றும் பெயர்வினை யெச்சமு மாகி
ஒன்றற் குரியவும் பொதுவு மாகும்". (ந. சூ. 322)

இப்புத்தகம் இலக்கண முறையில் எழுதப்படாமல்; இலக்கணத்துக்குத் தோற்றுவாயாக மட்டும் உதவும்படி எழுதப்படுகிறபடியால் வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் ஆகிய மூன்றைப்பற்றி மட்டும் சுருக்கமாய்க் கூறி விட்டு வினைச் சொல்லின் விகற்பங்களுக்கு உதாரணங்களை வரைவதில் கருத்தைச் செலுத்துகிறேன்.

வினைமுற்று:- செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறு பொருள்களையும் தோற்றி பின்னால் பெயர்ச் சொல்லைத் தவிர வேறொன்றையும் ஏற்க முடியாது நிற்பது வினைமுற்று என்பர்.* உதாரணம் — ஓடினான் (சிறுவன்); சாப்பிட்டான் (சாத்தன்); எழுதினான் (ரங்கநாதன்).

பெயரெச்சம்:- கடந்த காலம், நிகழ் காலம், வருங் காலம் என்ற மூன்று காலங்களின் முறையில் காலமும், செய்த செயலும் தோன்றி, பால், செய்பவன், கருவி முதலிய பொருள்கள் குறைந்து நிற்பது † பெயரெச்சமாகும். உதாரணம் - நடந்த, நடக்கிற, நடக்கும் — (மனிதன்).

வினையெச்சம்:- செய்த செயலும், காலமும் மட்டும் தோன்றி, பால், முடிக்கும் வினை இவ்விரண்டும் தோன்றாமல் இருப்பது வினையெச்சமாகும். ‡ உதாரணம் - நடந்து, ஓடி, சாப்பிட்டு, உறங்கி - (போனான், எழுந்தான்).

---

*"பொதுவியல் பாலையுந் தோற்றிப் பொருட்பெயர்
முதலறு பெயரல தேற்பில முற்றே". (ந. சூ. 323)

†"செய்த செய்கின்ற செய்புமென் பாட்டிற்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி யறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே". (ந. சூ. 340)

‡"தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே". (ந. சூ. 342)

இத்துடன் விளக்கத்தை நிறுத்திக்கொண்டு, ஈற்றெழுத்தைக் கடைப்பிடித்து உதாரணங்கள் கொடுக்கப்படும். கவனித்து அப்பியாசம் செய்து தெளிக.

ஏவல் 1

நட

வியங்கோள் ஏவல் 1

நடக்க

★

வினைமுற்று 27

நடந்தான்
நடக்கிறான்
நடப்பான்
நடந்தாள்
நடக்கிறாள்
நடப்பாள்
நடந்தார்கள்
நடக்கிறார்கள்
நடப்பார்கள்
நடந்தது
நடக்கிறது
நடக்கும்
நடந்தன
நடக்கின்றன
நடக்கும்
நடந்தாய்
நடக்கிறாய்
நடப்பாய்
நடந்தீர்கள்
நடக்கிறீர்கள்
நடப்பீர்கள்
நடந்தேன்
நடக்கிறேன்
நடப்பேன்
நடந்தோம்
நடக்கிறோம்
நடப்போம்

வினையெச்சம் 4

நடந்து
நடக்க
நடந்தால்
நடவாமல்

பெயரெச்சம் 4

நடந்த
நடக்கிற
நடக்கும்
நடவாத

வினையாலணையும் பெயர் 15

நடந்தவன்
நடக்கிறவன்
நடப்பவன்
நடந்தவள்
நடக்கிறவள்
நடப்பவள்
நடந்தவர்கள்
நடக்கிறவர்கள்
நடப்பவர்கள்
நடந்தது
நடக்கிறது
நடப்பது
நடந்தவை
நடக்கிறவை
நடப்பவை

தொழில்பெயர் 1

நடத்தல்

வினையடிப் பெயர் 1

நடை

குறிப்பு:- கட, கிட, கற, பற, மற, இற இச்சொற்களெல்லாம் "நட" போலவே வரும். சொல்லியும், எழுதியும் பார்க்க.

ஏவல் 1
வா
வியங்கோள்ஏவல் 1
வருக
வினைமுற்று 27
வந்தான்
வருகிறான்
வருவான்
வந்தாள்
வருகிறாள்
வருவாள்
வந்தார்கள்
வருகிறார்கள்
வருவார்கள்
வந்தது
வருகிறது
வரும்
வந்தன
வருகின்றன
வரும்
வந்தாய்
வருகிறாய்
வருவாய்
வந்தீர்கள்
வருகிறீர்கள்
வருவீர்கள்
வந்தேன்
வருகிறேன்
வருவேன்
வந்தோம்
வருகிறோம்
வருவோம்
வினையெச்சம் 4
வந்து
வர
வந்தால்
வராமல்
பெயரெச்சம் 4
வந்த
வருகிற
வரும்
வராத
வினையாலணையும்
பெயர் 15
வந்தவன்
வருகிறவன்
வருபவன்
வந்தவள்
வருகிறவள்
வருபவள்
வந்தவர்கள்
வருகிறவர்கள்
வருபவர்கள்
வந்தது
வருகிறது
வருவது
வந்தவை
வருகிறவை
வருபவை
தொழில் பெயர் 1
வருதல்
வினையடிப் பெயர் 1
(இல்லை)

குறிப்பு:- தா - இதேபோல் வரும். கா - காத்தான், காக்கிறான், காப்பான் என்று தொடங்கி விகற்பிக்கும். எழுதியும், சொல்லியும் பார்க்க.

சா - செத்தான், சாகிறான், சாவான் என்று தொடங்கி விகற்பிக்கும். கடந்த கால வினைமுற்று தவிர மற்ற வினைமுற்றுகளெல்லாம் "சா" வையே பகுதியாகக் கொண்டிருப்பதானது வெளிப்படையாய்த் தோன்றுவதைக் கருத்தில் இருத்திக்கொள்க.

தன் வினைகளில் இங்கு வந்திருக்கிறவைகளையெல்லாம், பிறவினைகளிலும், செயப்பாட்டு வினைகளிலும் விகற்பித்துப் பார்க்க.

ஏவல் 1	மடிக்கிறாய்	வினையாலணையும்
மடி	மடிப்பாய்	பெயர் 15
வியங்கோள் ஏவல் 1	மடித்தீர்கள்	மடித்தவன்
மடிக்க	மடிக்கிறீர்கள்	மடிக்கிறவன்
வினைமுற்று 27	மடிப்பீர்கள்	மடிப்பவன்
மடித்தான்	மடித்தேன்	மடித்தவள்
மடிக்கிறான்	மடிக்கிறேன்	மடிக்கிறவள்
மடிப்பான்	மடிப்பேன்	மடிப்பவள்
மடித்தாள்	மடித்தோம்	மடித்தவர்கள்
மடிக்கிறாள்	மடிக்கிறோம்	மடிக்கிறவர்கள்
மடிப்பாள்	மடிப்போம்	மடிப்பவர்கள்
மடித்தார்கள்	வினையெச்சம் 4	மடித்தது
மடிக்கிறார்கள்	மடித்து	மடிக்கிறது
மடிப்பார்கள்	மடிக்க	மடிப்பது
மடித்தது	மடித்தால்	மடித்தவை
மடிக்கிறது	மடியாமல்	மடிக்கிறவை
மடிக்கும்	பெயரெச்சம் 4	மடிப்பவை
மடித்தன	மடித்த	தொழில் பெயர் 1
மடிக்கின்றன	மடிக்கிற	மடித்தல்
மடிக்கும்	மடிக்கும்	வினையடிப் பெயர் 1
மடித்தாய்	மடியாத	மடிப்பு

குறிப்பு:- அடி, கடி, நடி, படி, இடி, பிடி, குடி, முடி, ஒடி, கணி, பணி, மிதி, விதி, குதி, உதி, சாதி, வாதி, சேதி, சோதி, அரி, பறி, மறி, விரி, சிரி, உரி, எரி, பொரி, கொரி இவை யாவும் "மடி" போலவே விகற்பப்படும்.

சாடி, பாடி, வாடி, ஊடி, கூடி, சூடி, மூடி, ஓடி இவைகளெல்லாம் சாடினான், சாடுகிறான், சாடுவான் என்பது போலவே வரும். சொல்லியும், எழுதியும் பார்க்க.

ஊதி, மோதி, ஓதி, கோதி இவைகள் ஊதினான், ஊதுகிறான், ஊதுவான் என்பது போல வரும். அறி, திரி, எறி, சொறி, குனி, முனி இவைகள் அறிந்தான், அறிகிறான், அறிவான் என்பது போலவே விகற்பப்படும்.

ஏவல் 1
விடு

வியங்கோள்ஏவல் 1
விடுக

வினைமுற்று 27
விட்டான்
விடுகிறான்
விடுவான்
விட்டாள்
விடுகிறாள்
விடுவாள்
விட்டார்கள்
விடுகிறார்கள்
விடுவார்கள்
விட்டது
விடுகிறது
விடும்
விட்டன
விடுகின்றன
விடும்
விட்டாய்
விடுகிறாய்
விடுவாய்
விட்டீர்கள்
விடுகிறீர்கள்
விடுவீர்கள்
விட்டேன்
விடுகிறேன்
விடுவேன்
விட்டோம்
விடுகிறோம்
விடுவோம்

வினையெச்சம் 4
விட்டு
விட
விட்டால்
விடாமல்

பெயரெச்சம் 4
விட்ட
விடுகிற
விடும்
விடாத

வினையாலணையும் பெயர் 15
விட்டவன்
விடுகிறவன்
விடுபவன்
விட்டவள்
விடுகிறவள்
விடுபவள்
விட்டவர்கள்
விடுகிறவர்கள்
விடுபவர்கள்
விட்டது
விடுகிறது
விடுவது
விட்டவை
விடுகிறவை
விடுபவை

தொழில் பெயர் 1
விடுதல்

வினையடிப் பெயர்
(இல்லை)

குறிப்பு:- இடு, சுடு, கெடு, தொடு இவைகள் "விடு" போலவே வரும். அடு, படு, எடு, கெடு, கொடு, தொடு இவைகள் அடுத்தான், அடுக்கிறான், அடுப்பான் என்பது போன்று விகற்பிக்கும். ஊது, ஓது, கோது, மோது இவைகள் ஊதினான், ஊதுகிறான், ஊதுவான் என்று தொடங்கி விகற்பமடையும். அழு, உழு, தொழு இவைகள் அழுதான், அழுகிறான், அழுவான் எனபதுபோல் தொடங்கிச் செல்லும்.

எழு - எழுந்தான், எழுகிறான், எழுவான் என்று விகற்பிக்கும். எழுது - எழுதினான், எழுதுகிறான், எழுதுவான் என்று தொடங்கி விகற்பப்படும்.

ஏவல் 1
வை

வியங்கோள்ஏவல் 1
வைக்க

வினைமுற்று 27
வைத்தான்
வைக்கிறான்
வைப்பான்
வைத்தாள்
வைக்கிறாள்
வைப்பாள்
வைத்தார்கள்
வைக்கிறார்கள்
வைப்பார்கள்
வைத்தது
வைக்கிறது
வைக்கும்
வைத்தன
வைக்கின்றன
வைக்கும்
வைத்தாய்
வைக்கிறாய்
வைப்பாய்
வைத்தீர்கள்
வைக்கிறீர்கள்
வைப்பீர்கள்
வைத்தேன்
வைக்கிறேன்
வைப்பேன்
வைத்தோம்
வைக்கிறோம்
வைப்போம்

வினையெச்சம் 4
வைத்து
வைக்க
வைத்தால்
வையாமல்

பெயரெச்சம் 4
வைத்த
வைக்கிற
வைக்கும்
வையாத

வினையாலணையும் பெயர் 15
வைத்தவன்
வைக்கிறவன்
வைப்பவன்
வைத்தவள்
வைக்கிறவள்
வைப்பவள்
வைத்தவர்கள்
வைக்கிறவர்கள்
வைப்பவர்கள்
வைத்தது
வைக்கிறது
வைப்பது
வைத்தவை
வைக்கிறவை
வைப்பவை

தொழில் பெயர் 1
வைத்தல்

வினையடிப் பெயர் 1
வைப்பு

குறிப்பு:- தை-மேலே காட்டியதுபோல் வரும். நை-நைந்தான், நைகிறான், நைவான் என்பதுபோல் வரும்.

நோ-நொந்தான், நோகிறான், நோவான் என்று வரும். வினைமுற்று 27 வரும்படி சொல்லியும், எழுதியும் பார்க்க.

போ-போனான், போகிறான், போவான் என்று வரும். வினைமுற்று 27 வரும்படி சொல்லியும், எழுதியும் பார்க்க.

வௌ - வௌவினான், வௌவுகிறான், வௌவுவான் என்று வரும். வினைமுற்று 27 வரும்படி சொல்லியும், எழுதியும் பார்க்க.

உரிஞ்-உரிஞினான், உரிஞுகிறான், உரிஞுவான் என்று வரும். வினைமுற்று 27 வரும்படி சொல்லிப்பார்க்க:

ஏவல் 1
உண்

வியங்கோள்ஏவல் 1
உண்க

வினைமுற்று 27
உண்டான்
உண்கிறான்
உண்பான்
உண்டாள்
உண்கிறாள்
உண்பாள்
உண்டார்கள்
உண்கிறார்கள்
உண்பார்கள்
உண்டது
உண்கிறது
உண்ணும்
உண்டன
உண்கின்றன
உண்ணும்
உண்டாய்
உண்கிறாய்
உண்பாய்
உண்டீர்கள்
உண்கிறீர்கள்
உண்பீர்கள்
உண்டேன்
உண்கிறேன்
உண்பேன்
உண்டோம்
உண்கிறோம்
உண்போம்

வினையெச்சம் 4
உண்டு
உண்ண
உண்டால்
உண்ணாமல்

பெயரெச்சம் 4
உண்ட
உண்கிற
உண்ணும்
உண்ணாத

வினையாலணையும் பெயர் 15
உண்டவன்
உண்கிறவன்
உண்பவன்
உண்டவள்
உண்கிறவள்
உண்பவள்
உண்டவர்கள்
உண்கிறவர்கள்
உண்பவர்கள்
உண்டது
உண்கிறது
உண்பது
உண்டவை
உண்கிறவை
உண்பவை

தொழில்பெயர் 1
உண்ணல்

வினையடிப்பெயர் 1
ஊண்

குறிப்பு:- காண் - கண்டான், காண்கிறான், காண்பான் என்று தொடங்கி வரும். சொல்லியும், எழுதியும் பார்க்க.

நாண் - என்னும் பெயரடி வினை - நாணினான், நாணுவான் என விகற்பிக்கும். சொல்லியும், எழுதியும் பார்க்க.

முரண் - என்னும் பெயரடி வினையும் மேலே கண்டது போலவே வரும். எல்லா வகைகளிலும் செய்து பார்க்க.

பேண் - என்னும் வினைச் சொல்லும் - பேணினான், பேணுகிறான், பேணுவான் என்றே விகற்பிக்கும். எல்லா வகைகளிலும் செய்து பார்க்க.

எண் - என்னும் வினையும் - எண்ணினான், எண்ணுகிறான், எண்ணுவான் என்று தொடங்கி விகற்பிக்கும்.

ஏவல் 1	தின்கிறாய்	வினையாலணையும் பெயர் 15
தின்	தின்பாய்	தின்றவன்
வியங்கோள்ஏவல் 1	தின்றீர்கள்	தின்கிறவன்
தின்னுக	தின்கிறீர்கள்	தின்பவன்
வினைமுற்று 27	தின்பீர்கள்	தின்றவன்
தின்றான்	தின்றேன்	தின்கிறவன்
தின்கிறான்	தின்கிறேன்	தின்பவன்
தின்பான்	தின்பேன்	தின்றவர்கள்
தின்றாள்	தின்றோம்	தின்கிறவர்கள்
தின்கிறாள்	தின்கிறோம்	தின்பவர்கள்
தின்பாள்	தின்போம்	தின்றது
தின்றார்கள்	வினையெச்சம் 4	தின்கிறது
தின்கிறார்கள்	தின்று	தின்பது
தின்பார்கள்	தின்ன	தின்றவை
தின்றது	தின்றால்	தின்கிறவை
தின்கிறது	தின்னாமல்	தின்பவை
தின்னும்	பெயரெச்சம் 4	தொழில்பெயர் 1
தின்றன	தின்ற	தின்னல்
தின்கின்றன	தின்கிற	வினையடிப் பெயர் 1
தின்னும்	தின்னும்	தின்
தின்றாய்	தின்னாத	

குறிப்பு:- மின் - மின்னினான், மின்னுகிறான், மின்னுவான் என்று தொடங்கி விகற்பிக்கும். மின் என்னும் வினையடியாக "மீன்" என்னும் பெயர்ச் சொல் தோன்றும். கடலில் மின்னுவது மீன். ஆகாயத்தில் மின்னுவதும் மீன் எனப்படும்.

என் - என்னும் இடைச் சொல்லடியாக ஒரு வினைச் சொல் பிறந்து என்றான், என்கிறான், என்பான் என்று தொடங்கி விகற்பிக்கும். என்று சொன்னான் - என்னும் பொருளையடக்கியது என்றான் என்பது.

ஏவல் 1	தேய்க்கிறாய்	வினையாலணையும்
தேய்	தேய்ப்பாய்	பெயர் 15
வியங்கோள் ஏவல் 1	தேய்த்தீர்கள்	தேய்த்தவன்
தேய்க்க	தேய்க்கிறீர்கள்	தேய்க்கிறவன்
வினைமுற்று 27	தேய்ப்பீர்கள்	தேய்ப்பவன்
தேய்த்தான்	தேய்த்தேன்	தேய்த்தவள்
தேய்க்கிறான்	தேய்க்கிறேன்	தேய்க்கிறவள்
தேய்ப்பான்	தேய்ப்பேன்	தேய்ப்பவள்
தேய்த்தாள்	தேய்த்தோம்	தேய்த்தவர்கள்
தேய்க்கிறாள்	தேய்க்கிறோம்	தேய்க்கிறவர்கள்
தேய்ப்பாள்	தேய்ப்போம்	தேய்ப்பவர்கள்
தேய்த்தார்கள்	வினையெச்சம் 4	தேய்த்தது
தேய்க்கிறார்கள்	தேய்த்து	தேய்க்கிறது
தேய்ப்பார்கள்	தேய்க்க	தேய்ப்பது
தேய்த்தது	தேய்த்தால்	தேய்த்தவை
தேய்க்கிறது	தேயாமல்	தேய்க்கிறவை
தேய்க்கும்	பெயரெச்சம் 4	தேய்ப்பவை
தேய்த்தன	தேய்த்த	தொழில் பெயர் 1
தேய்க்கின்றன	தேய்க்கிற	தேய்த்தல்
தேய்க்கும்	தேய்க்கும்	வினையடிப் பெயர் 1
தேய்த்தாய்	தேயாத	தேய்வு

குறிப்பு:- இது முழுவதும் பிறவினையில் வந்திருக்கிறது. தன் வினையில் தேய்ந்தான், தேய்கிறான், தேய்வான் என்பது போல விகற்பம் அடையும். பிறவினை விகுதியில்லாமலே பிறவினையில் வருபவை சிலவற்றுள் இது ஒன்று.

காய், சாய், மாய், தோய் இவைகள் தன் வினையிலும், பிற வினையிலும் வரும். பிறவினைக்கு மேலே உதாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தன் வினைக்கு விவரம் குறிப்பில் சொல்லியிருக்கிறது. எழுதிப் பார்க்க.

ஓய், பாய், வேய் - என்பன தன் வினையில் மட்டும் வரும். எழுதிப் பார்க்க. பிற வினையில் வரவேண்டுமானால் - பிறவினை விகுதிகளாகிய வி—பி சேரவேண்டும்.

ஏவல் 1

பார்

வியங்கோள்ஏவல் 1

பார்க்க

வினைமுற்று 27

பார்த்தான்
பார்க்கிறான்
பார்ப்பான்
பார்த்தாள்
பார்க்கிறாள்
பார்ப்பாள்
பார்த்தார்கள்
பார்க்கிறார்கள்
பார்ப்பார்கள்.
பார்த்தது
பார்க்கிறது
பார்க்கும்
பார்த்தன
பார்க்கின்றன
பார்க்கும்
பார்த்தாய்
பார்க்கிறாய்
பார்ப்பாய்
பார்த்தீர்கள்
பார்க்கிறீர்கள்
பார்ப்பீர்கள்
பார்த்தேன்
பார்க்கிறேன்
பார்ப்பேன்
பார்த்தோம்
பார்க்கிறோம்
பார்ப்போம்

வினையெச்சம் 4

பார்த்து
பார்க்க
பார்த்தால்
பாராமல்

பெயரெச்சம் 4

பார்த்த
பார்க்கிற
பார்க்கும்
பாராத

வினையாலணையும் பெயர் 15

பார்த்தவன்
பார்க்கிறவன்
பார்ப்பவன்
பார்த்தவள்
பார்க்கிறவள்
பார்ப்பவள்
பார்த்தவர்கள்
பார்க்கிறவர்கள்
பார்ப்பவர்கள்
பார்த்தது
பார்க்கிறது
பார்ப்பது
பார்த்தவை
பார்க்கிறவை
பார்ப்பவை

தொழில் பெயர் 1

பார்த்தல்

வினையடிப் பெயர்

பார்வை

குறிப்பு:- வார், தீர், தூர், பேர், போர் ஆகிய வினைகள் "பார்" போலவே விகாரப்படும். சொல்லியும், எழுதியும் பார்க்க.

நிமிர் - நிமிர்ந்தான், நிமிர்கிறான், நிமிர்வான் என்று, தொடங்கி விகற்பப்படும். சோர் என்பதும், தேர் என்பதும் அதுபோலவே வரும். மலர், புலர், உலர், உணர், புணர், படர் என்பவைகளும் அவ்வாறே வரும்.

கோணு - கொணர்ந்தான், கொணர்கிறான், கொணர்வான் எனத் தொடங்கி விகற்பிக்கும்.

ஏவல் 1
செல்

வியங்கோள்ஏவல் 1
செல்க

வினைமுற்று 27
சென்றான்
செல்கிறான்
செல்வான்
சென்றாள்
செல்கிறாள்
செல்வாள்
சென்றார்கள்
செல்கிறார்கள்
செல்வார்கள்
சென்றது
செல்கிறது
செல்லும்
சென்றன
செல்கின்றன
செல்லும்
சென்றாய்
செல்கிறாய்
செல்வாய்
சென்றீர்கள்
செல்கிறீர்கள்
செல்வீர்கள்
சென்றேன்
செல்கிறேன்
செல்வேன்
சென்றோம்
செல்கிறோம்
செல்வோம்

வினையெச்சம் 4
சென்று
செல்ல
சென்றால்
செல்லாமல்

பெயரெச்சம் 4
சென்ற
செல்கிற
செல்லும்
செல்லாத

வினையாலணையும் பெயர் 15
சென்றவன்
செல்கிறவன்
செல்பவன்
சென்றவள்
செல்கிறவள்
செல்பவள்
சென்றவர்கள்
செல்கிறவர்கள்
செல்பவர்கள்
சென்றது
செல்கிறது
செல்வது
சென்றவை
செல்கிறவை
செல்பவை

தொழில் பெயர் 1
செல்தல்

வினையடிப் பெயர் 1
இல்லை

குறிப்பு:- நில், வெல், கோல் - இவைகள் சொல் போலவே விகற்பப்படும். சொல்லியும், எழுதியும் பார்க்க.

கல், வில் - இவைகள் கற்றான், கற்கிறான், கற்பான் என்றும்; விற்றான், விற்கிறான், விற்பான் என்றும் விகற்பிக்கும். சொல்லியும், எழுதியும் பார்க்க.

நோல் - நோற்றான், நோற்கிறான், நோற்பான் என்று தொடங்கி விகற்பிக்கும்.

சோல் - சொன்னான், சொல்கிறான், சொல்வான் என்று தொடங்கி விகற்பிக்கும்.

புகல் - புகன்றான், புகல்கிறான், புகல்வான் என்று தொடங்கி விகற்பிக்கும்.

ஏவல் 1	வாழ்கிறாய்	வினையாலணையும்
வாழ்	வாழ்வாய்	பெயர் 15
வியங்கோள் ஏவல் 1	வாழ்ந்தீர்கள்	வாழ்ந்தவன்
வாழ்க	வாழ்கிறீர்கள்	வாழ்கிறவன்
வினைமுற்று 27	வாழ்வீர்கள்	வாழ்பவன்
வாழ்ந்தான்	வாழ்ந்தேன்	வாழ்ந்தவள்
வாழ்கிறான்	வாழ்கிறேன்	வாழ்கிறவள்
வாழ்வான்	வாழ்வேன்	வாழ்பவள்
வாழ்ந்தாள்	வாழ்ந்தோம்	வாழ்ந்தவர்கள்
வாழ்கிறாள்	வாழ்கிறோம்	வாழ்கிறவர்கள்
வாழ்வாள்	வாழ்வோம்	வாழ்பவர்கள்
வாழ்ந்தார்கள்	வினையெச்சம் 4	வாழ்ந்தது
வாழ்கிறார்கள்	வாழ்ந்து	வாழ்கிறது
வாழ்வார்கள்	வாழ	வாழ்வது
வாழ்ந்தது	வாழ்ந்தால்	வாழ்ந்தவை
வாழ்கிறது	வாழாமல்	வாழ்கிறவை
வாழும்	பெயரெச்சம் 4	வாழ்பவை
வாழ்ந்தன	வாழ்ந்த	தொழில் பெயர் 1
வாழ்கின்றன	வாழ்கிற	வாழ்தல்
வாழும்	வாழும்	வினையடிப் பெயர் 1
வாழ்ந்தாய்	வாழாத	வாழ்க்கை

குறிப்பு:- ஆழ், தாழ், வீழ், சூழ் இவைகள் "வாழ்" போலவே வரும். அகழ், இகழ், திகழ், புகழ் இவைகளும் அதுபோலவே வரும். சொல்லியும், எழுதியும் பார்க்க.

ஏவல் 1	கேட்கிறாய்	வினையாலணையும்
கேள்	கேட்பாய்	பெயர் 15
வியங்கோள்ஏவல் 1	கேட்டீர்கள்	கேட்டவன்
கேட்க	கேட்கிறீர்கள்	கேட்கிறவன்
வினைமுற்று 27	கேட்பீர்கள்	கேட்பவன்
கேட்டான்	கேட்டேன்	கேட்டவள்
கேட்கிறான்	கேட்கிறேன்	கேட்கிறவள்
கேட்பான்	கேட்பேன்	கேட்பவள்
கேட்டாள்	கேட்டோம்	கேட்டவர்கள்
கேட்கிறாள்	கேட்கிறோம்	கேட்கிறவர்கள்
கேட்பாள்	கேட்போம்	கேட்பவர்கள்
கேட்டார்கள்	வினையெச்சம் 4	கேட்டது
கேட்கிறார்கள்	கேட்டு	கேட்கிறது
கேட்பார்கள்	கேட்க	கேட்பது
கேட்டது	கேட்டால்	கேட்டவை
கேட்கிறது	கேளாமல்	கேட்கிறவை
கேட்கும்	பெயரெச்சம் 4	கேட்பவை
கேட்டன	கேட்ட	தொழில் பெயர் 1
கேட்கின்றன	கேட்கிற	கேட்டல்
கேட்கும்	கேட்கும்	வினையடிப் பெயர் 1
கேட்டாய்	கேளாத	கேள்வி

குறிப்பு:- ஆள், மாள், மீள் - இவைகள் ஆண்டான், ஆள்கிறான், ஆள்வான்; மாண்டான், மாள்கிறான், மாள்வான்; மீண்டான், மீள்கிறான், மீள்வான் என்று தொடங்கிப் பல வகைகளிலும் வரும். சொல்லியும், எழுதியும் பார்க்க.

வறள், திரள், புரள் - இவைகள் வறண்டான், வறள்கிறான், வறள்வான்; திரண்டான், திரள்கிறான், திரள்வான்; புரண்டான், புரள்கிறான், புரள்வான் என்று தொடங்கி விகற்பிக்கும்.

வினைச்சொல் விளக்கம்.

ஏவல், வியங்கோள் ஏவல், வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயர், தொழிற் பெயர், வினையடிப் பெயர் ஆகிய எட்டு வகைகளிலும் ஒரு வினைச் சொல் 54 விதங்களில் வருவது காட்டப்பட்டது. இவைகள் தன் வினையின் மாறுதல்கள் மட்டும் பிறவினையில் †வி-பி, இவ்விரண்டு வகைகளிலும் 54+54=108 வரும். செயப்பாட்டு வினையில் அவ்விரண்டு வகைகளும் விகற்பப்படுமிடத்து 108 வரும். ஆக மொத்தம் 270 ஆகும். இவ்வளவும் உடன்பாட்டு வினை விகற்பங்களே. எதிர் மறையிலும் சில விகற்பங்கள் வரும். எனவே, ஓரே வினைச்சொல் ஏறக்குறைய 300 விதங்களில் உருமாறி வரக் கூடியதாயிருப்பதால், ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்பிக்குமிடத்து இவ்வெல்லா வகைகளிலும் பழக்குவது நல்லது.

வினையடியாகப் பிறக்கும் பெயர்ச் சொற்களைப் பற்றியும் விளக்குதல் நலம். "அஞ்சு" என்னும் வினைச் சொல்லடியாக "அச்சம்" என்னும் பெயர்ச்சொல் பிறப்பது போல, வினையடியாகப் பிறக்கும் பிற பெயர்களை ஆங்காங்கு விளக்குதல் நலம்.

"நகை" என்னும் பெயர்ச் சொல்லடியாக "நகைத்-தான்" என்னும் வினைச் சொல் பிறப்பதுபோல, பெயர்டியாகப் பிறக்கும் மற்ற வினைச் சொற்களையும் வரும் இடங்களில் விளக்கலாம்.

ஒருவர் 100 சொற்களையேனும், அதனதன் பிறப்பு, உருமாற்றம் முதலிய பல்வேறு வடிவங்களுடன் தெரிந்து கொண்டால் தமிழறிவு விருத்தியாகுமென்று, காலஞ் சென்ற வேலூர், க. ப. சந்தோஷம் அவர்கள் சொன்னது இங்கு நினைக்கற்பாலது.

---

†"செய்யேன் வினைவழி விப்பி தனிவரிற்
செய்வியேன் னேவ் லிணையினீ ரேவல்". (ந.சூ. 138)

ஏழாம் பாகம்

இலக்கண நினைவுறுத்தற் பாடங்கள்

கவனிப்பு:

தமிழ்மொழியின் சிறப்பு அதன் இயற்கையமைப்பு, சொல்வளம், பொருள்வளம், நூல்கள் ஆகிய இவற்றோடு மட்டும் அல்லாமல் அதன் இலக்கண அமைதியோடும் சேர்த்துச் சொல்லப்படுகிறது. அதனால் தமிழ் இலக்கணம் பற்றி ஒரு சிறிது அறிந்துகொள்வது தமிழ் கற்போருக்கு ஒரு ஊக்கத்தையும், உணர்ச்சியையும் கொடுப்பதாகும். அதற்காகவே இவ்வேழாம் பாகம் இணைக்கப்பட்டது.

* பிறமொழி யிலக்கணங்களெல்லாம் எழுத்து, சொல், யாப்பு, அணி என நான்கு பிரிவேயுடையன. ஆனால், தமிழோ அவற்றுடன் "பொருள்" என்னும் சிறந்த பிரிவையு முடையது. பொருளிலக்கணமுடைமையால் தமிழ்மிக்க இலக்கண வரம்புள்ளது என்று முன்னோர் கொண்டமையை

"கண்ணுதற் பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச் சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக் கிடந்ததா எண்ணவும் படுமோ"

என்ற பரஞ்சோதி முனிவர் கூற்றாலுணரலாம்.

பொருளிலக்கணம் தமிழ்மொழி தவிர்த்த பிற எம்மொழியினும் இல்லையென்பது ஒருபுறமிருக்க, எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், யாப்பிலக்கணம் இவற்றில் கூட வடமொழி குறைபாடுடையது என்று அறிகின்றோம். அதனை பண்டிதமணி - மகாமகோபாத்தியாய மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் எழுதிய "உரைநடைக் கோவை" 11-ம் பக்கத்தில் கேட்கின்றோம். வருமாறு காண்க:-

* "ஒப்பியன் மொழி நூல்" 109-ம் பக்கம் பார்க்க.

"சாற்றிய தெய்வப் புலவோர் மொழிக்கும் தமிழ்மொழிக்கும்
வேற்றுமை கூறின் திணைபால் உணர்த்தும் வினைவிகுதி
மாற்றருந் தெய்வ மொழிக்கில்லை பேர்க்கெழு வாயுருபும்
தேற்றிய லிங்கம் ஒருமூன்றும் இல்லை செழுந்தமிழ்க்கே".

பிரயோக விவேக நூலார் கூற்று இது.

வடமொழி, தென்மொழி ஆராய்ச்சியிற் புலமைமிக்க மாதவச் சிவஞான முனிவர் இவ்வேறுபாடுகளை உணர்ந்து பின்வருமாறு கூறுகின்றார்:— "தமிழ் மொழிப் புணர்ச்சிக் குட்படும் செய்கைகளும், குறியீடுகளும், வினைக் குறிப்பு, வினைத் தொகை முதலிய சொல்லிலக்கணங்களும், உயர் திணை, அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், குறிஞ்சி, வெட்சி முதலிய திணைப் பாகுபாடுகளும், அவற்றின் பகுதி களும், வெண்பா முதலிய செய்யுள் இலக்கணமும், இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படாமை-யானும்" என்பனவாம்.

எனவே, தெய்வமொழியென்று உயர்த்திக் கூறப்படும் வடமொழியிலேயே இவ்வாறான இலக்கணக் குறைபாடுகள் இருக்குமானால், பிற எம் மொழி இலக்கணம் தமிழ் இலக்கணத்திற்கு ஈடாக முடியும்?

(1) எழுத்து, (2) சொல், (3) பொருள், (4) யாப்பு, (5) அணி என்பன. தமிழ் இலக்கணப் பிரிவுகள், இவற்றுள் பொருள் அகம், புறம் எனப் பிரிக்கப்பட்டு ஆராயப்படும். மக்கள் வாழ்க்கைக்கு வேண்டும் கூறுகளையெல்லாம் கூறுவது பொருளிலக்கணம். பொருளிலக்கணம் கூறும் நூல்களின் பொருள் நுட்பங்களைத் தெளிவுபட அறிந்து கொள்ள (1) எழுத்திலக்கணம், (2) சொல்லிலக்கணம், (3) யாப்பிலக்கணம், (4) அணியிலக்கணம் இவை தெரிய வேண்டும். இவற்றுள் வசன நடை நூல்கள் கூறும் பொருள்களைத் தெரிந்துகொள்ள, எழுத்திலக்கணமும்,

சொல்லிலக்கணமும் தெரிந்தால் போதும். செய்யுள் நடை நூல்கள் கூறும் பொருள்களைத் தெரிந்துகொள்ள அவற்றுடன் யாப்பிலக்கணமும், அணியிலக்கணமும் அறிந்திருக்க வேண்டும்.

† பொருள் நூல் வீடும் — எழுத்திலக்கணமும், சொல்லிலக்கணமும் முறையே அதற்குச் செல்ல வழியாயிருக்கும் வாயிலும், நடையும் போல்வன என்று உவமித்துக் கூறியுள்ளார் ஒப்பியன் மொழி நூல் ஆக்கியோன் பண்டித புலவ வித்துவ கீழ்கலைத் தேர்ச்சியாளர் ஞா. தேவநேயப் பாவாணர். ஓர் பழைய வெண்பாவும் அதற்குச் சான்று:—

"எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும் – மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்".

வசன நடை நூல்களை மட்டும் நினைவிற் கொண்டு இந்நூல் செய்யப்படுவதாலும், அவ்வகை நூல்கள் கூறும் பொருள்களை அறிவதற்கு எழுத்திலக்கணமும், சொல்லிலக்கணமும் போதுமாதலாலும், அவற்றின் கூறுபாடுகள் மட்டும் இங்கு நினைவுறுத்தப்படும். செய்யுள் நூல் கூறும் பொருள்களை உணர யாப்பிலக்கணம், அணியிலக்கணம் தெரிய வேண்டுமாதலால் அவை பற்றிய நினைவுறுத்தலும், விரிவும், விளக்கமும் செய்யுள் நடை நூல்களை முன்னிறுத்திச் செய்யப்படும் நூலில் இடம் பெறும்.

† ஒப்பியன் மொழி நூல் — 108-ம் பக்கம் பார்க்க.

முதலாம் பாடம்

எழுத்திலக்கணத்தில் கவனிக்க வேண்டியவை.

எழுத்திலக்கணத்தில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய பகுதிகளை ஒரு கட்டளைக் கலித்துறைப் பா மிகச் சுருக்கமாக எடுத்துக் கூறுகிறது. அது பின் வருமாறு:—

"அடையெண் பெயர்முறை தோற்றம் வடிவள வாதியந்தம்
இடைநிலை போலியென் றீரைந் தெழுத்து மிருபதமும்
படுபுணர் மூன்றி னியல்பும் விகாரமுஞ் சாரியையும்
உடனுணர் வாரை யெழுத்தறிவா ரேன்ப ருத்தமரே".

எழுத்தில் 10, பதத்தில் 2, புணர்ச்சியில் 3, விகாரம், சாரியை ஆகிய இவை தெரிந்தவர் எழுத்துத் தெரிந்தவர் ஆவார் என்று அப்பாட்டுக் கூறுகிறது.

எழுத்தில் 10:— (1) எழுத்துக்களின் எண்ணிக்கை, (2) அவற்றின் பெயர்கள், (3) அவை நிற்கும் முறை, (4) அவற்றின் பிறப்பிடம், (5) அவற்றின் ஒலி வடிவம், வரிவடிவம், (6) அவற்றின் ஓசையளவு, (7) அவை மொழிக்கு முதலில் நிற்கும் விதி, (8) இறுதியில் நிற்கும் விதி, (9) இடையில் நிற்கும் விதி, (10) போலியாக நிற்பது இவையே எழுத்து சம்பந்தமாய்த் தெரியவேண்டிய பத்துக் காரியங்கள்.

பதத்தில் 2:– பகுபதம், பகாப்பதம் என்ற இரண்டுமே பதத்தில் தெரிய வேண்டியவை.

புணர்ச்சியில் 3:– உயிரீற்றுப் புணர்ச்சி, மெய்யீற்றுப் புணர்ச்சி, உருபு புணர்ச்சி என்ற மூன்று விதப் புணர்ச்சிகளே புணர்ச்சியில் மூன்று என்பன.

விகாரம்:- மூன்று விதப் புணர்ச்சியிலும் ஏற்படுகின்ற எழுத்து மாறுதல்களே விகாரம் என்னப்படும். அது தோன்றல், திரிதல், கெடுதல் என்று மூன்று விதப்படும்.

சாரியை:- சாரியை என்பது சார்ந்து வருவது. பகுதி, விகுதி, இடைநிலை இவையல்லாமல் வேறு எழுத்துக்கள் சார்ந்து வருவது சாரியை. மரத்தை - என்பதில் மரம் - பதம்; ஐ- இரண்டாம் வேற்றுமை உருபு; அத்து-சாரியை, இவை யாவும் சேர்ந்து-மரத்தை-என்று விகற்பிக்கும். இவ்வாறு பல சாரியைகள் உண்டு.

இவ்வாறான எல்லாக் கூறுபாடுகளையும் நினைவில் வைத்துக்கொள்வதே எழுத்து தெரிந்தது என்பதற்கு அடையாளமாகும்.

இனி குறில், நெடில், வன்கணம், மென்கணம், இடைக்கணம், சுட்டெழுத்து, வினவெழுத்து, குற்றியல் உகரம், குற்றியல் இகரம், முற்றியல் உகரம் இவையும் தெரிவது நல்லது.

அத்தோடு, உயிரும் மெய்யும் சேர்ந்து ஒன்றாய் இருப்பதையும், ஒலி அவற்றுள் உயிருக்கு மட்டும் விளங்குவதையும், புணர்ச்சியில் உயிர், மெய்யை விட்டுப் போவதையும், மற்றொரு உயிர் அம் மெய்யில் வந்து ஒன்றுவதையும் கவனித்துக்கொள்வது பயனுள்ளதாகும்.

மேலும் ஒரு மெய்யுடன், பல உயிர்கள் வந்து சேரும் போது வரிவடிவில் ஏற்படும் புதுத் தோற்றங்களையும், அவ்வுயிருக்கும், அத்தோற்றத்துக்கும் உள்ள ஒற்றுமைகளையும் ஒரு மெய்யில் ஒருவிதமாகவும், மற்றொரு மெய்யில் இன்னொரு விதமாகவும் அத்தோற்றங்கள் ஏற்படுவதையும் கூர்ந்து நோக்கிக் கொள்வதும் வேண்டற்பாலதே.

எனவே, தமிழ் கற்போர் இலக்கணமும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதும், அதனால் மொழியறிவு விளக்கம் பெறுமென்பதும் இதுகாறும் கவனித்தவற்றால் விளங்குகிறது.

இரண்டாம் பாடம்

சொல்லிலக்கணத்தில் கவனிக்க வேண்டியவை.

சொல்லிலக்கணத்தில் கவனிக்க வேண்டிய சில முக்கிய அம்சங்களைப் பற்றியும் ஒரு கட்டளைக் கலித்துறைப்பா விதந்து கூறுகிறது. அது வருமாறு:–

" இருதிணை மூவிட நான்மொழி யைம்பா லறுதொகையேழ்
அருவழு வெட்டுரு பொன்பான் றொகாநிலை யாய்ந்தவெச்சம்
ஒருபது கோளெட்டு முப்பொழு தீரிட மோரியல்பாய்
வருமொழி மூன்று முணரச்சொல் வண்மை வருந்திருவே".

சொல்லில்:- திணை 2, இடம் 3, மொழி 4, பால் 5, தொகை 6, வழு 7, உருபு 8, தொகா நிலை 9, எச்சம் 10, பொருள்கோள் 8, பொழுது 3, வழக்கு 2, இயல்பாய் வருமொழி 3 ஆகிய இவற்றின் விவரந் தெரிந்திருப்பவர்களுக்குச் சொல் வண்மை அல்லது வன்மை ஏற்படும் என்பது அப்பாட்டின் கருத்தாகும். அவற்றின் விளக்கம் பின் வருமாறு:-

திணை 2:- உயர்திணை, அஃறிணை என்பன இரண்டு திணைகளாகும்.

இடம் 3:- தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன இடம் மூன்றாகும்.

மொழி 4:- பெயர், வினை, இடை, உரி ஆகியவை மொழி நான்காகும்.

பால் 5:- ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின் பால் என்பன பால் ஐந்து.

தொகை 6:- வேற்றுமைத் தொகை, வினைத் தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை என்பன தொகை ஆறாகும்.

வழு 7:- திணை வழு, பால் வழு, இடவழு, காலவழு, வினவழு, விடைவழு, மரபு வழு என வழுக்கள் ஏழு.

உருபு 8:- எழுவாய் வேற்றுமை, செயப்படுபொருண்மை வேற்றுமை, கருவி வேற்றுமை, முறை வேற்றுமை, ஒப்புமை வேற்றுமை, கிழமைவேற்றுமை, இடவேற்றுமை, விளி வேற்றுமை என்ற வேற்றுமைகளின் உருபுகள் உருபு 8 எனப்பட்டன.

தொகா நிலை 9:- வினைமுற்றுத் தொகாநிலைத் தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர், எழுவாய்த் தொடர், விளித் தொடர், வேற்றுமைத் தொகா நிலை, இடைத் தொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத் தொடர் இவ் வொன்பதும் தொகாநிலை.

எச்சம் 10:- பெயரெச்சம், வினையெச்சம், உம்மை யெச்சம், சொல்லெச்சம், பிரிநிலையெச்சம், எனவெச்சம், ஒழியிசை யெச்சம், எதிர்மறை யெச்சம், இசை யெச்சம், குறிப்பெச்சம் ஆகிய இவையே எச்சம் 10 என்று சொல்லப்படுவன.

பொருள்கோள் 8:- யாற்று நீர்ப்பொருள்கோள், மொழி மாற்றுப் பொருள்கோள், நிரனிறைப் பொருள்கோள், விற்பூட்டுப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள், அளைமறி பாப்புப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள், அடிமறிமாற்றுப் பொருள்கோள் என்று சொல்லப்படும் செய்யுளில் பொருள்கொள்ள வேண்டிய முறைகள் எட்டே பொருள்கோள் எட்டு என்று சொல்லப்படும்.

வழக்கு 2:- செய்யுள் வழக்கு, உலக வழக்கு என்ற இரண்டுமே வழக்கு 2 என்றும், சரிடம் என்றும் சொல்லப்படும்,

இயல்பாய் வருமொழி 3:- ஒரு மொழி, தொடர்மொழி, பொது மொழி என்பன மொழி மூன்றாகும்.

இவை தவிர பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற அறுவகைப் பெயரும், முறைப் பெயர், வினையாலணையும் பெயர், வினையடி, இடையடி, உரியடிப் பெயர்களும், இடுகுறி, காரணம், காரண விடுகுறி ஆகிய பெயர்களும் இன்னும் சில வகைப் பெயர்களும் பெயர்ச் சொல்லில் அறிய வேண்டும்.

தன் வினை, பிற வினை, செய்வினை, செயப்பாட்டுவினை, தெரிநிலை வினை, குறிப்பு வினை, ஏவல் வினை, முற்று வினை, எச்ச வினை, பெயரடி வினை, இடையடி வினை, உடன்பாட்டு வினை, எதிர்மறை வினை ஆகியவைகள் வினைச் சொல்லில் தெரிய வேண்டியவை.

வேற்றுமை-வினை-ஒப்பு-சாரியை ஆகிய உருபுகளும், இசை நிறை, அசை நிலை போன்றவைகளும் இடைச் சொல்லின் பகுதிகள்.

தவிர சொல்லின் உறுப்புகளாக நிற்கும் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் ஆகியவைகளும் தெரிந்திருப்பது நல்லது.

மேலே சொன்ன இவ்வெல்லா வகைகளையுமாவது தெரிந்திருந்தால்தான் சொல் தெரியும் எனலாம். இன்னும் பல நுட்பங்கள் சொல்லிலக்கணத்தில் மறைந்து கிடக்கின்றன.

எனவே, தமிழ் கற்போர் இவ் விலக்கணங்களையும் தெரிந்துகொண்டால்தான் மொழியறிவு நிலைபெறும்; வளம் பெறும்; இலக்கியங்களில் பொருள் அறிவு அடைய வழிவு தரும்.

"கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சோர்றேரிதல் வல்லார் அகத்து" — என்றார்

திருவள்ளுவப் பெருந்தகையார்.

எட்டாம் பாகம்

நாப்பழக்கப் பாடங்கள்

கவனிப்பு:

"சித்திரமுங் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் — நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம்"

என்றார் தமிழ் மூதாட்டி.

செந்தமிழ் நாப்பழக்கத்தால் ஆவதால், நாப் பழக்கத்திற்காக ஒரு பாகம் இந்நூலில் இணைக்கப்பட வேண்டியதாயிற்று.

நாப் பழக்கம் நாவின் சுழற்சிக்கான சில சொற்றொடர்களைத் திருப்பித் திருப்பிப் பல தடவை சொல்வதாலும், அவரவருக்குப் பிடித்தமான புத்தகங்களையும், இன்றியமையாது படித்துத் தீரவேண்டிய செய்தித் தாள்களையும் பிறருக்கு இடைஞ்சல் கொடாத வகையில் சத்தமிட்டு வாசிப்பதாலும் உண்டாகும்.

அதற்காக இப் பாகத்தில் இரண்டு பாடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. முதலாம் பாடத்தில் நாட்டில் பன்னெடுங் காலமாக வழங்கி வரும் சில சொற்றொடர்கள் போடப்பட்டிருக்கின்றன. அச் சொற்றொடர்களில் சில சொற்கள் இலக்கண வரம்புக்கு உட்படாதவைகள். அவற்றைத் திருத்தினால் ஓசை குன்றியும், தட்டியும் ஒலிக்குமாதலால், அப்படியே போடப்பட்டிருக்கின்றன. சில கருத்துத் திருத்தம் பெற்றிருக்கின்றன. நாப்பழக்கம் செய்ய விரும்புகின்றவர்கள் அவற்றைத் திருப்பித் திருப்பிச் சொல்லிப் பழகுவார்களாக. நாட்டில் வழங்கி வருபவைகள் இன்னும் அகப்பட்டால் அவற்றையும் அப்பியாசிக்கலாம்.

இரண்டாம் பாடத்தில் புத்தகங்களையும், செய்தித் தாள்களையும் வாசிக்கும் வகை சொல்லப்பட்டிருக்கிறது.

வசன நடை நூல்களையும், செய்தித் தாட்களையும் வாசிப்பவர்கள் கவனிக்க வேண்டிய தொன்றுண்டு. முதலில் அவற்றைப் பார்த்து எழுதவும், இரண்டாவது பிழையில்லாமல் வாசிக்கவும், மூன்றாவது அதில் சொல்லப் பட்ட சங்கதிகளைக் கற்றுக்கொள்ளவும், நான்காவது அதில் பயன் உள்ளவைகளைப் பொறுக்கியெடுக்கவும், ஐந்தாவதாக பயனுள்ள காரியங்களைச் செய்கையில் கொண்டு வரவும் முயல வேண்டும். பின் வரும் வெண்பா அதனைக் குறித்துக் கூறும்:—

"எழுதரிது முன்னம் எழுதிய பின்னர்
பழுதறவா சிப்பரிது பண்பாய் — முழுதுமதைக்
கற்பரிது நற்பயனைக் காண்பரிது கண்டாக்கால்
நிற்பரிது தானந் நிலை".

ஒன்றைப் படிக்க முன் வருபவர்கள் முதலில் அதைப் பழுதற - தெளிவு பெற - கேட்போர் காதில் இனிமையுற - பொருள் விளக்கமுற - வாசிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். சத்தமிட்டு வாசித்து வரும் பழக்கத்தால்தான் அந்நலம் முழுவதும் ஒருங்கே அமையும்.

முதலாம் பாடத்திற்கு "உலக வழக்கு நாப் பழக்கப் பாடங்கள்" என்றும், இரண்டாம் பாடத்திற்கு, "வசன நடைத் தொடர்களை வாசிக்கும் வகை" யென்றும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

முதலாம் பாடம்

உலக வழக்கு நாப் பழக்கப் பாடங்கள்

1. ஒன்பது நரியிலே ஒரு நரி கிழநரி
கிழ நரி பிடரியில் ஒருபிடி நரை மயிர்.

2. கிழவன் உழுத புழுதியிலே
கிண்டியெடுத்த பனையோலை,
கீழேழோலை, மேலேழோலை.

3. காட்டோரம் பரட்டை மரம்
பதக்குப் பதக்குப் பூப்பூக்கும்
பறித்து வாடா பாட்டாளி
உனக்குமெனக்குப் பூத்தாரேன்.

4. குயவன் உதடு குடத்துதடு
குயவன் செய்த குடத்துதடு.

5. கன்று முப்பது கயிறு முப்பது - கன்று கட்டுகிற
தும்பு முப்பது - ஏர் முப்பது எருது முப்பது
எருது கட்டுகிற தும்பு முப்பது.

6. புட்டுச் சுட்டுப் புட்டியிலே போட்டு - புட்டைக்
கொடுத்தேன் - புட்டைக் கொட்டிக் கொண்டு
புட்டியைத் தாடா.

7. சோளத் தோசை தீய்ந்த தோசை
சுட்டெடுத்தால் எட்டுத் தோசை.

8. சோறுஞ் சோளச் சோறு - சாறுங் கீரைச்சாறு.

9. பாக்கும் பழம் பாக்கு - பூட்டும் புதுப் பூட்டு.

10. மலையிலே மலைச் சரிவிலே - புலி உருளுது புரளுது.

11. ஓடும் புது ஓடு கூழும் சுடு கூழு
ஊற்றிப்போட் டாற்றிக்குடி.

குறிப்பு:- மேற்கண்ட நாப் பழக்கத்திற்குரிய சொற்றொடர்கள் பழைமையும், சாதாரணமானவையுமாயினும், வெகு துரிதமாய்ச் சொல்லிப் பழகுவதால் நாவன்மையை நனி நல்குவதாகும்.

இரண்டாம் பாடம்

வசன நடைத் தொடர்களை வாசிக்கும் வகை

வசன நடைத் தொடர்களை நாப் பழக்கத்திற்காகப் பயன்படுத்துமிடத்து, அவை புத்தகமானாலும் சரி, செய்தித் தாளானாலும் சரி பின் வரும் விதிகளைக் கவனித்து வாசிக்க வேண்டும்.

1. வேகமாக வாசிக்காமல், நிறுத்தி வாசிக்க வேண்டும்.

2. எவ்வளவு சத்தம் இயல்பாய் வருமோ அவ்வளவு சத்தத்துடன் வாசிக்க வேண்டும்.

3. ஒவ்வொரு எழுத்தின் ஒலியும் தொனிக்கும்படி வாசிக்க வேண்டும்.

4. வார்த்தையோ, வார்த்தையின் பாகமோ விழுங்கப் படாமல் ஒலிக்கும்படி படிக்க வேண்டும்.

5. பொருள் விளக்கமாகக் கூடிய விதத்தில் சேர்த்து வாசிக்க வேண்டிய வார்த்தைகளைச் சேர்த்தும், பிரித்து வாசிக்க வேண்டிய வார்த்தைகளைப் பிரித்தும் வாசிக்க வேண்டும்.

இவ்வாறு வாசித்துப் பழகி வந்தால் நா நல்ல பயிற்சி யடைந்து விடும். பின்பு எம்மாதிரியான நூல்களையும், பத்திரிகைகளையும் தடையின்றி வாசிக்கக்கூடும். பிறருக்கு எடுத்துச் சொல்லும்போது கேட்போர் பிரியத்துடன் கேட்டு மகிழ்வர்; மனதில் கொள்வர்; காரியத்தில் இறங்குவர்.

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

அறிவினாக்களும், அப்பியாசங்களும்

கவனிப்பு:

இந்நூல் எட்டுப் பாகங்களாக அமையப்பெற்றிருக்கிறது. ஒவ்வொரு பாகத்திலும் சில பாடங்கள் அமைந்திருக்கின்றன. அவ்வொவ்வொரு பாடத்திலும் தமிழ் மொழியின் அமைப்புகள் வெளிப்படும் சொற்களும், சொற்றொடர்களும் பொருந்தியிருக்கின்றன. கருத்துச்செலுத்திப் படிப்பவர்கள் மொழியுணர்ச்சியிலும்—அறிவிலும் வளர்ச்சியடைவது திண்ணம்.

ஒரு நூலைக் கற்பவர் அதை ஒரு முறை படித்தால் போதாது. இரண்டுமுறை மூன்று முறை படிக்கவேண்டும். ஆசிரியரிடம் நூல் கேட்பவர்களே அவ்வாறு படிக்க வேண்டுமென்று †நன்னூல் கூறுகிறது. ஆசிரியர் உதவியில்லாமல் படிப்பவர்களோ இன்னும் பல முறை படிக்க வேண்டியிருக்கும் என்பது சொல்லாமலே விளங்கக் கூடியது.

அவ்வாறு படித்தவர்கள் அந்நூலின் பொருளைச் சரியாய் அறிந்து கொண்டார்களா என்று தெரிந்து கொள்ளக் கேள்வி கேட்பது வழக்கம். அவ்வகை வினாக்களுக்கு அறிவினாக்கள் என்று பெயர். வினாக்களுக்கு சரியான விடை சொல்ல - எழுதக் கூடியவர்களானால் தான் அவர்கள் அந்நூலைக் கற்றவர்கள் என்று மற்றவர்கள் கருதக்கூடும். அப்பியாசங்கள் செய்யவும் தெரியவேண்டும். பாகம் பாகமாக வினாக்களும், அப்பியாசங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் வினாக்கள் உண்டாக்கி விடையளிப்பது விருத்திக்கு அறிகுறி.

---

†"ஒருகுறி கேட்போன் இருகால் கேட்பின்
பெருக நூலில் பிழைபா டிலனே."
"முக்கால் கேட்பின் முறையறிந் துரைக்கும்.

முதற் பாகம்

1. தமிழ் நெடுங் கணக்கில் மொத்தம் எத்தனை எழுத்துக்கள் உள?
2. அவற்றுள் முதலெழுத்துக்கள் எத்தனை? சார்பெழுத்துக்கள் எத்தனை?
3. சார்பெழுத்துக்கள் ஒலிவடிவாலும், வரிவடிவாலும் முதலெழுத்துக்களை ஒத்திருக்கின்ற விதத்தை விளக்குக.
4. ஒலிவடிவுக்கு முதலெழுத்துக்களே காரணம். முதல் எழுத்துக்கள் முப்பது இருக்கின்றன. ஒலியும் முப்பது இருக்கவேண்டும். சிலர் தமிழ் ஒலி 28 தான் என்கின்றனர். என்ன காரணங் கூறுகின்றனர்?
5. வரி வடிவங்கள் 247 இருக்கின்றன. உருவபேதங்கள் 50 தான் என்று இந்நூலாசிரியர் குறிக்கிறார். எப்படி?
6. எழுத்துக்களை உச்சரிக்கையில் என்ன விஷயம் கவனிக்கப்பட வேண்டும்?
7. பண்டைக் காலத்தில் எழுத்துக்களை உச்சரித்த வகைக்கும் இக்காலத்தில் சில, பல பாடசாலைகளில் உச்சரிக்கும் வகைக்கும் வித்தியாசமென்ன? எது நல்லது? எது தமிழ் மரபு?
8. எழுத்துக்களை எழுதும்போது கவனிக்க வேண்டியவை என்னென்ன?
9. முதலில் எழுதும்போது எத்தனை கோடுகள் போட்டுக் கொள்ள வேண்டும்?
10. தமிழ் எழுத்துக்களின் உடலை மட்டும் அமைக்க எத்தனை கோடுகள் தேவையாயிருக்கும்?
11. அம் மூன்று கோடுகளில் மத்திக்கோடு எந்தெந்த எழுத்துக்களின் எந்தெந்தப் பாகத்துக்கு உதவும்? உதாரணத்துடன் எழுதுக.
12. கையெழுத்துக் கெடுவது எந்தப் பழக்கத்தினால்?
13. கடைசியாக எத்தனை கோட்டில் எழுதக்கூடும்?

இரண்டாம் பாகம்

1. எழுத்துப் பிழைகள் எத்தனை வகைப்படும்?
2. அவற்றின் பெயர்களையும், பொருத்தத்தையும் உதாரணத்துடன் விளக்கிக் கூறுக.
3. தமிழ் எழுத்துக்கள் 247 ஐயும் நன்கு கற்றுக் கொள்வதால் மட்டும் எந்த இரண்டு வகைப் பிழைகள் தானாகவே நீங்கிவிடும்?
4. குறில், நெடில் வேறுபாடு அறியாப் பிழையை நீக்கும் பாடம் எது?
5. மொழிக்கு முதலில் வரக்கூடிய எழுத்துக்கள் 103ஐயும் நெடுங் கணக்கு வரிசை முறையில் விபரங் கொடுத்து எழுதுக.
6. மொழிக்கு முதலில் வரக்கூடாத எழுத்துக்களை இட்டுச் சிலர் எழுதிவிடுகிறார்கள். அவற்றில் நினைவி-லிருக்கிறவை சிலவற்றைக் குறிக்க.
7. மொழிக்கு இறுதியில் வரக்கூடிய எழுத்துக்கள் எத்தனை? அவை எவை?
8. இ, ஐ என்ற உயிர் எழுத்துக்களும், ம், ல் என்ற மெய்யெழுத்துக்களும் இறுதியில் வரும் சொற்கள் வகைக்கு இரண்டிரண்டு எழுதுக.
9. மொழியின் இடையில் ண், ஞ், ப், ன் இவைகளுக்குப் பின் எவ்வெழுத்துக்கள் வரும்?
10. ரகர, றரகங்களில் ஒன்றுக்குப் பதில் இன்னொன்றைப் போட்டு விடுவதால் ஏற்படும் அர்த்த பேதத்துக்கு, பத்துக்குக் குறையாத உதாரணங்கள் கொடுக்க.
11. அவ்வாறே ளகர, ழகர மாறுபாட்டுக்கு ஐந்தாறு உதாரணங்கள் வரைக.
12. லகர, ளகர, ழகர மாறுபாட்டுக்கும் மூன்று நான்கு உதாரணங்கள் எழுதுக.
13. ணகர, னகர மாறுபாட்டுக்கும் அதேபோல் கொடுக்க.

மூன்றும் பாகம்

1. சொற் பிழைகள் இத்தனை வகைப்படும் என்பதை அவ்வப் பெயருடன் விளக்குக.

2. எழுத்துப் பிழைகளுக்கும், சொற் பிழைகளுக்கும் உள்ள பேதம் என்ன?

3. பேச்சு வழக்கில் - உருமாறி வழங்கும் சொற்களின் மெய் வடிவம் காண என்ன முயற்சி வேண்டும்?

4. இப் புத்தகத்தில் எடுத்துக் காட்டியிருக்கும் மரூஉச் சொற்களையும், அதன் மெய் வடிவங்களையும் மனதில் வைத்துக்கொண்டு காட்டப் பெறாத பின் வரும் சொற்கள் பேச்சு வழக்கில் உரு மாறியிருக்கும் விதங்களை எழுதி, உடனே கலைத்து விடுக:— நாய் குரைக்கும், கூரை வேய்ந்தார், இடையன், உதடு, உலக்கை, விழிக்கிறான், மீசைக்காரன், அன்பு, ஆற்றுக்கு, கன்றுக்குட்டி, வெற்றிலை, உழவு, நேற்று, புகையிலை, உரல், உரல் பெட்டி, உடைந்து போயிற்று, பற்று வரவு, வரவு செலவு, கூடுதல் குறைச்சல், மண் வெட்டி, உலரவை, இழவு வீடு, குதிரை வாலி, துவரம் பருப்பு, மொச்சைப் பயறு, சாமைக்கதிர், கார்காத்த வேளாளர், தண்ணீர், சுளகு, குடம், கலியாணம், விளக்குமார், கயிறு, போக்கிலிப்பயல், மருதோன்றி, உரம், சிவகாசி, செம்மறியாடு, விடை, எலுமிச்சம்பழம், சுரைக்காய், கற்றாழை, பூவரசமரம், இளநீர், மதுரை, குதிரை, இடைவழி, இறங்கு, காற்றாடி, தெற்குத்தெரு, திறவுகோல், விசிறி, தலையணை, பெண்பிள்ளை, கிழவன், கிழவி, முழங்கால், முற்றிப்போயிற்று, யானை, குளம், குதிகுழம்பு, குத்திப்பொறுக்கும், அலரிப்பூ, எருக்கன்பூ, மஞ்சள், பன்றி, சேவல், சோற்றுப்பானை, இருநூறு, எழுநூறு, அறுநூறு, நாற்காலி, மழை பெய்தது, முயல்குட்டி, சாப்பிட்டாயிற்று, எழுந்திரு, இரைபோடு.

நான்காம் பாகம்

1. சந்திப் பிழை என்றால் என்ன?

2. உயிர்மெய்யெழுத்துக்கள் 216ம் ஒவ்வொன்று இரண்டிரண்டு எழுத்துக்கள் சேர்ந்ததல்லவா? அவைகளை யெல்லாம் பிரித்துப் பிரித்து எழுதுக.

3. ஒரு புணர்ச்சி உயிரீற்றுப் புணர்ச்சியா, மெய்யீற்றுப் புணர்ச்சியா என்று தெரிந்துகொள்ள உதவியாய் இருப்பது உயிர்மெய் யெழுத்துக்களைப் பிரிக்கும் பயிற்சியே. பின்வரும் சொற்களை முதல் எழுத்துக்களால் எழுதி, உயிரீற்றுச் சொல்லை வேறாகவும், மெய்யீற்றுச் சொல்லை வேறாகவும் பிரித்துக் காட்டுக:- கோவில்பட்டி, வெண்ணெய், கற்றுக்கொண்டு, புணர்ச்சியிலக்கணம், பாற்பானை, சங்கு.

4. இயல்புப் புணர்ச்சிக்கு - வினையெச்சத் தொடர்கள், பெயரெச்சத் தொடர்கள், வினைமுற்றுத் தொடர்கள், ஆறும் வேற்றுமைத் தொடர்கள் - இவைகளிலிருந்து மும்மூன்று உதாரணங் கொடுக்க.

5. விகாரப் புணர்ச்சியில் - தோன்றலுக்கு - உயிரீறு, யகரவீறு, ரகரவீறு, ழகரவீறு ஆகிய தொடர்களிலிருந்து வகைக்கு அவ்வாறு உதாரணங் கொடுக்க.

6. விகாரப் புணர்ச்சியில் - கெடுதலுக்கு - பத்து உதாரணங்கள் வரைக.

7. விகாரப் புணர்ச்சியில் - திரிதலுக்கு - பல்வகைகளிலிருந்து ஒவ்வொரு உதாரணம் தருக.

8. பின்வருவனவற்றைப் புணர்த்திக் காட்டுக:- பல் + ஆடு; பால் + ஆடு; கல் + அண்டை; கால் + அண்டை.

9. பின்வருவனவற்றைப் பிரிக்க:- நற்றாமரை, கற்றான், செங்கோன்முறைமை, மன்னற்கு, நன்மரம், வெண்ணெய், எண்ணெய், கைப்பொருடன்னின், பொருடனை, அஃதன்றி, இவ்வூர், தண்டாமரை, சொற்றொடர், மணற்கேணி, நாற்காலி.

ஐந்தாம் பாகம்

1. வாக்கியம் என்றால் என்ன?
2. வாக்கியத்தின் உறுப்புகள் யாவை?
3. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இவைகளைத் தழுவி வரும் சொற்களுக்கு என்ன பெயர் கொடுக்கலாம்?
4. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்று வாக்கியத்தில் பெயர் பெறுபவை, சொல் நிலையில் அவைகள் என்னென்ன பெயர் பெறும்?
5. எழுவாய்களில் எத்தனை வகையுண்டு? ஒவ்வொன்றுக்கும் பெயர் கொடுக்க.
6. தோன்றா எழுவாய் என்பது எப்படியிருக்கும்? உதாரணங் கொடுத்து விளக்குக.
7. செயப்படுபொருள்களை எத்தனை வகையாய்ப் பிரிக்கலாம்? அவ்வொவ்வொன்றின் பெயரையும் எழுதுக.
8. பயனிலையில் எத்தனை வகையுள? அவைகளின் பெயர்களைக் குறிக்க.
9. வாக்கியங்கள் எத்தனை வகைப்படும்? அவற்றின் பெயர்கள் என்னென்ன?
10. ஒவ்வொரு வகை வாக்கியத்திற்கும் ஒவ்வொரு உதாரணம் எழுதுக.
11. வாக்கியப் பிழையென்பது எப்படியிருக்கும்?
12. வாக்கியப் பிழை யேற்படாமல் எழுத என்னென்ன கவனித்துக்கொள்ள வேண்டும்?
13. இப்புத்தகத்தில் வாக்கியப் பிழைகளைப் பற்றி ஏன் விரிவாய்க் கூறப்படவில்லை?
14. முற்காலங்களில் தமிழ் நூல்கள் வசன நடையில் செய்யப்பட்டனவா, செய்யுள் நடையில் செய்யப் பட்டனவா?

ஆறாம் பாகம்

1. எழுத்துக்கும், சொல்லுக்கும் வித்தியாசம் என்ன?
2. சொற்கள் எத்தனை வகைப்படும்? அவற்றின் பெயர் வரைக.
3. அவைகளில் எவ்வெச் சொற்கள் முக்கியம்?
4. பெயர்ச் சொற்கள் எத்தனை வித மாறுதல் அடையும்?
5. வினைச்சொற்கள் எத்தனை வகைகளில் மாறுதலடையும்?
6. சாதாரணமாக வினைச் சொற்கள் அடையும் மாறுதல்களை எத்தனைக்குள் அடக்கலாம்?
7. என்ன விதியைக் கடைப்பிடித்தால் கூடியவரை எல்லாப் பெயர்ச் சொற்களும், வினைச் சொற்களும் அடையும் மாறுதல்களைக் கண்டுபிடித்து விடலாம்?
8. இந் நூலில் அவ் விதியைக் கடைப் பிடித்து உதாரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால், ஒவ்வொரு உதாரணத்தின் அடியிலும் அப்பியாசத்துக்காகப் போடப்பட்டிருக்கும் சொற்களை விகற்பித்துச் சொல்லியும், எழுதியும் பார்க்க. மேலும் அவ்வாறு பொறுக்கி அப்பியாசிக்கலாம்.
9. வினைச் சொற்கள் பலவித விகற்பங்களுடன் வந்தால் மொத்தம் ஏறக்குறைய எத்தனை உருவங்களில் ஒவ்வொன்றும் தோன்றும்?
10. அருஞ் சொற்களுக்கு அகராதி கொண்டேனும், ஆசிரியரைக் கேட்டேனும் அர்த்தம் தெரிந்து கொண்டால், அவ்வொரு உருவத்தின் அர்த்தம் மட்டும் அறிந்துகொண்டால் போதுமா? எல்லா விகற்பங்களிலும் அச் சொல்லுக்கு அர்த்தம் தெரிந்துகொள்ள வேண்டுமா?
11. ஒருவர் 100 சொற்களையேனும், அதனதன் பிறப்பு, உருமாற்றம் முதலிய பல்வேறு வடிவங்களுடன் தெரிந்துகொண்டால் தமிழறிவு விருத்தியாகுமென்று சொன்ன பெரியாரின் வாக்குச் சரியென்று இந் நூலைக் கற்று, அப்பியாசம்செய்து வந்ததிலிருந்து விளங்கிற்றா?

TAMIL NADU ARCHIVES LIB
111947

ஏழாம் பாகம்

1. நம் மொழியில் வேறுமொழிகளில் இல்லாத இலக்கணம் ஒன்று இருக்கிறது. அது எது?
2. வடமொழியில் என்ன என்ன இலக்கணம் குறைவு?
3. எழுத்திலக்கணம், சொல் லிலக்கணம் இவைகளில் கவனிக்க வேண்டியவை சில போடப்பட்டிருக்கின்றன. அவற்றில் எவையெவை பாடங்களில் இலைமறைகாய் போல் காணப்படுகின்றன? எவையெவை பாடங்களில் தோன்றுதவை?
4. இலக்கண பாடம் கடினம் என்போர் கூற்று சரியா?
5. இப்புத்தகம் இலக்கணம் கற்பிக்க ஏற்பட்டதல்லவாயினும், இலக்கணம் பற்றிய குறிப்புகள் வரையக் காரணம் என்ன?

குறிப்பு:- இலக்கண பாடங் கேட்க விருப்பமுள்ளோர், இனி நாங்கள் வெளியிடவிருக்கும் "இலக்கணத் திறவுகோல்" என்னும் புத்தகத்தை வாங்கிப் படித்துத் தெளிவு அடையலாம்.

T:3 (P31)

எட்டாம் பாகம்

NUS

1. நாப்பழக்கம் பற்றிக் கூறியிருக்கும் சிறப்பு என்ன?
2. வாசிப்புக்கு அமைய வேண்டிய அம்சங்கள் எவைகள்?
3. நாப் பழக்கத்திற்காகப் போடப்பட்டிருக்கும் சொற்றொடர்களை எவ்வாறு சொல்லிப் பழகினால் நா திருத்தமடையும்?
4. நூல்களையேனும், செய்தித் தாட்களையேனும் படிப்பவர்கள் அவற்றை என்னென்ன முறையில் படிக்க வேண்டும்?
5. சத்தமிட்டு வாசிக்க வேண்டும். ஆனால், என்ன கவனித்துக்கொள்ள வேண்டும்?

குறிப்பு:- நூற்றுக்கு நூறு அம்சம் எடுப்பவரே தேர்ந்தவராகக் கருதப்படுவார்.

இப் புத்தகம் கிடைக்குமிடம்:

மானேஜர்,

பால குருகுல வித்யாலயம், விருதுநகர்.

Ananda Press, Virudhunagar. Q.H.R.49. C 1000 Dec.'47.